ம்பத்துடன் களிக்க...

கல்கி

KALKI 4.12.2005 ரூ.7.00

96 பக்கங்கள்

சக்தி அற்றவர்கள்!”





சிக்கலில் சினேகா!





தமிழ்நாடு பிராமணர் சங்கம்

THAMBRAAS

வெள்ளி விழா மாநில மாநாடு

நாள்	:	சனிக்கிழமை மற்றும் ஞாயிறு
தேதிகள்	:	24.12.2005 & 25.12.2005
இடம்	:	அண்ணா நகர் - சென்னை

SILVER JUBILEE CELEBRATIONS
25 YEARS
தமிழ்நாடு பிராமணர் சங்கம்

**அழுத பிள்ளைதான் பால்
குடிக்கும்! கூட்டம் கூடி ஒருமித்த
குரல் கொடுத்தால்தான்
இன்றைய அரசியலமைப்பின்
கவனம் நம் பக்கமும் திரும்பும்!!
எங்களுக்கும் தாருங்கள்
என்பதே நமது வேண்டுகோள்!!!**



**லட்சக் கணக்கில்
திரண்டு வாரீர்!
ஒன்றுபடுவோம்!
வெற்றி பெறுவோம்!**

**காலத்தின்
கட்டாயம்!
தலைவரின்
வேண்டுகோள்!!**

மாநிலத் தலைவர் அலுவலகம்
245/6, ஆர்.கே.மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை-600 004.
போன்: 24642569 பேக்ஸ்: 24943989, இணைய தளம் : www.thambraas.com

நன்கொடைகள் ஏற்கப்படுகின்றன


வாரம்
முழுவதுக்குமான
வைட்டமின்...
சக்தி...
ஞாயிறு காலை
கடைகளில்
கிடைக்கும்...
கல்கி

கல்கியின் கருத்துப்படங்கள் கருத்தோட்டங்கள்; தலையங்கம் - நாட்டின் பேசும் படம்!
பெருமாத்தூர், நெ. சங்கராபரணி.

தலையங்கம் படித்தேன். நட்வர்சிங் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டால் அவருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் மட்டுமின்றி 'நல்ல பிரதமர்' என்ற இமேஜ்



தாக்கு பத்து ஜோக்கு பத்து!



உள்ள மன்மோகன்சிங்குக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது.
மதுரை, என். பாலகிருஷ்ணன்

கல்வி என்பது பொதுவானது. அதை எல்லோருக்கும் அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. பாலின பேதம் இல்லாமல் பொதுவான சலுகைகள் அறிவிப்பதே சமுதாய வளர்ச்சிக்கு நல்லது.
சென்னை, ஆர். நாகராஜன்

ஓர் இசைப் பேரரசிக்குள் இப்படியொரு எளிமையா? மென்மையா?
கிழவனேரி, செ. சத்தியசீலன்

பார்த்திபன்கூட வடிவேலுவை இந்த அளவுக்கு வாரியிருக்க மாட்டார். பரமுவின் பத்துக் கேள்வியும் செம தா(ஜோ)க்கு!
குமாரபாளையம், 'காசி'. சக்திவேலன்

பறவைக் காய்ச்சல் கட்டுரையைச் சரியான நேரத்தில் வெளியிட்டுள்ளீர்கள். மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதில் கல்கியின் பாணியே தனிதான்.
கல்பூண்டி, பூ. சீனிவாசன்

20.11.2005 ஞாயிறு கல்கி 13.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலையிலேயா? அதிசயம் தொடருமா?
சென்னை, ஜே. துரைராஜ்



✉ அமரர் கல்கியின் இசைக் காவியமும் கோபுலுவின் ஓவியங்களும் தியாகராஜ உற்சவ நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் சுகம் தருகின்றன.

சென்னை, ஈரோடு டி. சௌந்தரராஜன்

✉ இளமை கல்கி பகுதியில் 'இரேஸி' மோகனின் இளமொழிகள் எல்லாமே டாப் அதிலும் 'இடுக்கண் வருங்கால் நகர்க' டாப்மோஸ்ட்!

ஈரோடு, ரேவதிப்ரியன்



✉ 'சிவகாசி'யில், விஜய் ஆங்காங்கே உதிர்க்கும், தத்துவ முத்துகளின் அலங்கரிப்பை, குறைக்கவும் சொல்லியிருந்தால், விமர்சனம் 'நச்' என்று இருந்திருக்கும்.

கரூர், எம். சம்பத்

✉ ஐ.ஐ.டியிலும், ஐ.ஐ.எம்மிலும் படிக்க விரும்பினால், சக்கையையெல்லாம் விட்டு விட்டு சப்ஜெக்டோட எஸன்ஸைப் புரிஞ்சுகிட்டுப் படிக்கணும் என்கிற ஆலோசனை மாணவர்களுக்கு வழிகாட்டும்.

சென்னை, ஜி. ஜெயலெட்சுமி



✉ 'அய்யா! - அம்மா! ஆயிரம் வித்தியாசங்கள்' படித்து வயிறு வலிக்கச் சிரித்துவிட்டேன். கற்பனையே ஆனாலும் நூறு சதவிகிதம் உண்மை!

திருச்சி, இரா.கு. பிரகாசம்

✉ 'புலம்புகிறான் ஒரு பெண்டாட்டி' மத்திய தர வர்க்கத்துக் குடும்பத்தின் யதார்த்தமான நிகழ்வு. காரணம் படுதலம் சுகுமாரனின் ராஜனைப் போல் நானும் ஒருவன். Marriage is a short word, but it is a long sentence (இந்த வார்த்தைக்குத் தண்டனை என்றும் பொருளுண்டு)

சென்னை, நேமத்து ஞானம்

✉ பல்வேறு உணர்ச்சிகளின் சங்கமமாய் மின்னியது 'புத்த சாகரம்'. ஒரு நல்ல வரலாற்றுச் சிறுகதை படித்த நெகிழ்ச்சி ஏற்பட்டது.

கோவை, ராமு அர்விந்த்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்கஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன், மு.மாறன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22251522, 22250623, 22251324

தொலைநகல் : 044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

வருடத்துக்கு ஒருமுறை ப்ரஸ்மீட் வைத்து 'எனக்கொன்றும் திருமணம் இப்போதைக்குக் கிடையாதுங்க, ப்ளீஸ்' என்று பத்திரிகையாளர்களிடம் கெஞ்சுவது சினேகாவுக்கு அவசியமாகிவிட்டது!

இதுவரை நடித்த படங்கள் எதுவும் பிரமாதமாக ஓடவில்லை. ஆனால் கிசுகிசுக்களாலும் சர்ச்சைகளாலுமே வெளிச்சத்துக்கு வரும் சினேகாவின் லேட்டஸ்ட் குபீர் - துபாய் தொழிலதிபர் நாகாரவியுடன் திருமணம்!

துபாயில் சாட்டிலைட் இன்ஜினியரான நாகாரவிக்கு சினேகாவின் அண்ணன் நண்பர். இந்த உறவில் சினேகாவும் பழக்கமாக, அருகருகே அமர்ந்து புகைப்படம் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு நட்பு வளர்ந்திருக்கிறது. இவர்களிருவரும் பர்சனலாக எடுத்துக் கொண்ட படங்களை யாரோ ஒரு புண்ணியவான் இணைய தளத்துக்கு அனுப்பி வைக்க, சினேகாவை சம்பந்தப்படுத்தி மீண்டுமொரு சர்ச்சை, மீண்டுமொரு தன்னிலை விளக்க ப்ரஸ்மீட். கண்ணீர், கர்ச்சிப்!

"க்ராஃபிக்ஸ் உதவியுடன் படங்களை இணைத்திருக்கிறார்கள். இது பற்றி போலீசில் புகார் செய்வேன்" என்று ஆரம்பத்தில் சூளுரைத்தார் சினேகா.

"எல்லாமே ஒரிஜினலான படங்கள். சினேகா சொல்வது போல் ஒட்டுப் போட்ட படங்களல்ல. ஆனால் எங்களுடைய பர்சனல் படங்களை யார் இணையதளத்துக்கு சப்ளை செய்தது என்று போலீஸ் மூலமாகக் கண்டு பிடிக்கப் போகிறேன்" என்று சினேகாவின் 'திடீர்' ஹீரோவான நாகாரவியும் துபாயிலிருந்து பேட்டியளிக்க, விவகாரம் சூடு பிடித்தது.


"ஒன்றும் தேவையில்லை. போலீஸ் அது இது என்று நம்மீது நாமே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ள வேண்டாம்" என்று இரு தரப்பினரையும்(!) சினேகாவின் தந்தை ராஜாராம் தடுத்து நிறுத்தி, மையம்கொண்ட புயலை பலவீனப்படுத்தியிருக்கிறார்.



வலையில் சிக்கிய சினேகா!

இதற்கு நடுவே, இவ்விவகாரம் பற்றிப் பேசியிருக்கும் நாகாரவி, தன் பங்குக்கு புது குண்டை வீசியுள்ளார்.

"சினேகாவுக்கு எதிராக நடப்பதையெல்லாம் பார்க்கும்பொழுது, யாரோ அவருக்குப் பின்னாலிருந்து குழிப்பறிப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது சினேகாவுக்கு தெலுங்கில் ஏறுமுகம். அவரை மட்டுமல்ல, தமிழிலிருந்து யார்யாரெல்லாம் தெலுங்குத் திரையுலகம் நோக்கிச் செல்கிறார்களோ



அவர்களுக்கெல்லாம் இதே கதிதான் நேர்கிறது. இதற்கு முன்பு சிம்ரன், த்ரிஷாவுக்கும் இதுபோல நடந்திருக்கிறது. இப்பொழுது சிநேகாவுக்கு" என்று துபாயிலிருந்து ஒரு ஆய்வுக் கட்டுரையை வாசித்திருக்கிறார்.

"என் வளர்ச்சியைத் தடுக்கவே இதுபோன்ற சதி பண்ணுகிறார்கள்" என்கிறார் சினேகா.

சமீபகாலமாக தமிழ்த் திரையுலகில் நடக்கும் சேறடித் தாக்குதல்களைப் பார்க்கும்போது அரசியலே தேவலாம் போலிருக்கிறது!

- பப்பி



புக் ஷாப்

"வாவ்...வாவ்... அருமை...சூப்பர்" தனது தலையை 'ரிதமிக்காக' ஆட்டி ஆட்டி பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தாள் ஸ்ரேயா.

"ஹலோ மேடம், நீங்க படிக்கறீங்களா, இல்லை பாடறீங்களா?"


"படிச்சுக்கிட்டே பாடறேன், பாடிக்கிட்டே படிக்கிறேன்."

"அப்படி என்ன புக் அது?" என்று அவள் கையிலிருந்த புத்தகத்தை 'வெடுக்' என பிரித்து அட்டையை மேய்ந்தான் வசந்த். "தமிழோவியம். ஈரோடு தமிழன்பன். என்ன, கவிதைத் தொகுப்பா?"


"இல்லை பாடல்கள். நாமளும் படிக்கலாம். குட்டீஸூம் படிச்சு நல்லா என்ஜாய் பண்ணலாம். குதிச்சுக்கிட்டே பாடலாம். மியூசிக்கலா இருக்கு. லைக் திஸ்... 'ஒருகடல் அலைகள்நாம். ஒரு வான் பறவைகள்நாம். ஒருமழைத் துளிகள்நாம். ஒற்றுமையின் சரிதம் நாம்.'

"ஓகே, நான் இதை எடுத்துட்டுப் போறேன். நீ இந்த புக்கைப் படி" என்று வீரப்பாண்டியன் எழுதிய மக்களின் மனிதன் புத்தகத்தை எடுத்து நீட்டினான் வசந்த். "தோழர் நல்லகண்ணுவை பத்தின கலெக்ஷன். பொன்னீலன், பீட்டர் அல்போன்ஸ், தி.க.சி., சி. மகேந்திரன்... இப்படி நிறைய பேர் எழுதியிருக்காங்க. அதோட நல்லகண்ணுவோட இன்டர்வியூவும், அவங்க மனைவி ரஞ்சிதம் அம்மையார்கிட்ட சுபவீ எடுத்த இன்டர்வியூவும் இருக்கு. வித்தியாசமான முயற்சி. 'புக்ல போடணும் உங்க ஃபோட்டோ கொடுங்க'ன்னு சுபவீ கேட்டப்போ நல்லகண்ணு 'அது எங்கே கெடக்கோ?'ன்னாராம்."

"அவரை மாதிரி சிம்பிளா இருக்கிறது சிம்ப்ளி இம்பாஸிபிள். கட்டாயம் நான் இதைப் படிக்கணும்" என்றபடி புத்தகத்தை ஆவலோடு வாங்கிக் கொண்டாள் ஸ்ரேயா. 'பை தி வே, நீதியரசர் ஜஸ்டிஸ் ஏ.ஆர். லெட்சுமணனோட ஆங்கில உரைகளை தமிழில் மொழிபெயர்த்திருக்காங்க. நேத்துதான் படிச்சேன். புக் பேரு நீதியின் குரல். தலைப்பைப் பார்த்தவுடனே லீகல் இஷ்யூஸ் பத்தித்தான் பேசியிருப்பார்னு பார்த்தேன், ஆனா மனித உரிமைகள், தமிழிசை, கண்ணதாசன்... இப்படி வெரைட்டியா நிறைய டாபிக்ஸ் தொட்டிருக்காரு. 'எல்லா கைதிகளோட கையிலயும் விலங்கு மாட்டுறது தப்பு, அவங்களோட அடிப்படை உரிமைகளை மதிக்கணும்' 'வழக்குகளை சீக்கிரமா விசாரிக்கணும்' 'நாம பேராசைப் படாமல் இருந்தால் சிறைச்சாலைகளே தேவையிருக்காது'ன்னு சொல்லியிருக்காரு."







தமிழோவியம், *ஈரோடு தமிழன்பன், பூம்புகார் பதிப்பகம், 126 (பஎண்.63) பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை - 108. தொ. 5267543, பக்கம் 156, விலை 70/-*

மக்களின் மனிதன், *வீரப்பாண்டியன், தூரிகை பதிப்பகம், 28, ஐந்தாவது முதன்மைச் சாலை, கஸ்தூரிபாய்நகர், அடையாறு, சென்னை - 20. தொ.24417662, பக்கம் 128, விலை 60/-*

நீதியின் குரல், *டாக்டர் ஜஸ்டிஸ் ஏ.ஆர். லெட்சுமணன், வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17. தொ.24342810, பக்கம் 240, விலை. 80/-*

விடுதலை சிறுத்தைகள் இயக்கம் தற்போது தமிழ் - குஷ்பு - சுஹாசினி என்று நாளுக்கு நாள் பரபரப்பாக பதினாறுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்க, சக தலித் அமைப்பான புதிய தமிழகமோ அன்ன நடைகூடப் போடாமல் அமைதியாக இருக்கிறது. இந்த நிலையில் துரை அரசன் என்பவரது தலைமையில் தற்போது அக்கட்சி பிளவுபட்டிருக்கிறது. இதன் துவக்கவிழா மாநாட்டில் பா.ம.க தலைவர் ஜி.கே. மணி மற்றும் திருமாவளவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டது சந்தேக விதையைத் தூவியிருக்கிறது. இந்நிலையில், நாம் புதிய தமிழகத்தின் தலைவர் டாக்டர். கிருஷ்ணசாமியிடம் பேசினோம்.

உங்கள் கட்சி திடீரென அதுவும் தேர்தல் நெருங்கும் நேரத்தில் உடைய என்ன காரணம்?

யார் சொன்னா உடைஞ்சுடுச்சுன்னு... அரசியல்ல வெற்றி தோல்வி சகஜம். ஆனா தோல்வியை ஏத்துக்க முடியாத - கட்சிக்காக எதுவும் செய்யாம ஒதுங்கியிருந்த சில பேர் சேர்ந்து, மக்கள் புதிய தமிழகமங்கற பேர்ல ஒரு கட்சியை உருவாக்கியிருக்காங்க. இதனால எங்களுக்கு எந்த இழப்புமில்லை... இன்னொரு விஷயம்... அந்தப் பேரை அவங்க பயன்படுத்தறதே சட்ட விரோதம். ஏன்னா புதிய தமிழகம் என்கிற பேருக்கு எங்ககிட்டதான் பேடண்ட் உரிமை இருக்கு... சீக்கிரமே இதற்கு சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுக்கப் போறோம்.

இந்த விழாவில் ஜி.கே.மணி, திருமாவளவன் ஆகியோர் கலந்து கொண்டிருக்கிறார்கள்... ராமதாசும் திருமாவளவனும் சொல்லியே இது நடந்ததாகச் சந்தேகிக்கிறீர்களா?

ஒரு அரசியல் கட்சியை நடத்தறவங்க அவங்கவங்க கட்சியை எப்படி நடத்தறது... வளர்க்கறதுன்னு சிந்திக்கணுமே ஒழிய அடுத்த கட்சி விவகாரத்துல மூக்கை நீட்டக் கூடாது. அப்படிச் செய்யறது அரசியல் நாகரிகமுமில்லை. ஒரு வேளை எங்க கட்சியைப் பலவீனப்படுத்தணும்னோ இல்ல என்னை டம்மியாக்கணும்னோ அவங்க நினைச்சு விழாவுக்குப் போயிருந்தா அது பகல்கனவு... என்னைப் பலவீனப்படுத்தற அளவுக்கு இவங்களுக்கெல்லாம் சக்தியே கிடையாது... நாங்க களைன்னு நினைச்சுத் தூக்கி வீசுனதை அவங்க பயிர்னு நினைச்சுக் கொண்டாடறாங்க... அவ்னோதான்...

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் செயல்பாடுகளில் உங்களுக்கு உடன்பாடு உண்டா இல்லையா?

எனக்குத் தமிழை அரசியலுக்குப் பயன்படுத்தறதுல சுத்தமா உடன்பாடே இல்ல. ஏற்கெனவே தமிழை வச்சு பலபேரு வளர்ந்து வந்துட்டதால, அதைப் போல வளரணும்னு ஆசைப்படறவங்க சில பேரு இப்போ தமிழ்ப் பாதுகாப்புன்னு பேசிக்கிட்டு இருக்காங்க. இவங்களால தமிழ் வளரவுமில்ல - பாதுகாக்கவும் படல... தமிழ் அப்படியேதான் இருக்கு. ஆனா இந்தக் கட்சிங்கதான் தமிழை வச்சு வளர்ந்திருக்கு... இந்த மாதிரி முறைகேடான விஷயங்கள்ல எங்களுக்கு உடன்பாடே கிடையாது. அதனால் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தோட செயல்பாடுகள்லயும் எங்களுக்கு உடன்பாடு கிடையாது.

நீங்கள் உருவாக்கிய சினிமா டைட்டில் விவகாரம்தான் இன்று குஷ்பு - சுஹாசினி வரை தொடர்ந்து சினிமாக்காரர்கள் - அரசியல்வாதிகள் இடையே மோதல்களாக விஸ்வரூபம் எடுத்திருக்கிறது என்கிறார்களே...

இது ரொம்பத் தவறான குற்றச்சாட்டு... நான் சினிமா டைட்டில் விவகாரத்தை

"ராமதாஸும் திருமாவளவனும் சக்தி அற்றவர்கள்!"

—கிருஷ்ணசாமி காரசாரம்!



ஆரம்பத்துல அரசியல் கலப்பில்லாத முழுக்க முழுக்க சமுதாயப் பிரச்னையாத் தான் எழுப்பினேனே தவிர, இப்போ இவங்கள்லாம் எழுப்பற மாதிரி சுயவிளம்பரத்துக்காகவோ இல்ல அரசியல் பிழைப்புக்காகவோ எழுப்பல. அப்படிச் சுயலாபத்துக்காக செய்யணும்ங்கற எண்ணம் இருந்தா தொடர்ந்து இந்தப் பிரச்னையை எழுப்பிக்கிட்டே இருந்திருப்பேனே... நான் போராடினது மக்களுக்காக... மத்தவங்க சினிமாக்காரர்களுக்கு எதிராகப் போராடறது வேற காரணங்களுக்காக.

திருமாவளவனுடன் நீங்கள் முன்பு மிகவும் நெருக்கமாகச் செயல்பட்டீர்கள். இப்போதிருக்கும் நிலையில் அவரது வளர்ச்சியை எப்படிப் பார்க்கிறீர்கள்?

அவரோட இணைந்து செயல்பட்ட காலத்தை ஒரு கெட்ட கனவாத்தான் நினைச்சுட்டு இருக்கேன். இதைத் தவிர இதுல சொல்றதுக்கு ஒண்ணுமில்ல. அவரோட செயல்பாடுகளையோ இல்ல வளர்ச்சியையோ பற்றிச் சிந்திக்கறதுக்கு எங்களுக்கு நேரமுமில்ல... தனிப்பட்ட ஒரு நபரைப் பற்றிப் பேசறது எங்க வேலையுமில்ல...

தேர்தல் நெருங்கிவிட்டது. புதிய தமிழகம் என்ன செய்யப்போகிறது?

போன சட்டமன்றத் தேர்தல்ல தி.மு.க. அணியில இருந்தோம். அப்போ இன்னும் கொஞ்சம் விழிப்பா இருந்திருந்தா ஒரிரு தொகுதிகளில் ஜெயிச்சிருக்கலாம். அதன் பிறகு நடந்த நாடாளுமன்றத் தேர்தல்ல சிலரால ஏமாத்தப்பட்டுட்டோம். அதனால இப்போ ரொம்ப ஜாக்கிரதையா நடக்கறதை கவனிச்சுக்கிட்டு இருக்கோம். என்ன செய்யப்போறோம்னு உங்ககிட்ட சொல்லாமலா விட்டுடுவோம். கொஞ்சம் பொறுங்க. நிச்சயமா இன்னும் கொஞ்ச நாள்ல தமிழக அரசியல்ல ஒரு எதிர்பாராத திருப்பம் வரப்போகுது.

குஷ்பு - சுஹாசினி விவகாரத்தில் உங்களுடைய பார்வை என்ன?

பெண்கள் பாவம்... அவர்களை விட்டு விடுங்கள்... உங்கள் பின்னால் அணிவகுக்கும் தமிழ் இளைஞர்களுக்கு நல்லதொரு புதிய பாடத்தைச் சொல்லித் தாருங்கள்... திருமணத்திற்கு முன்னும் - பின்னும் அனைத்துத் தமிழ் ஆண்களும் ஒழுக்க மானவர்களாக இருந்துவிட்டால் கற்பு குறித்த சர்ச்சைக்கோ பயத்துக்கோ இடமே இராதே!

- இரா. முத்துக்குமார்



சின்னான் செய்திகள்

ஐஸ்வர்யாராய்பட்டி!

என்னாத்த சொல்லுறது போங்க. எது எதுக்குத்தான் பேரை மாத்துறதுன்னு வெவஸ்தையே இல்லாம போய்க்கினு இருக்கு. புத்திகெட்ட மனுசப் பயலுக தான் கால்குலேட்டர் வெச்சு நம்பர் கணக்கைப் போட்டு பேருக்குப் பின்னால அரை எழுத்தையும், பேருக்கு முன்னால முக்கா எழுத்தையும் சேத்துக்கினு நியுமராலஜின்னு சொல்லிக்கிட்டு திரியறாய்ங்க! செர்பியா நாட்டுல இதை விட ஒரு பெரிய கூத்து நடந்திருக்கு. 'ஷிமிர்டிக்'னு ஒரு ஊரு. அந்த ஊரு இளவட்டப் பயலுகளுக்கு ஊரோட பேரைப் புடிக்கலையாம். அதனால ஊர்ப் பெருசுகளோட சண்டை வலிச்சுக்கினு குடும்பத்தோட நல்ல பேருள்ள ஊரைப் பார்த்து இடம் பெயர முடிவு செயதார்களாம். இது சரிப்படாதுன்னு ஊர்ப் பெருசுங்க 'ஐஸ்வர்'னு மாடலா மாத்தி வெச்சுக்கிட்டாங்களாம். இப்ப எல்லாத்துக்கும் சந்தோஷமாம். இங்கயும் இப்படி ஊர்ப் பேரை மாத்தணும்னு ஆரம்பிச்சாங்கன்னா, 'ஆண்டிப்பட்டி'ய 'ஐஸ்வர்யா ராய்பட்டி'யாவும், 'பேயன்விளை'ய 'ப்ரீத்திவிளை'ன்னும், 'நெய்க்காரன் பட்டி'ய 'நோக்கியாபட்டி'ன்னும் மாத்த ஆரம்பிச்சுடுவாய்ங்க! நடந்தாலும் நடக்கும்!

வடக்கு ஆஸ்திரேலியாவுல இருக்காங்க அந்த (கொள்ளு x கொள்ளு) பாட்டி. ஆமாங்க பாட்டியோட வயசு 175. பிரிண்டிங் மிஸ்டேக்குன்னு நெனைச்சுக்காதீங்க. நூற்று எழுபத்தி அஞ்சேதான். பாட்டி பொறக்கும்போதே சொந்த வீட்டோடதான் பொறந்தாங்க. என்ன புரிஞ்சுதா... பாட்டி ஒரு ஆமை. பேரு ஹாரியாத். 1835-ல பிரிட்டிஷ் சயின்டிஸ்ட் சார்லஸ் டார்வின் இந்த ஆமையைக் கண்டுபுடிச்சாராம். பல பல இடங்களில் வாழ்ந்த ஹாரி பாட்டி கடந்த பதினேழு வருஷமா வடக்கு ஆஸ்திரேலியாவுல உள்ள ஒரு ஜூல இருக்காங்களாம். போன வாரம் ஆமை மாதிரியே கேக் செஞ்சு வெட்டிக் கொண்டாடினாங்களாம். 'அந்தக் காலத்துல'ன்னு அந்தப் பாட்டி சொல்லுற கதைய எல்லாம் கேக்க எனக்கு ஆசையா இருக்கு. ஒரு டூர் போய்க்கினு வரலாம்னு பாக்கறேன். வாரியளா!

'**அ**ஸின் வயசுதான் எனக்கு ஆவுது. அதுக்குள்ள இளநரை வந்துடுச்சே', 'வெளக்கெண்ணெயத் தடவிச் சீவினாலும், கொள்ள விலை கொடுத்து வாங்குன ஜெல்லைத் தேய்ச்சு சீவினாலும் இந்த முடி முள்ளம்பன்றியாட்டம் துருத்திக்கினு நிக்குதே' - இப்படிப் புலம்பற இளசுகளே...சுருள் சுருளா முடி மாறுறதுக்கும், இளநரை கறுத்துப் போறதுக்கும் புதுசா மாத்திரைங்கள பாரீசுல கண்டு புடிச்சுருக்காங்களாம். இங்க அது எப்ப வருமுன்னு தெரியல. அதுவரை இப்ப யூஸ் பண்ணுற கேசக்கோடாரி தைலத்தையும், செம்பருத்தி கேப்சூலையும் மெயின்டெய்ன் பண்ணுங்க.


வாசகர்களின் எண்ணிக்கை
அதிகரித்த
ஒரே தமிழ் நாளிதழ்
அதிக வாசகர்கள்
படித்த
இணைப்புகள்
இளைஞர்மணி,
வெள்ளிமணி
தினமணி
செய்தியில் முழுமை; சொல்வதில் புதுமை!
Source: NRS 2005

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது

அமரர் கல்கி நினைவு நாள்



'படித்தேன், ரசித்தேன்'; 'பெண் தெய்வங்கள்'

- 'கல்கி' எழுதிய நூல்கள் அறிமுகம்

●●

தலைமையுரை : திரு கார்த்திக் நாராயணன்

நூல்கள் அறிமுகவுரை : திருமதி சுதா சேஷய்யன்

●●

தொகுப்பாசிரியர் சுப்ர.பாலன், வானதி திருநாவுக்கரசு, ஓவியர்கள் ஸ்யாம், ஹரீஷ் குகன் ஆகியோரை கௌரவித்தல்.

●●


- பிருந்தாவனத்தில் கண்ணன் வளர்ந்த...

திருமதி சுலோசனா பட்டாபிராமன் வழங்கும்
சிறுவர் சிறுமியரின் சேர்ந்திசை நிகழ்ச்சி (பக்திப் பாடல்கள்)

●●

டிசம்பர் 5, 2005 திங்கட் கிழமை
மாலை 6.00 மணி.
ஆஸ்திக சமாஜம் அரங்கம்,
வீனஸ் காலனி, ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018

அனைவரும் வருக!



தீர்ப்பு கூறும் தேர்தல் முடிவுகள்!

லல்லு பிரசாத் யாதவ்வின் அராஜக சகாப்தத்துக்கு முடிவு கட்டியுள்ளனர் பீஹார் வாக்காளர்கள்! பண பலமும் படை பலமும் தோற்று, தார்மிக நெறிகள் பீஹார் தேர்தலில் ஜெயித்திருப்பது ஆறுதலும் உற்சாகமும் தருகிற விஷயம். தீவிர கண்காணிப்பின் கீழ் தேர்தல்களை நடத்திய தேர்தல் கமிஷனையும் பாராட்டியாக வேண்டும்.

கருத்துக் கணிப்புகளையெல்லாம் பொய்யாக்கி பீஹார் மக்கள் வாக்களித்துள்ள விதத்தைப் பார்க்கும்போது,

- தங்கள் நலனைப் பேணாத லல்லுவின் கட்சியை அவர்கள் நிராகரித்திருப்பது அப்பட்டமாகத் தெரிகிறது.
- கடந்த தேர்தலுக்குப் பிறகு கூட்டணி ஆட்சி அமைக்கும் முயற்சிகளில் மண்ணை அள்ளிப் போட்ட ராம்விலாஸ் பாஸ்வானுக்கு அவர்கள் பாடம் புகட்டியிருப்பது புரிகிறது.
- இம்முறையேனும் ஸ்திரமான நல்லாட்சி அமைய வேண்டும் என்ற நோக்கில் அவர்கள் சிந்தித்து வாக்களித்திருப்பது தெளிவாகிறது.

இந்திய ஜனநாயகத்தின் பலமே இத்தகைய சிந்தனா சக்தி உடைய மக்கள்தான். படிப்பறிவு அதிகம் இல்லாவிட்டாலும், பட்டறிவைப் பயன்படுத்தி நாட்டுக்கு எது நல்லது என்று முடிவுக்கு வர அவர்களால் முடிகிறது.


பீஹார் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் நிதிஷ் குமார்,



கல்கி



2005 டிசம்பர் 4
பார்த்திப கார்த்திகை 19
மலர் : 64
இதழ் : 18



இந்த ஒரு விஷயத்தை மனத்தில் வைத்துக் கொண்டாலே நல்லாட்சி வழங்கிவிடலாம்:

மோசமான ஆட்சி நிராகரிக்கப்படவேண்டும் என்பதை வாக்காளர்கள் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்; தேவைப்பட்டால் அதை மீண்டும் செயல்படுத்த அவர்கள் தயங்க மாட்டார்கள்!

பீஹார் தேர்தலின்போதே மஹாராஷ்டிர சட்டசபையின் ஒரு தொகுதிக்கும், ஒரு நாடாளு மன்ற தொகுதிக்கும், கேரள நாடாளுமன்றத்தின் ஒரு தொகுதிக்கும் இடைத் தேர்தல்கள் நடந்துள்ளன.


இந்த இடைத் தேர்தல்களிலும் மக்கள் தீவிரமாகச் சிந்தித்து, தீர்மானமாக தங்கள் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

மஹாராஷ்டிராவில், கொங்கண் பகுதியில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்குப் போட்டியிட்டவர் நாராயண் ராணே. இவர் சிவசேனாவிலிருந்து வெளியேற்றப்பட்டவர். அக்கட்சித் தலைவரான பால் தாக்கரேயின் உறவினர் உத்தவ் தாக்கரேக்குப் போட்டியாகக் கருதப்பட்டுத் துரத்தி யடிக்கப்பட்டவர்! அதன் பின் காங்கிரஸில் சேர்ந்து தேர்தலில் நின்றிருக்கிறார் ராணே. பால் தாக்கரேயும் அவரது மகன் ராஜ் தாக்கரேயும் உத்தவ் தாக்கரேயும் ராணேவுக்கு எதிராகக் களத்தில் இறங்கி தீவிர பிரசாரம் செய்தனர். எனினும் அவர்களது பிரசாரம் எடுபடவில்லை! ராணே 63, 372 வாக்கு வித்தியாசத்தில் வென்றிருக்கிறார்! இத்தனைக்கும் அவர் போட்டியிட்ட தொகுதி பாரம்பரிய சிவசேனா கோட்டை!

மஹாராஷ்டிரா நாடாளுமன்ற தொகுதியான வடமேற்கு மும்பையிலும் சிவசேனா தோற்று விட்டது. 39 வயதான ப்ரியா தத் (சுனில் தத்தின் மகள்) அபார வெற்றி பெற்றுள்ளார்!

சிவசேனாவின் அடிப்படைவாத அரசியலையும் உட்கட்சி ஜனநாயகமற்ற அடக்கு முறை போக்கையும் மக்கள் விரும்பவில்லை என்பதையே மஹாராஷ்டிர இடைத்தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. இதுவும் அரசியலில் வெகு ஆரோக்கியமான அறிகுறி.

கேரளாவிலும் ஆளுங்கட்சியான காங்கிரஸ் மண்ணைக் கவ்வியிருக்கிறது. கம்யூனிஸ்ட் வேட்பாளர் ஜெயித்திருக்கிறார்.



மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி ஆட்சி அமைத்த பிறகு கேரள சட்டமன்ற காங்கிரஸில் உட்கட்சி சண்டை ஏற்பட்டதும்; கட்சி பிளவுபட்டதும், முதல்வர் மாற்றப்பட்டதும் மக்களை வெகுவாகப் பாதித்துள்ளன. காங்கிரசுக்குப் பாடம் கற்பிக்க மக்கள் முடிவெடுத்தனர்.

ஆக, தேர்தல் / இடைத்தேர்தல் நடந்த மூன்று மாநிலங்களிலும் மோசமான ஆட்சியை / கட்சியை மக்கள் நிராகரிக்கத் தயங்கமாட்டார்கள், பொங்கி எழுவார்கள் என்பது வலிமையாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தேர்தல் முடிவுகள், மேலே விவரித்த நம் நாட்டுத் தேர்தல் முடிவுகளைப் போல் மகிழ்ச்சியும் தெம்பும் ஊட்டவில்லை.

மிகக் குறைந்த வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ள ராஜபட்சய, ஜனதா விமுக்தி பெரமுனாவின் ஆதரவுடன்தான் தேர்தலில் நின்று ஆட்சியமைத்திருக்கிறார். இந்த அமைப்பு, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்காத அமைப்பாகும். ராஜபட்சயவும் தமிழர் உரிமைப் போராட்டத்தை ஆதரிப்பவரோ அனுதாபத்துடன் அணுகுபவரோ அல்ல... புலிகளின் மிரட்டலுக்குப் பயந்து கிழக்கு - வடக்கு மாநிலங்களில் ஈழத் தமிழர்கள் இந்தத் தேர்தலை முழுமையாக பகிஷ்கரித்திருக்கிறார்கள். இந்நிலையில், இலங்கைத் தமிழர்களின் கதி என்னவாகும் என்கிற கேள்விக் குறி எழத்தான் செய்கிறது. தனி நாடு கோரிக்கை அதீதமென்றாலும் தமிழர்களின் இதர உரிமைக் கோரிக்கைகள் கவனமும் ஆதரவும் பெறவேண்டும்.

'விடுதலைப்புலிகளுடன் பேசத் தயார்' என்கிறார் ராஜபட்சய. ஆனால், அவருக்குத் தேர்தலில் துணை நின்றவர்கள் அவரைப் பேச அனுமதிப்பார்களா; புலிகள் பேச்சுவார்த்தைகளைத் தொடரத் தயாராயிருக்கிறார்களா என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

போர் தொடுப்பவர்களின் பெயர்கள் சரித்திரத்தில் இடம்பெறும். ஆனால் போரை வெறுத்து அமைதிக்குப் பாடுபடுகிறவர்களின் பெயர்கள்தான் வரலாற்றில் பொன்னெழுத்துகளில் பொறிக்கப்படும். இந்த வித்தியாசத்தை உணர்ந்து ராஜபட்சய செயலாற்றட்டும். ○

போட்டுத் தாக்கு!

நடிகை சுஹாசினியிடம் கேட்கக் கூடாத
பத்துக் கேள்விகள்



1 இவ்வளவு 'வம்பு' வரும்னு தெரிஞ்சுருந்தா 'கொம்பை'ப் பத்தி மூச்சே விட்டிருக்க மாட்டீங்கதானே?

2 தமிழ்நாடு பூரா எல்லா கோர்ட்லயும் ஆஜராகறதுக்கு வசதியா சீஸன் டிக்கெட் எடுத்துட்டீங்களாமே?

3 மார்க்கெட் இல்லன்னாலும் கூட எங்களால சர்ச்சை கிளப்ப முடியும்னு சினேகாகிட்ட சவால் விட்டீங்களாமே?

4 குஷ்பு கொடுத்த முத்தம் இவ்ளோ அழுத்தமா இருக்கும்னு சத்தியமா நீங்க எதிர்பார்க்கலைதானே?

5 இப்போ உங்களோட ரிங்டோன் 'மன்னிக்க வேண்டுகிறேன்'தானாமே?

6 லேடீஸ் இப்படி உங்களுக்கு எதிரா ஒட்டுமொத்தமா ஜங்ஷன் ஆவாங்கன்னு கனவுல கூட நினைக்கலதானே?

7 இப்படி நடிகைகள்லாம் வலிய வந்து உரம்போட்டு அரசியல்வாதிகளை வளர்த்து விடறீங்களே... அவ்ளோ நல்ல மனசா உங்களுக்கு?

8 சென்னைல இருந்து பரமக்குடிக்கு பஸ் ஃபேர் எவ்ளோன்னு சமீபத்துல விசாரிச்சீங்களாமே?

9 இப்போ, 'நடந்த சம்பவம் கெட்ட கனவு'ன்னு சொல்ற நீங்க, ஏன் கனவு வர்ற நேரத்துல போய் சரத்துக்கு எஸ்.எம்.எஸ். அனுப்புனீங்க?

10 சிறுத்தைதான் உங்களுக்கு ரொம்பப் பிடிச்ச விலங்காமே?

- பரமு



தேவதைகள் தயார்!

ஹாரி பாட்டர் சீரியலின் நான்காவது வெளியீடான 'ஹாரி பாட்டர் அண்ட் தி கோப்லெட் ஆஃப் ஃபயர்' படம் உலகமெங்கும் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறது. (ஏதோ பெரிய ஸ்டாரின் தமிழ்ப் படம் போல சென்னையில் மட்டும் ஐந்து தியேட்டர்களில் ரிலீஸ்!) பெற்றோர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு திரையரங்குகளில் பொடிசுகளின் ஆக்ரமிப்பு.

இந்த மாயாஜால பாட்டர் படத்தில் மட்டும் முந்நூறு கோடி மக்கள் தொகையுள்ள ஆசிய மக்களுக்கு ஒரு சிறிய விசேஷம் உள்ளது. லண்டன் வாசிகளான ஷெஃபாலி சவுத்ரி, அப்ஷான் அஸாத் என்ற இரு ஆசியப் பெண்கள் ஹாரி பாட்டர் கதையில் வரும் படீல் இரட்டைச் சகோதரிகளாக நடித்திருக்கிறார்கள். (சமீபகாலமாக ஹாலிவுட் படங்களில் வியாபார நோக்கத்துக்காக ஆசியத் தலைகள் தென்படுவது குறிப்பிடத்தக்கது).

படம் வெளியாகி உலகமெங்கும் மெகா வசூலைக் குவித்துக் கொண்டிருக்க இருவரும் இன்னமும் அந்த சந்தோஷத்திலிருந்து விடுபடாமல் ஒவ்வொருவரிடமும் பட அனுபவங்களை ஒப்பித்துக் கொண்டிருக்கின்றனர்.

பதினேழு வயதான ஷெஃபாலி சவுத்ரி லண்டன் கல்லூரியில் சமூகவியல் படிக்கும் மாணவி. நடிப்புக் கலையில் இயல்பிலேயே ஆர்வம் அதிகம். இரட்டைச் சகோதரிகளைத் துழாவி, ஒரு தனிப்படை லண்டன் பள்ளி, கல்லூரிகளில் வலைவீசியபோது ஆர்வத்துடன் கலந்து கொண்டவர். வங்காளத்தைப் பூர்வீகமாகக் கொண்டிருக்கும் இவர்தான் ஹாரிபாட்டரின் நடன ஜோடியாகக் கலக்கியவர்.

அப்ஷான் கதையே தனி. "நான் தேர்வானதே செம ஜோக். நடிக்க வாய்ப்புக் கேட்டு ஒரு பெரிய கும்பலே கிளம்பிப் போனப்போ நானும் ஜாலியா அதுல கலந்துகிட்டேன் பாருங்க, அதிர்ஷ்டம் கொஞ்சம் ஓவராயிடுச்சு" என்று புன்னகை சிந்துகிறார்.

"படத்தின் வெற்றிக்கு இந்த இரு தெற்காசியப் பெண்களும் பெரிய பங்களிப்பார்கள் என்று நம்புகிறோம்" என்கிறார் படத்தின் தயாரிப்பு நிர்வாகி.

லண்டன்வாசிகள் என்பதால் இந்தப் பெண்களுக்கு இந்தியப் படங்கள் அத்துப்படி. "ஷாருக் வாவ்... ஐஸ்வர்யா ராய் ஷ்ஷ்ஷ்ஷ்...." என்று ஏகத்துக்கும் மெச்சுகிறார்கள்.

"பாலிவுட், ஹாலிவுட் எங்கிருந்து வாய்ப்பு வந்தாலும் அள்ளிக்குவேன்" என்கிறார் சவுத்ரி. "படிப்பு முடியட்டும். அப்புறமா யோசிக்கலாம்" என்கிறார் அப்ஷான் ஆஸாத்.

ஹாரி பாட்டரின் மெகா வெற்றியைப் பார்த்தால் கலையுலகத்துக்கு இரண்டு தேவதைகள் ரெடி என்றே பலரும் வாழ்த்துச்செய்தி வாசிக்கின்றனர்.

- பப்பி

அருள்வாக்கு

ஆசை வைத்தால் அவஸ்தைதான்!

ஒவ்வொரு ஆசையும் ஒவ்வொரு ஸமயத்தில் அலுத்துப் போகிறது. ஆனாலும் எந்த ஆசையுமே ஒரு வழியாக அற்றுப்போயும் விடாமல் கொஞ்ச நேரத்துக்கு அப்புறம் 'விட்டேனா பார்' என்று மறுபடி படையெடுக்கிறது. ஆசையைப் பூர்த்தி பண்ணும் வஸ்துவின் அநுபோகம் ஜீவனுக்குத் திரும்பத் திரும்ப வேண்டியிருக்கிறது. அதற்கு அவன் அடிமையாகிவிடுகிறான். அடிக்ட் ஆகிவிடுகிறான். அடிமையாகி விட்டால் அப்புறம் துக்கப்பட வேண்டியது தான்.

ஆசை உண்டாக்குகிற ஹாபிட் என்கிற பழக்க தோஷத்தினால் இப்படியெல்லாம் துன்பம். ரேஸ் கோர்ஸ், கள்ளுக்கடை, சீட்டாட்டம், காஃபி க்ளப்தான் என்றில்லை; எதிலே ஆசை வைத்தாலும் அது ஒரே இழுப்பாக இழுத்து, அதிலே ரொம்ப ஆனந்தத்தைத் தந்த அநுபோகத்துக்காக மறுபடி மறுபடி தாஹப்பட வைத்து ஒருத்தனை வாட்டி எடுத்து விடுகிறது. இவன் எதிர்பார்ப்பது -



உசந்த ஸங்கீதம் பிடித்தவனுக்கு உசந்த ஸங்கீதம், க்ராம்யக் கூச்சல் பிடித்தவனுக்கு அப்படிப்பட்ட கூச்சல், உசந்த லிட்ரேசர் பிடித்தவனுக்கு ரஸமான இலக்கியம், ஆபாஸக் கூத்துப் பிடித்தவனுக்கு அந்த ஆபாஸம், இட்லி ஸாம்பார் ப்ரியனுக்கு அந்த போஜ்யம் - இப்படி ஒவ்வொருத்தனும் எதிர்பார்ப்பது அவன் ஆசைப்படும் தரத்துக்கு எப்போதும் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட ஸமயங்களில் ஏமாற்றமும் துக்கமுமே ஏற்படுகிறது. அந்த ஆசை இல்லாதிருந்தால் இந்த துக்கமும் இல்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



எங்கள் எம்.எஸ்.

பெண்மையின் இலக்கணம்!



சோ

கர்நாடக சங்கீத உலகம், இந்தியாவுக்கு அளித்துள்ள கௌரவம் எம்.எஸ்.சுப்புலட்சுமி. எம்.எஸ்.அவர்கள் ஓர் இசை மேதை மட்டுமல்ல, பாரத கலாசாரத்திற்கே அவர் ஓர் எடுத்துக்காட்டு. பெண்மையின் மேன்மைகள் எல்லாம் ஒருங்கே பொருந்தியவர் அவர். பெண் விடுதலை என்று பேசுகிறவர்கள், எம்.எஸ்ஸைப் பார்த்து பெண் விடுதலை என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பொறாமை, கர்வம், தான் என்கிற சுயநலம்... போன்றவற்றிலிருந்து விடுதலை பெற்றவர் அவர். அம்மாதிரி பெண்கள் இந்நாட்டுக்குப் பெருமை சேர்ப்பவர்கள். இந்தச் சமுதாயத்துக்கு வழிகாட்டிகள். அவர்களில் முதன்மையானவர் எம்.எஸ்.

'மற்றவர்கள், சம்பாதித்ததில் கொஞ்சம் தானம் செய்வார்கள்; ஆனால் எம்.எஸ் - சதாசிவம் தம்பதிகளைப் பொறுத்தவரையில், சம்பாதிப்பது என்பதே தானம் செய்வதற்காகத்தான்' என்று முன்பு ஒருமுறை காஞ்சி மஹாஸ்வாமிகள் கூறியதாகப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதைவிட ஒரு வாழ்த்து யாருக்கும் கிட்டாது. 'தனக்கு மிஞ்சித் தான் தான தர்மம் என்ற பழமொழி உண்டு. ஆனால் 'தான தர்மத்திற்கு மிஞ்சியே தனக்கு' - என்று வாழ்ந்தவர் எம்.எஸ்.

அவருக்கு 'பாரத ரத்னா' பட்டம் அளிக்கப்பட்ட நேரத்தில், சதாசிவம் அவர்கள் இல்லாமற்போனது ஒன்றுதான் எம்.எஸ். அவர்களுக்குக் குறையாக இருந்திருக்க முடியுமோ, என்னவோ! 'குறையொன்றுமில்லை' என்று பாடிய எம்.எஸ்ஸுக்கு இந்தக் குறையை இறைவன் ஏற்படுத்திவிட்டாலும், அவரை நமக்கு அளித்ததன் மூலம், நமது சமுதாயத்தின் மேன்மைக்குக் குறை இல்லாமல் செய்த இறைவன் நன்றிக்குரியவன்.

'கீழ்மை' எனும் கூண்டிலிருந்து விடுதலை பெற்று வாழ்ந்த மிகச் சில மனிதர்களில் ஒருவராகிய எம்.எஸ்ஸைப் பாராட்டும் தகுதி

எனக்கில்லை. என்ன செய்வது? மிகவும் உயர்ந்தவர்களின் துரதிர்ஷ்டம் இது: தங்களை விட எல்லா விதங்களிலும் தாழ்ந்தவர்களிடமிருந்துதான் அவர்களுக்குப் பாராட்டு வர முடியும்.

அவர் மறைந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிறது. ஆனால், அவருடைய லக்ஷ்மிகரமான முகமும் அவருடைய இனிமையான குரலும் இன்னமும் எல்லோர் மனத்திலும் அப்படியே நிற்கிறது. குழந்தையை ஒத்த ஸ்வபாவம், துறவியை ஒத்த மனோநிலை; யாராலும் நெருங்க முடியாத உயர்வு, எல்லோராலும் அணுகக் கூடிய எளிமை; தனது மேன்மையை வெளிக்காட்டுவதில் சுத்த கருமித்தனம், தனது சம்பாத்தியத்தை அள்ளி அள்ளிக் கொடுப்பதில் நினைத்துப் பார்க்க முடியாத வள்ளல் தன்மை!

இப்படி நேர் எதிரான வர்ணனைகளுக்கு உரிய பெண்மையின் சிகரம் எம்.எஸ். அவர்கள். மற்றவர்கள் வாழ்வதற்காகவே வாழ்ந்த அவர், பெண்மையின் இலக்கணம்.



நுஷி தெரியுமா?




இவங்களுக்கு 'நுஷி' தெரிஞ்சுருந்தா, இவ்வளவு பிரச்னை வந்திருக்காது!

பனை மரங்களைப் போல் வரிசை வரிசையாகக் கோடுகள், இடையிடையே சிறிதும் பெரிதுமாகப் புள்ளிகள். இதுதான் நுஷி. சீனாவிலுள்ள ஹூனான் எனும் மலைப்பிரதேசத்தில் வசிக்கும் யாவோ பழங்குடியினர் பயன்படுத்தும் எழுத்து மொழி. சீன மொழிக்கும் இதற்கும் சிறிதும் தொடர்பில்லை. காரணம் நுஷி முழுக்க முழுக்கப் பெண்களால், பெண்களுக்காக மட்டுமே உருவாக்கப்பட்ட ஒரு பெண் மொழி. தலைகீழாக நின்றாலும் இதை ஆண்கள் புரிந்துகொள்ள முடியாது.

தங்களுடைய கோபம், வெறுப்பு, துக்கம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை பிற பெண்களுடன் பகிர்ந்துகொள்ள ஒரு ரகசிய மொழி தேவைப்பட்ட பொழுது யாவோ பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நுஷியை உருவாக்கினார்கள். சாங் மன்னனின் (960 - 1279) எண்ணற்ற மனைவிகளில் ஒருவர்தான் இந்த ரகசிய மொழியை முதன் முதலாக உபயோகிக்கத் தொடங்கியவர் என்று சொல்லப்படுகிறது. தன்னுடைய அந்தரங்க எண்ணங்களைத் தன்னுடைய சகோதரிகளுக்கும் தோழிகளுக்கும் தெரியப்படுத்த இந்தப் பெண் (பெயர் தெரியவில்லை) நுஷியை உபயோகித்து பல கடிதங்களை எழுதியிருக்கிறார்.

தன்னுடைய கணவனுக்குத் தெரியாமல் தனது எண்ணங்களை மிக ரகசியமாக அண்டை வீட்டார்களுக்கும் தோழிகளுக்கும் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் ஒரு யாவோ பெண்ணுக்கு ஏன் ஏற்பட்டது என்பது யோசிக்க வேண்டிய விஷயம். அந்த அளவுக்குப் பெண்களுக்கு 'கருத்துச் சுதந்திரம்' இருந்திருக்கலாம்.

இன்று நுஷி அகராதியில் 1800 முதல் 2500 வார்த்தைகள் வரை இடம் பிடித்திருக்கின்றன. யாவோ இனக் குழுவின் தலைவி ('வன்' அல்ல 'வி') யாங் ஹூவாங்கி என்பவர் தனது 92வது வயதில் மரணமடைந்ததையடுத்து நுஷி இனி அவ்வளவுதான் என்று நினைத்தனர். ஆனால், நுஷி சாகவில்லை. மாறாக ஆண்களை வசீகரித்தது. பெண்கள் அப்படி ரகசியமாக என்னதான் கதைத்துக்கொண்டார்கள் என்று தெரிந்துகொள்ளும் ஆவலில் ஒவ்வொரு குச்சியையும் ஒவ்வொரு புள்ளியையும் பிரித்துப் போட்டு பூதக்கண்ணாடி கொண்டு சிறிது சிறிதாகப் புரிந்துகொள்ளத் தொடங்கினார்கள்.

கம்ப்யூட்டரில் கார் ஓட்டுவதை விடவும், சுடோகு போடுவதை விடவும் நுஷி புதிரை உடைப்பது சுவாரசியமாக இருப்பதால் சீன இளைஞர்கள் நுஷியில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஒவ்வொரு ஸ்டோரியின் (கிடைத்துள்ளவை மிகவும் சொற்பம்தான்)

உலகம் இவ்வளவுதான்!



ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியமான பல சங்கதிகள். நுஷியைக்கொண்டு பாடல்கள் பாடியிருக்கிறார்கள். காப்பியடிக்காமல் கவிதைகள், சிறுகதைகள் எழுதியிருக்கிறார்கள்.

இன்றைய காதலர்கள் வேறு வகையான நுஷியைப் பயன்படுத்துகிறார்கள். அதைச் சுலபத்தில் உடைக்க முடியாது. அதேபோல தமிழ்ப் பாடலாசிரியர்கள் சிலரும் நவீனத்துவ கவிஞர்கள் பலரும் அவ்வப்போது ஆங்காங்கே அள்ளித் தெளிக்கும் நுஷி வார்த்தைகளைக் குட்டிக்கரணம் போட்டாலும் 'டிகோட்' செய்ய முடியாது.

நம் எல்லோருக்கும் மிக நன்றாகத் தெரிந்திருக்கும் ஒரு விஷயம் இண்டியானாவிலுள்ள ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரியவில்லையாம். தூக்கம் எப்படி வருகிறது? தூக்கம் என்றால் என்ன? தெரியவில்லையாம்.

காட்டில் சுற்றிக்கொண்டிருந்த மிருக, பூச்சி வகையறாவில் தலா ஒன்றைப் பிடித்து வைத்துக்கொண்டு தானும் தூங்காமல் அவற்றையும் தூங்க விடாமல் ஆராய்ந்திருக்கிறார்கள். எது எப்படித் தூங்குகிறது, எவ்வளவு நேரம் தூங்குகிறது, தூக்கத்தில் பினாத்துகிறதா? எழுந்து நடக்கிறதா? புரண்டு படுக்கிறதா? எல்லாவற்றையும் கண்கள் சிவக்க கவனித்திருக்கிறார்கள்.

பழுப்பு வெளவால் ஒரு நாளைக்கு 20 மணி நேரம் தூங்குமாம். ஒட்டகச்சிவிங்கிக்கு என்ன வியாதியோ தெரியவில்லை இரண்டு மணி நேரத்துக்கு மேல் படுக்கையில் தங்காதாம். புழு பூச்சிக்கு தலையில் இடியே விழுந்தாலும் தினசரி 10 மணி நேரம் உறங்கியாக வேண்டும். இடையில் எழுப்பினால் பிடிக்காது. முறைக்கும். விடுவார்களா? அதன் இறக்கையை நிமிண்டி, கால்நுனியில் கிச்சுக்கிச்சு மூட்டித் தூங்கவிடாமல் செய்திருக்கிறார்கள். அந்தப் பொல்லாத பூச்சி மறுநாள் காலை ஓவர் டைம் எடுத்துக்கொண்டு முந்தைய நாள் தூக்கத்தை 'கேரி ஃபார்வேர்டு' செய்திருக்கிறது. ஆராய்ச்சியாளர்கள் வாய் பிளந்து நிற்கிறார்கள்.

- மருதன்

“நிறுத்துங்க, நிறுத்துங்க” என்று கிறீச்சிட்ட பெண்குரல் கேட்டு, திரும்பிப் பார்த்தேன்.

நடுத்தர வயதிருக்கும் அவளுக்கு. கிராமத்து மண்ணுக்கே உரிய கறுத்த, உரமேறிய உடல். இடுப்பில் ஒரு குழந்தையை வைத்திருந்தாள். அவளது அலறல் ஒலியில் திடுக்கிட்டுப் போய் குழந்தை வீறிட்டது. பக்கத்தில் மலங்க விழித்தபடி ஐந்து வயது மதிக்கத்தக்க சிறுவன்.

அவளது குரலுக்கு எந்தவித எதிர் விளைவுமின்றி அந்த நகரப் பேருந்து தடதடத்தபடி ஓடிக்கொண்டிருந்தது.

“நிறுத்துங்க” என்று அவள் கெஞ்சினாள்.

“ஏம்மா, என்னம்மா பண்ணிக்கிட்டிருந்த...? உங்களோட இதே பொழப்பாப் போச்சு தினசரி. அப்படி என்ன தூக்கம், ஊர் வர்றது கூடத் தெரியாம...?”

கண்டக்டர் தனது அலுப்பான பயணத்தின் கடைசி அடியில் இருந்தார். இந்த ட்ரிப்போடு அவர் பணி முடிந்தது. கடைசி ட்ரிப் என்பதாலும், இரவு பத்து மணியாகிவிட்டதாலும் அவர் முகத்தில் சோர்வும் களைப்பும் தெரிந்தன.

பேருந்திலும் பத்துப் பேருக்கு மேல் பயணிகள் இல்லை.

“ஐயா, இருட்டான பாதைங்க! பசங்களைக் கூட்டிட்டு நடக்க முடியாதுங்க. குழந்தைக்குப் பால் கொடுத்துக்கிட்டு இருந்தேனுங்க. கொஞ்சம் வண்டியை நிறுத்துங்க! போயிகிட்டே இருக்கே, ஐயோ” என்று பதறினாள்.

“நிறுத்துங்க” என்று எழுந்து நின்று அதட்டலாய்க் கத்தினேன்.

மற்ற பயணிகளின் அமைதியைக் கண்டு கோபமும் அந்தப் பெண் மணியின் நிலையைக்கண்டு பரிதாபமும், என்னை அதற்கு மேல் பொறுமையாய் உட்கார விடவில்லை.

எனது கணீர் குரலின் முன், பேருந்து பிரேக் அடித்து அடிபணிந்து நின்றது.

வெளியே பார்த்தேன். அமாவாசை இருட்டு. தெரு விளக்குகள் ஏதுமற்ற சூழல்.

அந்தப் பெண்மணி, இடுப்பில் குழந்தையுடன், கையில் கூடையுடன், இறங்கினாள்.

“முருகா, சீக்கிரம் இறங்குடா” என்று சிறுவனை அதட்டினாள்.

கடைசிப் படியிலிருந்து, தரையில் கால்வைத்து இறங்கும்முன், நன்றியுடன் என்னை ஒரு பார்வை பார்த்தாள்.

கண்டக்டர், கையாலாகாத கடுப்புடன் நீண்ட விசில் கொடுத்தார்.

இருட்டில் தனியே, குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய் விடுவாளா?

மனசுக்குள் கேள்வி எழுந்து முடிவதற்குள் பேருந்து ஓட ஆரம்பித்துவிட்டது.

அந்தப் பெண்ணுடன், நானும் இறங்கி இருக்கலாமோ? பாதுகாப்பாக அவள் வீடு வரை சென்றிருக்கலாமோ?

கேள்விகள் குடைய ஆரம்பித்தன. வாழ்க்கையில் பல சமயம் இப்படித்தான். உதவி செய்யலாமா என்று கேள்வி எழுந்து முடிவெடுப்பதற்குள், நாம் அதைக் கடந்து போய்விடுகிறோம் அல்லது நம்மை அது கடந்து போய் விடுகிறது.


இருட்டில் ஒரு பெண்

சென்னைவாசியான நான், என்னுடன் வேலை செய்யும் நண்பனின் தங்கை திருமணத்தில் கலந்து கொள்ள பயணம் செய்து கொண்டிருக்கிறேன். கிராமத்தை திரைப் படங்களில் கண்ட எனக்கு, நிஜ கிராமத்திலேயே இரண்டு நாட்கள்

கிருஷ்ணா

தங்க வாய்ப்புக் கிடைத்த சந்தோஷத்தில், திருச்சியை அடுத்துள்ள கிராமத்தை நோக்கி, இந்த டவுன் பஸ்சில் சென்று கொண்டிருக்கிறேன்.

''அணைக்கரைமேடு இறங்குங்க. சார், உங்



களைத்தான்'' என்று கண்டக்டர் சொன்னதும், இறங்கினேன்.

என் நண்பன் பஸ் ஸ்டாப்பில் எனக்காக நின்று கொண்டிருந்தான். பக்கத்தில் மோட்டார் சைக்கிள். பேருந்து நிறுத்தத்திலிருந்து அரை கிலோமீட்டர் உள்ளே தள்ளி அவனது ஊர் என்று சொல்லியிருக்கிறான்.

"என்னடா, பஸ் பயணம் போரடிச்சுடுச்சா?'' என்று குசலம் விசாரித்தான்.

''டேய், நீ பைக்குல வந்தது நல்லதாப் போச்சு. ஒரு காரியம் செய்யணுமே'' என்று பாதி வழியில் அந்தப் பெண், தனது குழந்தைகளுடன் இருட்டில் சென்றதைச் சொன்னேன்.

''அந்த இருட்டுல பத்திரமாகப் போயிருப்பானாடா? வழியிலே பாம்பு ஏதும் கடிச்சுடாதே? கும்மிருட்டுல, எவனாவது அவளை ஏதும் செஞ்சுட மாட்டானே?'' என்று படபடப்பாகப் பேசிய என்னைப் பார்த்துச் சிரித்

தான்.

"எங்களை மாதிரி கிராமத்து ஆட்களுக்கு இருட்டும் குண்டும் குழியுமான பாதையும், அரசாங்கத்துக்குச் சொந்தமான பேருந்துக்கு ஏதோ தான்தான் முதலாளிங்கற மாதிரி அதிகாரம் பண்ற கண்டக்டர்களும் பழகிப் போச்சப்பா. அந்தப் பொண்ணு இத்தனை நேரம் பத்திரமா வீடு போயிருப்பா."

அவனது பேச்சிலிருந்த உண்மையைப் புத்தி ஒப்புக்கொண்டாலும், மனசுக்குள் ஏதோ புழுக்கம்.

"ப்ளீஸ்" என்றேன்.

வந்த வழியே, இருவரும் பைக்கில் பறந்தோம். இருபது நிமிடப் பயணத்தில், கண்களுக்கு இருட்டு பழகிப் போயிருந்தது. வழியில், பாதையின் இருபுறமும் கவனமாகப் பார்த்தபடி வந்தேன். எங்கும் அவள் தென்படாதது ஆறுதலாயிருந்தது.

"என்னப்பா, ஊர் வந்துடுச்சே. வீடு, வீடாய்ப் போய்த் தேடணுமா?" என்று கிண்டலடித்தான் நண்பன்.

பைக் திரும்பியது.

அவன் ஊருக்குள் வந்து, சாப்பிட்டு, திறந்த வெளியில், கயிற்றுக் கட்டிலில் படுத்தோம்.

"ஒரு சந்தேகம்" என்றான் நண்பன்.

வானத்து நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருந்த நான், தலையைத் திருப்பினேன்.

"நீ வந்த பஸ்சுல, மற்ற பயணிகளுக்கு வராத அக்கறை அந்தப் பொண்ணு மேலே உனக்கு ஏன் வந்தது? சமூக சேவைத் திலகமாகணும்னா?"

அவன் கிண்டலுக்கு உடனே பதில் சொல்லாமல் சற்றுத் தாமதித்தேன்.

"இதே போல ஒரு இருட்டு நேரத்திலதான், என் அம்மாவை வீட்டை விட்டுத் துரத்தி, வெளியே தள்ளினார் எனது அம்மாவின் கணவன். அம்மாவின் கையைப் பிடித்தபடி அழுது கொண்டிருந்த எனக்கு அப்போது வயது ஆறு" என்றேன். ○

புள்ளி விவரப் புலி!



ஆபத்தானது என்று தெரிந்திருந்தும் ரஷ்யா, கனடா, பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஆண்டொன்றுக்கு 1.25 லட்சம் டன் எடையுள்ள ஆஸ்பெஸ்டாஸ் கழிவுகளை இறக்குமதி செய்கின்றன. இக் கழிவுகளைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் 1000 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை இந்நாட்டுத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கிறார்கள். அதே சமயம் புற்று நோய் தாக்கப்பட்டு கடந்த 30 ஆண்டுகளில் 1,80,000 தொழிலாளர்கள் இந்த மூன்று நாடுகளில் மரணமடைந்திருக்கிறார்கள். இதனால், மொத்தம் 36 நாடுகளில் ஆஸ்பெஸ்டாஸ் கழிவுகள் பயன்படுத்தப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



மதுமேகம் (எ) சர்க்கரை வியாதியை (DIABETIC) கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளவும், குணப்படுத்தவும், வராமல் தடுத்துக்கொள்ளவும் உதவும் தெய்வீக மூலிகை மருத்துவம்

பத்தியம் கிடையாது. பக்க விளைவு கிடையாது

நீரிழிவு நோயாளிகள் குணமடையவும், சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள உதவும் தெய்வீக மூலிகைகள் பற்றியும் உணவு முறைகள் பற்றியும், தெரிந்துகொள்வதற்கு முன், சர்க்கரை வியாதிக்கான காரணங்களை அறிந்துகொள்வது நல்லது.

நம் வயிற்றுப்பகுதியில் கல்லீரலுக்கு சற்று கீழேயுள்ள கணையத்தில் இன்சுலின் என்ற ஹார்மோன் சுரக்கின்றது. இதன் முக்கிய பணி இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்துவதாகும். இதனால் இதற்கு ஆன்டி டயாபெடிக் ஹார்மோன் என்று பெயர். இன்சுலின் நாம் உண்ணும் உணவிலுள்ள குளுக்கோஸை கிளைக்கோஜனாக மாற்றி கல்லீரலிலும், தசைகளிலும் சேமித்து வைத்து தேவையான போது அதை மீண்டும் உடலுக்கு செலுத்தும் வேலையை செய்கிறது. போதுமான அளவு இன்சுலின் சுரக்காத போது கிளைக்கோஜனாக மாற்றப்பட வேண்டிய குளுக்கோஸ், மாற்றமடையாமல் அப்படியே இரத்தத்தில் கலந்து விடுகிறது. இதனால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகிறது. இவ்வாறு சர்க்கரை (இரத்தத்தில்) அளவு அதிகமாவதை ஹைபர்கிளைசேமியா (HYPER GLYCAEMIA) என்பார்கள் இதன் காரணமாக அதிக அளவு குளுக்கோஸ் சிறுநீருடன் வெளியேற்றப்படும். இதுவே நீரிழிவு நோயாகும். (DIABETUSMELLITUS)

நீரிழிவு நோயின் வகைகள் : (TYPES OF DM)

1. இன்சுலின் டிபென்டென்ட்டயாபெட்டிஸ் (ID. DM) இவ்வகையான சர்க்கரை வியாதி நோயாளிகள் இன்சுலின் மருந்தை ஊசி மூலம் செலுத்திக் கொள்வதன் மூலம் சர்க்கரையின் அளவே கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள்.
2. நான் இன்சுலின் டிபென்டென்ட்டயாபெட்டிஸ் (NIDDM) இவ்வகையில் சர்க்கரையின் அளவை மாத்திரைகளின் மூலம் கட்டுப்படுத்துவது.
3. மூன்றாவது வகை : தேவையான அளவு இன்சுலின் சுரந்தாலும் கல்லீரல், கணையம் நோய்களால் பாதிக்கப்படுதல், ஹார்மோன்களில் ஏற்படும் மாற்றம் மற்ற நோய்களுக்காக எடுக்கப்படும் மருந்துகள், மற்றும் பரம்பரையாகவும் ஏற்படுகிறது.
4. கர்ப்பகாலத்தில் ஏற்படும் சர்க்கரை நோய் : கர்ப்பக் காலத்தில் சர்க்கரையின் அளவு ஒரு சிலருக்கு அதிமாகும். இதனை கட்டுப்படுத்தாவிட்டால் பிறக்கும் குழந்தைக்கு சர்க்கரை நோய் வர அதிகமான வாய்ப்புண்டு. மேற்கூறிய எந்த விதமான சர்க்கரை நோயாளிகளும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. இதனை பக்கவிளைவுகள் இல்லாத தெய்வீக மூலிகைகள் மற்றும் இயற்கை உணவுகள் மூலம் குணப்படுத்தவும், கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும் முடியும்.

சர்க்கரை நோயின் அறிகுறிகள் :

சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு அடிக்கடி சிறுநீர் போதல் (POLY UREA) 2. அதிகமாக தண்ணீர் தாகம் எடுத்தல் (Excessive Thirst) 3. களைப்புத் தன்மை 4. எடை குறைவு (WEIGHT LOSS), 5. அதிகமான பசி எடுத்தல், தோல் வறட்சி (DRY SKIN), சிறுநீரில் சர்க்கரையின் அளவு அதிகமாக இருத்தல், மற்றும் காயம் ஏற்பட்டால் விரைவில் ஆறாமை, போன்ற அறிகுறிகள் இருக்கும். சர்க்கரையின் அளவு அதிகமாகும் போது கண்கள், சிறுநீரகம் பாதிப்பு, BP, ஆண்மைக்குறைவு, பாத எரிச்சல், மூட்டுவலி போன்ற அறிகுறிகள் தெரியும்.

ஒவ்வொரு மாதமும்

2	வேலூர்
2	காஞ்சிபுரம்
4	கடலூர்
4	விழுப்புரம்
4	திருவண்ணாமலை
7,8	மும்பை
9	பெங்களூர்
12	சேலம்
12	ஈரோடு
12	திருப்பூர்
13	கோவை
13	உடுமலைபேட்டை
14	மதுரை
14	திருநெல்வேலி
15	விருதுநகர்
15	தஞ்சாவூர்
16	திருச்சி
16	கரூர்
20,21	புது டெல்லி

டாக்டர் C.K. மாணிக்கவாசகம் அவர்களால் 34வருட அனுபவ ஆராய்ச்சியில் எழுதப்பட்ட "எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்" என்ற நூலினை பதிவுத்தபாலில் பெற ரூ. 120/-ம், "என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்" என்ற புதிய நூலினை பதிவுத் தபாலில் பெற ரூ.120/- ம் தலைமை முகவரிக்கு M.O. அனுப்பவும். மேலும் விவரங்களுக்கு:

CKM தெய்வீக மூலிகை மையம்
CKM DIVINE HERBAL CENTRE

தலைமை முகவரி : P.B. NO. 30, 1,திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் டி 635601 ✆04179-220469, 222769 செல் : 9842369696

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் பேலஸ் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 600 010. ✆ : 044-26424285, 26427638. செல் : 9444001447

: T-4,3வது மாடி, பிளாட் -3, 5வது தெரு, ஸ்ரீ லட்சுமி டவர்ஸ், அம்பேத் திருநகர், கோயம்பேடு, சென்னை- 107. ✆ : 044-55843347 செல் : 9282405758

டெல்லி கிளை : 6/34, W.E.A., Karolbagh, New Delhi - 5. ✆ 011-25736220 Cell: 9868026743

மேலே உள்ள முகவரிகளில் ஆலோசனை தினமும் நேரம் காலை 10.00-1.00 p.m. மாலை 5.00-7.00 P.M.

அண்ணனுக்கு தேவகோட்டை ஹைஸ்கூலைப் பிடிக்கல, அதனால "இளம்பு ஊருக்குப் போயிடுவோம்"னார் மறுநாள் சாயங்காலம் மதுரையிலே இருந்தோம்.

எங்களைப் பார்த்ததும் அப்பாவுக்கு ஒரே அதிர்ச்சி. "ஏன் வந்தீங்க... என்னாச்சு..."னு வேகமாக, கோபமாகக் கேட்டார்,

"அந்த ஸ்கூலை எங்களுக்குப் பிடிக்கல, அதான் திரும்பி வந்துட்டோம்''னு தயங்கித் தயங்கித் தந்தி அடித்தோம். தரையில விழுந்த காசைத் தேடுகிற மாதிரி தலையைத் தொங்க விட்டு நின்னோம்.

அப்பாவுக்குக் கோபம் வந்தது பாருங்க... ஓங்கி ஆளுக்கொரு அறை விட்டார். கன்னம் பழுத்துருச்சு. கண் கலங்கிருச்சு. அப்படியொரு வலி!

"ஏன்டா, நான் தான் பெரிய படிப்பு படிக்க முடியல, எங்கப்பாவுக்கு வசதியில்லே. எம்புள்ளைங்க நீங்களாவது பெரிய படிப்பு படிச்சு, பெரிய ஆளா வரணும்னு ஒரு பெரிய பள்ளிக்கூடத்துல சேர்த்துவிட்டு, கஷ்டப்பட்டு சம்பாதிச்சு உங்களைப் படிக்க வச்சா... பணத்தோட அருமை தெரியாமே, படிப்போட அருமை தெரியாமே இப்படி வந்து நிக்கிறீங்களேடா..." அப்படினு கேட்டு அடிக்க ஆரம்பிச்சார் பாருங்க, எங்க வீட்டு அடியா, உங்க வீட்டு அடியானு சொல்லமுடியாத அளவுக்குப் பயங்கர கவனிப்பு!

அடி தாங்கமுடியாம நான் சரண்டராயிட்டேன். 'நான் வேணும்னா அந்த ஸ்கூல்லேயே போய்ப் படிக்கிறேன்'னு வாக்குமூலம் கொடுக்க, அண்ணன் மட்டும் 'முடியவே முடியாது, என்னை வேற ஸ்கூல்ல சேர்த்து விடுங்க'னு அழுத்தமா சொல்லிட்டார்.



அப்புறமென்ன ஒரு மாசத்துக்குத் தேவையான முறுக்கு, மிக்சர், ரவா லட்டு, பிஸ்கோத்'னு தின்பண்டங்கள் ஒரு டின் நிறைய போட்டு, என்னை தேவகோட்டை ஹைஸ்கூல் ஹாஸ்டல்ல சேர்த்துவிட்டுப் போனார் அப்பா.

சும்மா சொல்லக் கூடாது. தேவகோட்டை டி. பிரிட்டோ ஹைஸ்கூல் எனக்குள் பல நல்ல மாற்றங்களை, ஏற்றங்களை ஏற்படுத்தியது. நட்சத்திர டைரக்டர் எஸ்.பி. முத்துராமன் படிச்சதும் அங்கேதான். அவர் எனக்கு சீனியர்.

படிப்பு, ஒழுக்கம் இரண்டும்தான் அங்கே முக்கியம்.

அங்கே 'சார்லஸ்'னு ஒரு தமிழ் வாத்தியார் இருந்தார். காந்தியவாதி! எப்பவும் கதர்வேட்டி, கதர்சட்டை, கதர் குல்லா போட்டு, நரைச்ச மீசையோடு கம்பீரமா நடந்து வருவார். அவரைப் பார்த்தால் நம்மை அறியாமலே எழுந்து நின்னு மரியாதை கொடுக்கத் தோணும், நல்லா படிக்கிறவங்களைக் கூப்பிட்டு தட்டிக் கொடுத்துப் பாராட்டுவார். சரியா படிக்கல, பிச்சு எடுத்துடுவார். நாங்க அவரை 'அய்யா'னு மரியாதையா அழைப்போம்.

சார்லஸ் அய்யா ரொம்ப அருமையா, அழகா தமிழ் வகுப்பு நடத்துவார். நாலடியார், அகநானூறு, புறநானூறு என்று சங்க இலக்கியங்களை ரொம்ப எளிமையான நடையில கதை மாதிரி சொல்வார். 'பொன்னியின் செல்வன்' கதையைப்



எது உணர்வு? எது வெறி?

படிக்கும்போது எப்படி நாமே குதிரையில பறக்குற மாதிரி தெரியுமோ, அப்படி சங்கக் காலத்தையே கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துற மாதிரி இருக்கும். அதனால அவர் தமிழ் வகுப்பு நடத்தும்போது ரொம்ப ஆர்வமா கலந்துக்குவேன்.



விஜயகாந்த் பேசுகிறேன்! 6

எனக்குத் தமிழ் மேல் ஒரு பற்றுதலும் பாசமும் எப்போ... எப்படி ஏற்பட்டதுன்னா, அது சார்லஸ் அய்யாகிட்டே படிச்ச காலத்துல இருந்து தான்னு சொல்லணும்.

'தினமும் திருக்குறள்படி, மனப்பாடம் பண்ணு, தினமும் முடியலேன்னா வாரத்துக்கு ஒரு குறளையாவது மனப்பாடம் பண்ணு. இப்படி நல்ல விஷயங்களை மனப்பாடம் செய்வது உன் எதிர்கால வாழ்க்கைக்கு உரமாயிருக்கும். ஒரு மனுஷன் சிறப்பாக வாழ்வதற்கு திருக்குறளில் பல நல்ல விஷயங்கள் இருக்கு. அது உனக்கு வழிகாட்டும் படி'ன்னு சொல்வார். இப்படி எனக்குள் தமிழ்ப் பற்று ஆழமாக வேரூன்ற காரணமானவர் சார்லஸ் அய்யாதான்.

அந்தக் காலத்துல குருகுல வாசத்தில் படிக்கிறவர்களுக்கு, முடிவுல குரு ஒரு உபதேசம் செய்து அனுப்புவாராம். அதே மாதிரி சார்லஸ் அய்யா எனக்கொரு உபதேசம் செய்தார்.

'தமிழ் உணர்வை வளர்த்துக் கொள், ஆனால் தமிழ் வெறியை வளர்க்காதே!'னு அவர் சொன்னதோட சரியான அர்த்தம் புரிய ரொம்ப காலமானது. எது உணர்வு? எது வெறி?'னு புரிந்து கொள்ளாமல் நடந்ததால் பல நல்லவற்றைத் தவற விட்டிருக்கேன், எம்.ஜி.ஆர் மாதிரி பெரிய மனிதர்களின் நட்பைப் பெற முடியாத நிலைக்கு ஆளாகி இருக்கேன். அதெல்லாம் என்ன... அடுத்தடுத்து வரும் வாரங்களில் சொல்றேன்.

டி பிரிட்டோ ஹைஸ்கூல் பக்கத்திலேயே ஹாஸ்டல் இருந்தது. அப்போ அந்த ஹாஸ்டலுக்கு காம்பவுண்ட் சுவர் கிடையாது. சுத்திலும் முள்வேலி தான் இருந்தது. அதனால எங்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான்.

அந்த ஊர்ல ஏதாவது புதுப் படம் வந்தால், குறிப்பாக நம்ம தலைவர் (எம்.ஜி.ஆர்) படமாக இருந்தால் வார்டனுக்குத் தெரியாமல் வேலி தாண்டிடுவேன். இப்படி வேலி தாண்டிப் போய் நான் படம் பார்த்த தியேட்டர்களில் இன்றைக்கு என் படங்கள் ஓடுறதைப் பார்க்கிறபோது சொல்ல முடியாத ஒரு சந்தோஷம்.

ஒவ்வொருத்தரோட பள்ளி, கல்லூரி



• தங்கைகள் மீனாகுமாரி, சாந்திதேவி

ஒவ்வொரு இயக்குநருக்கும் ஒவ்வொரு தனித்தன்மை இருப்பது போல், ஒவ்வொரு நடிகருக்கும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. அப்படிப்பட்டவர்கள்தான் புகழின் உச்சிக்குச் செல்கின்றனர். அந்த வரிசையில் விஜயகாந்த்தும் இடம் பிடித்திருக்கிறார்.

இனிமை, எளிமை, பணிவு, துணிவு, உழைப்பு இந்த ஐந்து பண்புகளுடன் பிறருக்கு உதவி செய்யும் மனமும் உள்ள அத்தனை பேரும் வாழ்வில் தொட்டுப் பார்க்க முடியாத உயரத்துக்குச் சென்று விடுவார்கள்.

பேச்சில் இனிமை, உடையில் எளிமை, நடிகர் சங்கத் தலைவர் பதவி வந்த போதும் பணிவு, முடிவு எடுக்கும் துணிவு, ஓய்வில்லாத உழைப்பு ஆகிய ஐந்தையும் நான் விஜயகாந்திடம் பார்த்திருக்கிறேன்.

அத்தனையும் ஒருங்கே அமைந்த அவரிடம் ஏழை எளியவருக்கு உதவும் மனமும் உண்டு, அதற்கு எவ்வளவோ உதாரணங்கள் கூற முடியும்.

தொழிலாளர்கள் சம்மேளனத்திற்கு ஒரு தனிக் கட்டடம் எழுப்ப நினைத்த அந்த நேரத்தில், தாமாகவே முன் வந்து இரண்டு லட்ச ரூபாயை நன்கொடையாக அளித்த அந்தப் பெருந்தன்மையை இந்த நேரத்தில் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

- கே. பாலசந்தர்



விஜயகாந்த் பற்றி வி.ஐ.பி.!

நாட்கள்ல பெஞ்சுல நிற்கிறது, தோப்புக்கரணம் போடுறது, முட்டி போட்டு நிக்கிறது இதே போல எல்லாம் நடந்துருக்கும்.

இது பெரிய குற்றமாகவோ, அவமானமாகவோ எனக்குத் தெரியல, நாம அறியாம செஞ்ச ஒரு தப்பை உணரக் கிடைச்ச அவகாசம்னுதான் நினைக்கிறேன், இப்படி பெஞ்சுல நிக்கிற சம்பவம் என்னோட பள்ளி நாட்களிலேயும் நடந்துருக்கு.

டி.பிரிட்டோ ஸ்கூல்ல 'ஆரோக்ய சாமி'னு ஒரு வாத்தியார் இருந்தார். ரொம்பக் கண்டிப்பானவர், சரியா படிக்கலேன்னா, ஸ்கூல் யூனிஃபார்மை ஒழுங்கா போடலேன்னா, கிளாஸ் ரூம்ல அரட்டை அடிச்சோம்னா, முதல்ல சொல்லிப் பார்ப்பார்; கேக்கலேன்னா, கூப்பிட்டு 'சுவத்துல முதுகைச் சாய்ச்சுட்டு சேர் மாதிரி கால் மடக்கி அரை மணி நேரம் நில்'லுனு தண்டனை தருவார்.

இப்படி அரைமணி நேரம் கால் மடக்கி நிற்கும்போது இரண்டு கால்களும் பயங்கரமாக வலிக்கும், நான் ஒரு தடவை மாட்டிக்கிட்டேன். அரை மணி நேரம் ஆடாமல் அசையாமல், இருக்கிறது பெரிய அவஸ்தை. இந்தத் தண்டனைக்குப் பயந்தே அவர் கிளாஸ்ல பசங்க ரொம்ப சின்ஸியரா நடந்துக்குவாங்க, நானும்தான்.

ஆரோக்யசாமி சார் இங்கிலீஷ் கிளாஸ் ரொம்ப அருமையா நடத்துவார், ஆனா நமக்குத் தான் அது பிடிக்காது. இங்கிலீஷ், இந்தி இரண்டு கிளாஸ்லேயும் நான் கலந்துக்கறதைத் தவிர்த்து வந்தேன், அந்த மொழி எல்லாம் நமக்கு எதுக்கு, தமிழ் ஒண்ணே போதும்னு நினைச்சு எனக்கு நானே குழி வெட்டிக்கிட்ட நேரம் அது. இந்த இரண்டு மொழியைத் தவிர தமிழில் நல்ல மார்க் வாங்கினேன்.

ஹாக்கி, கால்பந்து, கபடி இப்படி எல்லா விளையாட்டிலும் எனக்கு ஆர்வம் ஏற்படுத்தியது டி.பிரிட்டோ ஸ்கூல் தான். நான் அங்கேதான் என்.சி.சி.யில சேர்ந்தேன். அப்புறம் தான் ஏன்டா சேர்ந்தோம்னு ஆயிடுச்சு. சும்மா பெண்டு நிமிர்த்திட்டாங்க. அதுலேருந்து தப்புவதற்காக ஒரு வேலை செய்தேன்...

(சொல்றேன்)

படங்கள் உதவி : **சஜோ**

ஸாரி, கொஞ்சம் ஓவராயிடுச்சு!





எதுவுமே லிமிட்டில் இருந்தால்தான் அழகு. எல்லை தாண்டி விட்டால் விபரீதம்தான்.

• **ஃபாஷனின் உச்சகட்டம்?**
வேட்டியில் ஜிப்!

• **ரகசியத்தின் உச்சகட்டம்?**
கறுப்புக் கலரில் கறுப்பு நிற எழுத்துக்கொண்ட விஸிட்டிங் கார்டு!

• **சோம்பலின் உச்சகட்டம்?**
லிஃப்டில் நாற்காலி போட்டு உட்கார்ந்து போவது.

• **மறதியின் உச்சகட்டம்?**
கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டே இவனை/இவளை எங்கேயோ பார்த்திருக்கிறோமே எனத் தடுமாறுவது.

• **முட்டாள்தனத்தின் உச்சகட்டம்?**
கண்ணாடிக் கதவிருக்க சாவித் துவாரம் வழியே பார்ப்பது!

• **நேர்மையின் உச்சகட்டம்?**
பஸ்ஸில் கர்ப்பிணிப் பெண் ஒன் அண்ட் ஹாஃப் டிக்கட் எடுப்பது!

• **விஞ்ஞான வளர்ச்சியின் உச்சகட்டம்?**
பசு பால் தருவதற்குப் பதில் மில்க் பவுடர் தருவது!

- லதா சேகர்

6



• படம் : ஸ்ரீஹரி

மருமகள் மெச்சும் மாமியார்!

மணமானவுடன் எல்லாமே 'புதுசு கண்ணா புதுசு'தான். புதுக் கணவன் / புது மனைவி, புது சொந்தங்கள்.... புதிதாகக் கிடைக்கும் முக்கியத்துவம் இவையெல்லாம் சீக்கிரமே பழசாகிவிடும். முதல் வருடத்தில் பல கருத்து வேறுபாடுகள் துளிர்க்க ஆரம்பிக்கும்.

மும்பையில் வளர்ந்த சித்ராவை மணமான மறுநாள் மாமியார் 'வாசல் தெளித்து, கோலம் போடு' என்று சொல்ல, 'அவன் கோலம் போடுவது எங்கள் வீட்டில் பழக்கமில்லையே! எனக்குத் தெரியாதே' என்று பதிலளிக்க, 'மும்பையில் புறாக்கூண்டான வீடுகள்தானே? அது தான் தெரியலே! இப்போ கத்துக்கோ' என்று நக்கலாக மாமியார் கூற, அந்த உறவில் விரிசல் ஏற்பட அன்று பிள்ளையார் சுழி போடப்பட்டது.

கேரளாவில் வளர்ந்த அம்முவை மாமியார் வீட்டார் அவளது மலையாள 'ராகத்துக்காக' கேலி பண்ணித் தீர்த்து விட்டார்கள். முதலில் கஷ்டமாக இருந்தாலும் அம்மு 'இது ஒரு ஜாலியான குடும்பம்' என்று புரிந்துகொண்டவுடன் அவளும் அவர்கள் பேச்சு வழக்கைக் கிண்டல் பண்ண ஆரம்பித்தாள். வீட்டில் எப்போதும் கலாட்டாதான். அம்முவைப் பார்த்து அவள் பெற்றோர்களே ஆச்சர்யப்பட்டார்கள்.

இப்படிப் பல சம்பவங்களை - சிறு



மனநல ஆலோசகர் பிருந்தா ஜெயராமன்

நிகழ்வுகளிலிருந்து பெரிய கொடுமைகள் வரை நாம் தினம் தினம் பார்க்கிறோம்.

கோலம்போடச் சொல்லி மாமியார் கேட்கும்பொழுதே, அந்தச் சடங்கில் நம் பிக்கை இல்லாவிட்டாலும், 'கற்றுக் கொள்கிறேன்' என்று சித்ரா பேசி இருந் தால் கதை மாறி இருக்கலாம். மருமக ளுக்கு நம்பிக்கை இல்லாத சிறு சிறு விஷ யங்களில் அவளை வற்புறுத்த வேண்டாம் என்று மாமியார் தீர்மானிக்கலாம். மரு மகளை வரவேற்கும் பெற்றோர், உறவு ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென் றால், நினைவில் கொள்ள வேண்டிய சில விஷயங்களை நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

1) திருமணம் நிச்சயம் செய்யும் நேரத் திலிருந்தே மருமகளுக்கு நல்ல அபிப் பிராயம் வரும்படியாக அவர்கள் நடந்து கொள்வது நல்லது. மற்ற உறவினர் நடு வில் எடுப்பாக இருக்க வேண்டும் என் பதற்காக 'இது வேண்டும், அது வேண்டும்' என்று கேட்கும்போதே மரியாதை குறையும் என்பதை மறக்கக்கூடாது.

2) மணமான பின் மகனும் மருமகளும் மற்றொரு குட்டிக் குடும்பத்தை ஆரம் பிக்கிறார்கள். அவர்களுக்குள் நல்ல உறவு அமைய வேண்டுமென்றால் அவர்களது அந்தரங்கத்தை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். (மகனுடைய தேன்நிலவுக்கு பெற்றோரும் போவது என்பது நமது நாட் டின் 'ஸ்பெஷல்' விஷயம்!) மகனைப் பெற்ற தாய்க்கு, மற்றொரு பெண்ணுடன் தன் மகனின் பாசத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டி வருவது கடினம்தான். 'பெண்டாட்டி தாசனாகி விடுவானோ?' என்கிற பயம் இயற்கைதான். சூழ்நிலை களை சாமர்த்தியமாகச் சமாளிக்கும்படி மகனை வளர்த்திருந்தால் இந்தப் பயங்கள் அநாவசியம்.

3) புதிதாக வந்த மருமகளுக்குப் பெற் றோரைப் பிரிந்துவந்த வருத்தம் இருக்கத் தான் செய்யும். தாயின் இடத்தை மாமி யார் நிரப்ப முடியாது. அவள் நிலையைப் புரிந்துகொண்டு, 'அம்மாவுடன் பேசு கிறாயா?' 'இங்கு உனக்கு ஏதாவது அசௌகர்யம் இருந்தால் தயங்காமல் சொல்லு' போன்ற வார்த்தைகள் அவளுக்கு இதமாக இருக்கும்.

4) காலம் மாறிவிட்டது. மணமாவதற்கு முன்பே பெண்களுக்கு வீட்டுப் பரா மரிப்பு பற்றிய பயிற்சிகள் அளிக்கப் படுவதில்லை. மாமியார் வீட்டுக்கு வந் ததும் எது யார் வேலை என்பதை மாமி யார் மருமகளைக் கலந்து பேசி முடிவு செய்தால் நல்லது. மருமகளுக்கென்று ஒதுக்கப்படும் வேலைகளை அவள் வழிப்படி செய்யும் சுதந்திரத்தை அவளுக்கு அளிப்பது முக்கியம். மாமியார் 'காய்கறிகளை இப்படித்தான் நறுக்க வேண்டும்' என்று வலியுறுத்தினால், 'எனக்கு வரவில்லை' என்று மருமகள் தப்பிக்கலாம்.

5) மருமகளைப் பற்றி மகனிடம் புகார் செய்வது விபரீதமாக முடியும். பிரச்னை மாமியார் / மாமனாருக்கும் மருமகளுக் கும். இதில் மகனை இழுத்தால் அவருக்கு தர்மசங்கடமாகாதா? மரு மகளைப் பற்றி அவள் பெற்றோரிடம் புகார் செய்வது இன்னும் அதிகமாகக் குட் டையைக் குழப் பும். மற்ற உற வினர்களிடம் புகார் செய்வது மருமகளை விட் டுக் கொடுப்பதாக அமையும். பின் என்னதான் செய் வது? சென்ற இரண்டு அத்தியா யங்களும் ஒருவரை ஒருவர் எப்படிப்



"டாக்டர்! என் னால உட்கார்ந்தா எழுந்துக்க முடி யலை..."
"கிட்ட வாங்க... என்னால எழுந்தா உட்கார முடியாது..."
- வீ. சாரதிடேச்சு

அன்பு வழிய வழிய...





தன்னுடைய நாற்பதாவது பிறந்த நாளை வெகு விமர்சையாகக் கொண்டாடினார் ஷாருக்கான். (ஷாருக்குக்கு நாற்பதா? ஐயகோ, நம்பவே முடியவில்லை!) ஆனால், அதற்கு முதல்நாள் ராமதாஸ் புதல்வர் அமைச்சர் அன்புமணியின் மனத்தைக் குளிர வைத்துவிட்டார்.

'இனி புகை பிடிக்கப் போவதில்லை' என்று ஷாருக் சொன்னாலும் சொன்னார். அன்புமணி உடனே பேப்பரை எடுத்து மணி மணியானக் கையெழுத்தில், அன்பு வழிய வழிய ஷாருக்கைப் பாராட்டித் தள்ளிவிட்டார். 'உங்களைப் போன்ற செல்வாக்கு பெற்ற நடிகர், புகை பிடிப்பதற்கு எதிரான எங்கள் போராட்டத்துக்கு உறுதுணையாக இருப்பதற்கு நன்றி...'' என பாராட்டிவிட்டு விஜய்காந்த் ஸ்டைலில் புகைப் பிடித்து இறந்தவர்களின் புள்ளி விவரமும் தந்திருக்கிறாராம்.

பாவம்...புள்ளி விவரப்புலி!

- எல்எஸ்

புரிந்துகொள்வது என்பது பற்றித்தான். மருமகள் வளர்ந்த சூழ்நிலை, அந்தக் குடும்பத்தின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், அந்த வீட்டில் பாசத்தை வெளிப்படுத்தும் விதம் இதையெல்லாம் புகுந்த வீடு கவனித்தால் அவளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். அதேமாதிரி புகுந்த வீட்டின் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள அவளுக்கும் 'டைம்' கொடுக்க வேண்டும். 'கோலம் போட்டே பழக்கமில்லை. அதனால் இன்றே நீ போட வேண்டும் என்று எப்படி நான் எதிர்பார்க்கலாம். பழகிய பிறகு போடு. உனக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை என்றால் நான் வற்புறுத்தவில்லை' இது புரிந்துகொள்ளும் தன்மை உடையவர்கள் பேசும் பேச்சு. (அதெப்படி, நம்ம குடும்பத்துப் பழக்கங்கள்...? என்று ஆதங்கத்துடன் ஆரம்பித்தால் உதவாது... அன்புக்கு எல்லோரும் கட்டுப் படுவார்கள். அதிகாரத்துக்கு...? 'ஸாரி'!!)

6) பொருளாதார ரீதியாகச் சுதந்திரம் கொடுத்தால் பொறுப்பு வரும். எல்லா செலவுக்கும் கணவனிடம் கையேந்தி நிற்பது மருமகள்களுக்குப் பிடிக்காத விஷயம்.

இவையெல்லாம் மகனுடைய நிம்மதியான மணவாழ்வுக்கு பெற்றோர் செய்யக்கூடிய 'பாஸிடிவ்' முயற்சிகள்! எல்லா மாமியார்களும் பொல்லாதவர்கள் என்றோ, மருமகள்கள் எல்லோரும் நல்லவர்கள் என்றோ வாதாடவில்லை. எல்லாவற்றிலும் விதிவிலக்குகள் உண்டு. புகுந்த வீட்டார் அவர்களது நம்பிக்கைகளை மருமகள்மீது திணிக்கும்போது, சிலரிடமிருந்து வெளிப்படையாக எதிர்ப்புகள் வருகின்றன. சிலர் மனத்திற்குள்ளேயே புழுங்கி மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள்.

என் தொழில் அனுபவத்தில் நான் கணித்த விஷயங்களை முன்னெச்சரிக்கையாக அளிக்கிறேன். புத்திமதியாக அல்ல.

மாப்பிள்ளையின் புகுந்தவீட்டைப் பற்றி அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடரும்)

சென்னை, மார்ச் 10, 1966: சிவா விஷ்ணு கோயிலில் வேதாரண்ய மஹா மண்டபத்தைத் திறந்து வைக்கும் தருணத்தில் ஒவ்வொரு குடும்பத் தலைவியிடமிருந்தும் அவர் கேட்டதெல்லாம் அவ்வளவுதான். தங்கள் குடும்பத்துக்கு உணவு சமைக்கும் போது, அதே பிரிவு, கவனம் மற்றும் அன்புடன் ஒவ்வொரு நாளும் அவருடைய பக்தகோடிகளுக்கு அன்று மட்டுமல் இன்று வரை அவர் ஒரு நடமாடும் தெய்வம். கருணையாலும் கனிவுள்ளத்தாலும் அறியப்பட்டு, பக்தியுடனும், பணிவுடனும் பல்லாயிரக்கணக்கானவர்களால் பரமாச்சார்யார் என்று போற்றப்பட்ட அவர் ஏழைகளுக்கும் உதவிக்கரம் நாடியவர்களுக்கும் சேவை புரிவதில் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டார்.



ஒரு பிடி அரிசியை தனியாக எடுத்து வைக்க வேண்டும் என்று அவர்களை அவர் கேட்டுக்கொண்டார். இவ்வாறு சேகரித்து வைத்த அரிசியை குடும்பத் தலைவியிடமிருந்து வாரத்துக்கு ஒரு முறை அவருடைய தொண்டர்கள் கேட்டு வாங்கி வந்தார்கள். இவ்வாறு சேகரிக்கப்பட்ட அரிசி ஒவ்வொரு பகுதியிலும் உள்ள ஏழைகளுக்கு உணவளிக்க பயன்படுத்தப்பட்டது. ஏழைகளுக்கு உணவளிக்கும் திட்டம் என்ற விதத்தில் ‘பிடி அரிசி திட்டம்’ பெரிதும் பெயர் பெற்று விளங்கியது. சிந்தனைத் திறமைக்கு எடுத்துக் காட்டான, எளிய, சிறப்பாக நடைமுறைப் படுத்தக்கூடிய அருமையான திட்டம் அது. குடும்பத் தலைவிகளுக்கு இத்தகைய வேண்டுகோளை விடுத்தவர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் 68வது சங்கராச்சார்யார் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். லட்சக்கணக்கான தமிழ் நாடு சட்டசபையில் நிறைவேற்றப் பட்ட இரங்கல் தீர்மானத்தில் “அவர்கள் தனது வாழ்நாளில் கடைபிடித்து வந்த எளிமையும், ஏழை எளியோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற எந்தவித பாகுபாடு இன்றி அனைத்து தரப்பு மக்களையும் ஆதரித்து ஆசீர்வதித்த தன்மையும் எல்லோராலும் போற்றி பாராட்டப்பட்டவையாகும். காஞ்சி மடத்திலிருந்து அருள் பாலித்து வந்த ஆதிசங்கரர் வழிவந்தோரில் குறிப்பிட்டு சிறப்பாக கருதப்படும் சங்கராச்சார் யாராக வாழ்ந்து மறைந்தவர் ஆவார்.

சைவ, ஆகமம், சில்பம் தமிழ் ஆராய்ச்சி, ஆழ்வார் நாயன்மார்களின் புகழைப் பரப்புதல், நீதி நெறிகளை வளர்த்தல், தமிழகமெங்கும் பல்வேறு திருக் கோயில்கள் பலவற்றுக்கு திருப் பணிகள் செய்தல், தெருகூத்து, வில்லிபுத்தூரரார் பாரதம், கம்ப

ராமாயணம், திருப்பாவை, திருவெம்பாவை போன்ற காவியங்களை மக்களிடையே பரப்புதல், சிறைக்கைதிகளுக்கு நீதிபோதனை, வெள்ளம், புயல் போன்ற சமயங்களில் உதவி புரிதல், பண்டைய தமிழ் அறிஞர்களுக்கு பாராட்டளித்தல், நாதஸ்வர கலைஞர்கள் போன்ற தமிழகத்திற்கே உரிய கலை விற்பன்னர்களை கௌரவித்தல், தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்தல், அனைத்து பிரிவினருக்கும் பரிவு காண்பித்தல் ஆகியன அவரது ஆன்மீக பணிகளில் குறிப்பிட தக்கவையாகும்.

மேலும் நாடு சுதந்திரம் அடைவதற்கு ஆசி வழங்கியது. தானே கடைசி வரை கதர் அணிந்தது, வரதட்சிணையை வெறுத்து ஆடம்பரமில்லாத திருமணங்களை செய்வித்தவை போன்றவை அவருடைய அருஞ்செயல்களில் குறிப்பிடத் தக்கனவாகும். இமயம் முதல் குமரி வரை விரிந்து கிடக்கும் நம் தாய்நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ந்து பாதயாத்திரையாகத் தன் சுற்றுப்பயணத்தை அமைத்துக் கொண்டு மக்களை ஆசீர்வதித்த தன்மை வேறு எந்த ஆன்மீக பெருந்தகைக்கும் இல்லாது பரமாச்சாரியார் அவர்களுக்கே மட்டும் உரித்தான தனிச்சிறப்பாகும்," என்று புகழாரம் சூட்டியுள்ளது.

வேதபாடசாலைகள் இன்றளவும் நீடித்து சிறப்பாக செயல்படுகின்றன என்றால், அதற்கு பரமாச்சார்யார் ஸ்வாமிகளின் முனைப்பான, திட்டவட்டமான முயற்சிகளே காரணம். அவர் அளித்த ஊக்கமும் அவரால் நிறுவப்பட்ட ஏராளமான கல்வி நிலையங்களும், வேத பாடங்களின் மீதும், பழமை வாய்ந்த நம்முடைய மதத்தின் மீதும், பாரம்பரியம் மிக்க நம்முடைய கலாசாரத்தின் மீதும் லட்சக்கணக் கானவர்களின் வற்றாத ஆர்வத்துக்கு முக்கியக் காரணமாக விளங்குகின்றன.

பிப்ரவரி 13, 2006 வரலாற்றில் ஒரு மைல்கல்

ஆம், பிப்ரவரி 13, 2006 பெருமை வாய்ந்த ஒரு நாள். துறவு வாழ்க்கை தர்மத்தையும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் தலைமைப் பொறுப்பையும் பரமாச்சார்யார் அவர்கள் ஏற்று

100வது ஆண்டின் துவக்கத்தைக் குறிக்கும் புனிதமான நாள்.

இந்தியாவின் தெய்வீகத் தொண்டு வரலாற்றில் இந்த முக்கிய விழாவினை எடுத்துக் கொண்டாடும் பொருட்டு ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமி பீடாரோஹண சதாப்தி மஹோத்ஸவ் ட்ரஸ்ட் உருவாக்கப்பட்டுள்ளது. அமைதிக்காவும் ஆனந்தத்திற்காகவும் பரமாச்சார்யார் அவர்கள் விட்டுச் சென்ற சீரிய செய்தியை நாடெங்கும் பரப்பும் நோக்கத்துடன் ஆண்டு முழுதும் நடைபெற வுள்ள நிகழ்ச்சிகளின் நீண்ட பட்டியல் இந்த ட்ரஸ்டால் தயாரித்து நிறைவேற்றப்படவுள்ளது.

உங்களுக்கென்று இது ஒரு சிறப்பு அழைப்பிதழ்

உலகில் எந்தப் பகுதியில் நீங்கள் இருந்தாலும் விழாக் கொண்டாட்டங்களின் தனிச் சிறப்பைப் படைக்கும் இந்த ஆண்டில் பங்கேற்க உங்களை அழைக்கிறோம். உங்களுக்கென்றே சிறப்பான செய்தி என்னவென்றால் கொண்டாட்டங்களில் பங்கேற்க நீங்கள் எங்கும் செல்ல வேண்டியதில்லை, செலவு எதுவும் செய்ய வேண்டியதில்லை. நீங்கள் இருக்கும் இடத்திலேயே முழுமையான வாழ்க்கையை வாழ்வதற்கு, பரமாச்சார்யார் நமக்கு வழிகாட்டிய நெறிமுறைகளை நீங்கள் கடைபிடித்தாலே போதும். உங்கள் கடமைகளை நிறைவேற்றுங்கள். பிடி அரிசித் திட்டம், வேதங்களின் பொக்கிஷப் பாதுகாப்பு முயற்சி, 'நாம ஸங்கீர்த்தனா' இயக்கம், கீதை ஒப்பித்தல் போட்டி, இவ்வாறு ஏதாவது ஒன்றில் நீங்களும் பங்கு பெறுங்கள் அல்லது துவங்கப்படவுள்ள சமூக வளர்ச்சித் திட்டங்கள் ஒன்றில் பங்கு பெறுங்கள் அல்லது சமூக சேவையில் ஈடுபடுங்கள். வரதட்சணை வாங்கவோ கொடுக்கவோ மறுத்துவிடுங்கள். திருமண விழாக்களில் ஆடம்பரங்களை தவிர்த்திடுங்கள் அல்லது மஹாஸ்வாமிகளின் தஸோபதேசத்தை பின்பற்றுங்கள்.

விழாக் கொண்டாட்ட குழு தலைமை வழிகாட்டிகள்

ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

உறுப்பினர்கள்

டாக்டர் எல்.எம். சிங்வி, தலைவர்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் இங்கிலாந்தில் தலைமை இந்திய தூதர்)

ஸ்வாமி தயானந்த சரஸ்வதி
(அர்ஷ வித்யாபீட நிறுவனர்)

டாக்டர் பி.சி. அலெக்ஸாண்டர், M.P.
(தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிர மாநில முன்னாள் ஆளுநர்)

ஸ்ரீ எம்.என். வெங்கடாசலையா
(முன்னாள் இந்திய தலைமை நீதிபதி, தேசிய மக்கள் உரிமை கமிஷனின் ஓய்வு பெற்ற தலைவர்)

டாக்டர் கே. கஸ்தூரி ரெங்கன், M.P.
(முன்னாள் தலைவர், ISRO)

ஸ்ரீ வீ. சங்கர், பொதுச் செயலாளர்

ஒரு அரிய வாய்ப்பு

நம்முடைய கவலைகளுக்கும் தொல்லைகளுக்கும் ஒரே மருந்து ஞான வழியை பின்பற்றுவது. இருந்தாலும் கூட, உங்கள் நேரம், உழைப்பு, சிந்தனை அல்லது பணம் ஆகியவற்றின் மூலம் கனிசமாக மேலும் எதுவும் செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அல்லது திட்டமிடப்பட்டுள்ள செயல் நடவடிக்கைகள் பற்றி முழு விவரங்களை அறிய விரும்பினால், www.srikanchimahaswami100.org மூலம் எங்களை தொடர்பு கொள்ளுங்கள் அல்லது கீழ்க்கண்ட முகவரியில் எங்களுக்கு எழுதுங்கள்.

ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமி பீடாரோஹண சதாப்தி மஹோத்ஸவ் ட்ரஸ்ட்

1 & 4, கைலாஸ் பவன், பிளாட் 258, சயான் சாலை, சயான் (மேற்கு), மும்பை – 400 022.
தொலைபேசி: 2404 4242/2401 0051. ஈமெயில்: contact@srikanchimahaswami100.org
www.srikanchimahaswami100.org

தலைமுறை, தலைமுறையாக...

அழகான வட்ட முகம். பளீரென்ற விழிகள். ஆறு வயது விஷ்ணு பிரபாகரைப் பார்த்தால், எவருக்கும் நின்று இரண்டு வார்த்தைகள் பேசத் தோன்றும். அவனைப் போலவே கோவையிலிருந்து விக்னேஷ், கிரீஷ், ஸ்ரீராம், ஜெயராம், ஐயப்பன், ஹரி பிரசன்னா, பரத்வாஜ், மணிகண்டன், அவிநாசியிலிருந்து சந்தோஷ்; திருப்பூரிலிருந்து கார்த்திக், சண்முகராஜன்; சென்னையிலிருந்து சுந்தரராஜன், ஹரீஷ்; கோபியிலிருந்து சங்கர நாராயணன், விஜய குமார்; மதுரையிலிருந்து கணேஷ், சதீஷ்; சிதம்பரத்திலிருந்து பானுசேகர்; திருநெல்வேலியிலிருந்து சூர்யநாராயணன்; பெங்களூரிலிருந்து வைத்தியலிங்கம்; வாணியம்பாடியிலிருந்து விவேக்; மும்பையிலிருந்து கல்யாண சுந்தரம்; பூனாவிலிருந்து அமரேஷ்...


இவர்கள் எல்லாம் பாலக்காட்டில் உள்ள வேத பாடசாலை மாணவர்கள். தங்கள் குரு கணேஷ் கனபாடிகள், கிரிதர கனபாடிகளுடன், ஒன்றாகத் தங்கி, வேதம் பயிலும் சிறுவர்கள்.

"வேதம் மட்டும் பயின்றால் போதுமா?" என்று கேட்கிறோம்.

"வேதங்கள், சம்ஸ்கிருதம் இவற்றோடு ஆங்கிலமும் கணிதமும் உண்டு. அவை தனி வகுப்புகள்!" என்கிறார் செயலர் கிருஷ்ணன்.

இப்போது கல்பாத்தி அருகே சாத்தப்புரம் கிராமத்தில் வசதிகள் குறைந்த ஒரு வீட்டில் இயங்கி வரும் இந்த வேத பாடசாலை, ஓர் ஆண்டுக்குள் பக்கத்து கிராமமான ராமநாதபுரத்தில் புதிய கட்டடத்துக்குப் போக இருக்கிறது.

"ஆறு வருடப் படிப்புக்கான நிதியை,



உஜ்ஜயினில் உள்ள மகரிஷி சந்திபனி ராஷ்ட்ரீய வேத வித்யா பிரதிஷ்டான் அமைப்பு கொடுத்து உதவுகிறது!" என்கிறார் தலைவர் கோபாலகிருஷ்ணன்.

சுமார் பத்து வருடங்களுக்கு முன் இதைத் துவக்கியவர் சி.ஆர். சுவாமிநாதன் என்ற சம்ஸ்கிருத அறிஞர்.

'தலைமுறை தலைமுறையாகச் சங்கிலித் தொடர் போல் நாம் காப்பாற்றி வரும் வேதங்களை, அடுத்த தலைமுறையினர் கற்க வாய்ப்புக் கொடுக்காவிட்டால் அந்தப் பழி நம் மீது அல்லவா விழும்?' என்றார் காஞ்சிப் பெரியவர்... அந்தப் பழியை தவிர்க்கும் வண்ணம் எழவுள்ள இந்தப் பாடசாலையை யாரும் வந்து பார்க்கலாம். இந்தச் சிறுவர்கள் சொல்லும் வேத கோஷங்களைக் கேட்கலாம்!" எனும் கிருஷ்ணன், "கட்டடம் உருவாக நிதி உதவ விரும்புவோர் வேத ரட்சண சமிதி, 1/524 சாத்தப்புரம், பாலக்காடு 678 003 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்" என்றும் சொல்கிறார்.

- சித்தார்த்



வெற்றி உங்கள் சாய்ஸ்!

மற்ற பறவைகளைவிட, பருந்து மிக அதிக உயரத்தில் பறக்கும் திறமை கொண்டது. அதைச் சிறிய கூண்டில் அடைத்து வைத்தால் அந்தப் பருந்து என்ன பாடுபடும்?

அது போன்றதுதான் மனித மனமும். அதனைக் கட்டுப்படுத்துவதோ, அடக்கி ஆள்வதோ எளிய காரியமில்லை.

அதனால் தான் சுவாமி விவேகானந்தர், மனத்தைக் கட்டுப்படுத்துபவனால் உலகையே கட்டுப்படுத்த முடியும் என்பதை விளக்க "மனத்தை வெற்றிகொள்; உலகையே வெற்றிகொள்ள முடியும்" என்று கூறியிருக்கிறார்.



• படம்: ஸ்ரீஹரி

ஒருமுறை என் தந்தையார் சுவாமி பார்த்தசாரதியிடம் ஒரு பத்திரிகையாளர், "ஸ்வாமி! நீங்கள் கீதையிலிருந்தும் இதர புனித நூல்களிலிருந்தும் ஏராளமான விஷயங்களை உபதேசம் செய்கிறீர்களே! அவற்றை நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறீர்களா? என்று கேட்டார்.

இப்படி ஓர் அதிரடிக் கேள்வி வந்ததும் எனது தந்தையார் பதற்றமடையவில்லை. அந்தப் பத்திரிகையாளர் மீது கோபப் படவில்லை. அவர் பொறுமையோடு அளித்த பதில் இதுதான்: "நான் எதை உபதேசிக்கிறேனோ, அதை என் வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறேன்; நான் என் வாழ்க்கையில் கடைப்பிடிக்கிற விஷயங்களை மட்டுமே இந்தச் சமுதாயத்துக்கு உபதேசிக்கிறேன். என்னால் கடைப்பிடிக்க முடியவில்லை என்றால், அப்படிப்பட்ட ஒரு விஷயத்தை நான் மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய மாட்டேன்."

17

உள்ளேயே... உடனேயே...

சுனந்தாஜி

என் தந்தை என்பதற்காக இந்த விஷயத்தை நான் குறிப்பிடவில்லை. அவர் ஓர் உதாரண புருஷர். அவரது வாழ்க்கை முறையிலிருந்து அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. அவருக்கு இப்போது வயது எழுபத்தி ஒன்பது. கடந்த ஐம்பத்து ஐந்து வருடங்களாக அவரது இடுப்புச் சுற்றளவில் ஒரு அங்குலம் கூட அதிகரிக்கவில்லை. உடலின் எடை அரைகிலோ அதிகரிக்கவில்லை. எந்த அளவுக்கு அவர் தன் உடல் நலத்தில் அக்கறை செலுத்தி வருகிறார்.

பொதுவாக, வேலையிலிருந்து ஓய்வு பெறுகிற வயது வந்துவிட்டால், தங்கள் 'ஆக்டிவ் லைஃப்' முற்றுப்பெற்றுவிட்டதாக பலரும் நினைத்து விடுகிறார்கள். அதன்பின் ஓட்டுக்குள் தன்னை இழுத்துக்கொண்ட நத்தையைப் போல வாழ்க்கை ஒடுங்கிப் போய்விட்டது என்று கருதுகிறார்கள். இன்னும் சிலர், நடுத்தரவயதைத் தாண்டிவிட்டாலே, 'இதோ வந்து விட்டது முதுமை!' என்று முடிவு செய்து விடுகிறார்கள். வாழ்க்கையில் ஒரு வித மெத்தனம் வந்துவிடுகிறது.



உடம்பு என்கிற கருவி நன்றாகவே இருக்கிறது. அதை இன்னும் நன்றாகப் பராமரித்து பல வருடங்களுக்கு முழுத் திறமையுடன் செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை இழந்து விடுகிறார்கள்.

இந்த அபிப்ராயம் தவறு என்பதைச் சுட்டிக் காட்டவே என் தந்தையாரைப் பற்றி இங்கே குறிப்பிட்டேன். அவரால் அப்படி வாழ முடியும் என்றால் மற்றவர்களால் ஏன் முடியாது? அதைவிட சிறப்பாகவும் கூட வாழ முடியும்.

எனது கீதை சொற்பொழிவுகளின் ஆரம்பத்தில் இறை வணக்கத்திற்காகக் கூறப்படுகிற உபநிஷத் வரிகளில் கூட "உடல் பலம் பெறுவதாக! நூறாண்டுகள் வாழ அருள் புரிவாயாக" என்று வருகிறது.

மனோரீதியாக, ஒரு மனிதன் பலமிழந்து விட்டது போல உணர்ந்தால், அது அவனது உடலையும் நிச்சயம் பாதிக்கவே செய்யும். மனோ ரீதியில் ஒருவன் திடமாக இருந்தால்தான், உடல் ரீதியிலும் பலமாக இருக்க

முடியும். முதுமையிலும் இளமையுடன் இயங்க முடியும்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் வாழ்க்கை இயந்திரத்தனம் மிகுந்து காணப்படுகிறது. ஒருவர், மாலையில், அலுவலகத்திலிருந்து வீடு திரும்பினார். தன் வீட்டு காலிங் பெல்லை அழுத்தி விட்டுக் காத்திருந்தபோது, மனைவி கதவைத் திறந்தார். அந்த மனிதர், "ஓ! நீயா?" என்று சொல்ல, அவர் மனைவி, "ம்... வேறு யார் என்று நினைத்தீர்கள்?" என்று கேட்டார்.

வாழ்க்கை மாறுதல் எதுவுமின்றி மிஷின் மாதிரியாகிவிட்டதன் வெளிப்பாடுதான் இது.

காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கைக்குப் போவது வரை நேற்று நீங்கள் என்னென்ன காரியங்களைச் செய்தீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். அதற்கு முதல் தினம் என்னென்ன செய்தீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். அதற்கும் முந்தைய தினம்?

இன்று காலை எழுந்தது முதல், இதுவரை என்ன செய்தீர்கள்? அடுத்து இரவு தூங்குவதற்குப் போகிறவரை என்னென்ன செய்ய வேண்டும்?

நாளை உங்களுடைய வேலைகளின் பட்டியல் என்ன?

எல்லாம் ஏறத்தாழ ஒன்று போலவே இருக்கும்! மனிதர்கள் மாறுபட்டாலும், சந்திப்புகள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கும். செயல்பாடுகள் ஒன்றுக்கொன்று பெரிதாக வித்தியாசப்படாது. இதனாலேயே வாழ்க்கை இயந்திரத்தனமாகிவிட்டது என்கிற எண்ணம் ஏற்படுகிறது. அலுப்புத் தட்டுகிறது! திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாக இருக்கிறதே என்று சலிப்பு ஏற்படுகிறது.

வாழ்க்கைக்குரிய அர்த்தத்தை, வாழ்க்கையின் தத்துவத்தை நீங்கள் புரிந்துகொண்டு விட்டீர்கள் என்றால், வாழ்க்கையின் இயந்திரத்தனம் போய் விடும். அலுப்பு அகன்று விடும்; சலிப்பு மறைந்துவிடும். வாழ்க்கை என்பது சந்தோஷமாய் நிமிடத்துக்கு நிமிடம் அனுபவிக்கத்தக்க ஒரு விஷயம் என்கிற உண்மை பிடிபடும். அதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டீர்கள் என்றால், இத்தனை நாளும் வெளியில் வேறு எங்கேயோ இருக்கிறது என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருந்த மன அமைதியும் சந்தோஷமும் உங்களுக்குள்ளேயே, உங்களுடனேயே இருந்து வந்திருப்பது தெரியும். அதனை உணர்ந்து அனுபவிப்பீர்கள்.

இதைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான், வாழ்க்கையில் சந்தோஷத்தை அனுபவிக்க, டெலிவிஷன் சீரியல்களில் மூழ்கிப் போகிறார்கள். அந்த சீரியல்களில் எதைக் காட்டுகிறார்கள்? இந்த உலகத்தில், குடும்பங்களில், தினந்தோறும் நடக்கிற சம்பவங்களை, நாம் தினசரி வாழ்க்கையில் சந்திக்கிற சாமானிய மனிதர்களைத்தான் காட்டுகிறார்கள். ஆனால் என்ன? யதார்த்தத்திலிருந்து சற்று அப்பாற்பட்டு, மிகைப்படுத்திக் காட்டுகிறார்கள். மனிதர்களும் பார்த்துப் பொழுதுபோக்குகிறார்கள்!

அதே சம்பவங்கள் தங்கள் குடும்



"அந்தத் தியேட்டர்ல ஏன் எல்லா சீட்டையும் எடுத்துட்டாங்க...?"

"படத்தைத் தியேட்டர்ல உட்கார்ந்து பார்க்க முடியலைன்னு பத்திரிகைல விமர்சனம் வந்திருக்காம்!"

- வீ. சாரதிடேச்சு

சுடோகு

		7		4			8	
4			2			7	6	
1	9							3
					5	3		7
9		2	7					
6							3	1
	3	4			1			2
	8			5		9		

இங்கே மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் தலா ஒன்பது கட்டங்கள் - அதாவது மொத்தம் 81 கட்டங்கள் உள்ளன. இவை 3 x 3ஆக ஒன்பது பெட்டிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. 1 முதல் 9 வரையிலான எண்களை இந்தக் கட்டங்களில் நிரப்ப வேண்டும்.

மேலிருந்து கீழ், இடமிருந்து வலம், 3 x 3 என்று எந்த ஒன்பது கட்டங்களிலும், 1 முதல் 9 வரையிலான எண்களை ஒரே ஒரு முறைதான் பயன்படுத்த வேண்டும். நோ ரிபீட்டு!

விடை: 62-ம் பக்கம்...



பத்தில், நடைபெறுகிறபோது, கவலைப்படுகிறார்கள்; மன அமைதியை இழக்கிறார்கள், டீ.வி சீரியல் போல சகஜமாய் எடுத்துக்கொண்டு, சந்தோஷப்பட முடிவதில்லை.

அதற்குக் காரணமென்ன? நம்முடைய மனது, வாழ்க்கையின் உண்மையான பொருள் என்ன, வாழ்க்கையின் தத்துவம் என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு அவசியமான பக்குவம் இல்லாததுதான்.

மனப்பக்குவம் ஏற்படுகிற அளவுக்கு நமக்கு ஞானம் இல்லை.

"ஆனால், எனக்கு ஞானம் இல்லை. எனக்கு விஷயம் தெரியாது" என்று வெளிப்படையாக ஒப்புக்கொள்ள எத்தனைபேர் முன் வருவார்கள்?

எனக்கு எல்லாம் தெரியும் என்கிற எண்ணம் கொண்டவர்கள்தானே பெரும்பாலானவர்கள்?

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் எவ்வளவு பெரிய விஞ்ஞானி? ஐன்ஸ்டீனின் கண்டுபிடிப்புகளுக்காக அவருக்கு ஒரு பெரிய பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்தார்களாம்.

பாராட்டு விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்கள் அனைவரும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனைப் பற்றியும் அவரது கண்டுபிடிப்புகளைப் பற்றியும், அவற்றால் இந்த உலகமும் மனித இனமும் அடைந்த பலன்களைப் பற்றியும் விலாவாரியாகப் பேசினார்கள்.

நிகழ்ச்சியின் முடிவில் ஐன்ஸ்டீனைப் பேசும்படிச் சொன்னார்கள்.

"எல்லா விஷயங்களையும், நீங்களே பேசிவிட்டீர்களே! நான் இனி எதற்காகப் பேசவேண்டும்?" என்று அவர் மறுத்தாராம்.

"சில வார்த்தைகளாவது கண்டிப்பாய்ப் பேசியே ஆகவேண்டும்" என்று அன்புடன் வற்புறுத்தினார்கள்.

தமது இருக்கையிலிருந்து எழுந்து வந்த ஐன்ஸ்டீன், ரத்தினச் சுருக்கமாக சிலவரிகளே பேசினார்.

அதைக்கேட்ட அனைவரும் "ஐன்ஸ்டீன் மாபெரும் விஞ்ஞானி மட்டுமல்ல; மகத்தான மனிதரும் கூட" என்று வியந்தனராம்.

அப்படி என்ன கூறினார் ஐன்ஸ்டீன்?...

(வெற்றி தொடரும்)

விருந்தாளிகள்

பாரதி தேவராஜ்

மாமாவும் அத்தையும் சென்னை வந்து மூன்று நாட்களாகின்றன. வெயிலில் வெளியே கோவில்களுக்குப் போய்விட்டு வந்ததும் சாப்பிட்டு அசதியில் இரண்டு பேரும் நன்றாய்த் தூங்கினார்கள். ராதாவுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது.

காலையில் பத்து மணியானால் ராகவன் ஆபிஸுக்குக் கிளம்பிவிடுவான். ஊரிலிருந்து வந்த இவர்களும் இப்படிக் கோவில், பஜார் என்று கிளம்பிவிட்டால் தான் மட்டும் என்ன செய்வதாம்? இரண்டு நாட்களாய் ரேஷன் சாமான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாமாவிடம் சொல்லத் தயக்கமாயிருந்தது.

"என்னம்மா ரேஷன் வாங்கியாச்சா?" - அவரே முடிச்சை அவிழ்த்தது நல்லதாய்ப் போயிற்று.

"இல்ல மாமா... உங்க மகனுக்கு எங்கே ஒழியறது?"

"அட நீ என்னம்மா... கார்டைக் கொடு... நான்போய் வாங்கிட்டு வர்றேன்."

மாமா புறப்பட்டுப் போய்விட்டார்.

பரணில் இருந்து துழாவி எடுத்த முறுக்குப் பிடியை மெனக்கெட்டு உப்பும் புளியும் போட்டுத் தேய்த்து தங்க நிறமாக்கிப் பெருமையாய்க் காட்டியபடி...

"அம்மா ராதா... இந்த வெங்கல முறுக்குப்பிடிக்கு வயசு எண்பதாறது. நாலு தலைமுறையோட சொத்து. அப்பப்ப கொஞ்சம் தேச்சு வைக்கக் கூடாதா? தேன் குழல்னா ராகவனுக்கு ரொம்பப் பிரியம். நான் பண்ணித் தர்றேன்" என்றாள் அத்தை.

காய்ந்த துணிகளை அள்ளியபடி ஹாலுக்கு வந்தபோது ராகவன் மதிய சாப்பாட்டுக்காகத் திரும்பியிருந்தான். டீவி முன்பாக உட்கார்ந்தபடி,

"எங்கே ராதா அம்மாவும் அப்பாவும் காணோம்?"

"அத்தை மாவு மிஷினுக்குப் போயிருக்காங்க, மாமா ரேஷன் கடைக்குப் போயிருக்காரு."

"ஏண்டி, அவங்களே ஒரு பத்து நாள் நிம்மதியா இருக்கலாம்னு வந்திருக்காங்க. அவங்களைப் போய் இப்படி வேலை வாங்கற?"

"உஷ்... அவங்க என்ன விருந்தாளியா? நமக்காக அவங்களே தான் விரும்பிச் செய்யறாங்க... வயசானவங்கள சும்மா உக்கார வச்சு உபசரிக்கிறது ஒரு தண்டனை மாதிரி. இப்படிக் கௌரவம் பார்க்காமல், உரிமையோடு நடத்தினால்தான் நம்மகிட்ட ஒரு நெருக்கம் இருக்குங்க."

ராதா சொன்னது சரி என்பதுபோல ரேஷன் பொருள்கள் வாங்கிய மகிழ்ச்சியுடன் ராகவனின் அப்பாவும் மாவு தூக்கோடு அம்மாவும் உள்ளே நுழைந்தனர்!



எங்களுடைய யுக்தி இவ்வாறு பலித்துவிட்டதைப் பற்றி நாங்கள் இருவரும் அசாத்தியமான சந்தோஷம் அடைந்தோம். பிறகு, வனஜா தினந் தோறும் தம்பியைப் பார்க்க வந்து கொண்டிருந்தாள். பகலெல்லாம் பெரும் பாலும் அவனுடைய வீட்டிலேயே கழிப் பாள். தம்பிக்கு நெருங்கிய உற்றார் உறவினர் யாரும் இல்லை. வீட்டில் தவசிப் பிள்ளையையும் சோக்ராவையும் லாம், நான் வேறு நாதஸ்வர வித்வான் களுடன் கச்சேரிக்குப் போக ஆரம்பித் தேன். ஒரு தடவை அந்த மாதிரி போய் விட்டுத் திரும்பி வந்தபோது, சிவக் கொழுந்து மிகவும் உற்சாகத்துடனே, ''மாமா! நானும் மனோரஞ்சிதமும் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறோம். இனிமேல், அவள் நாடக மேடை ஏறி நடிப்பதில்லை என்றும் தீர் மானமாகிவிட்டது'' என்று சொன்னான்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

திருவழுந்தூர் சிவக்கொழுந்து

தவிர வேறு யாரும் கிடையாது. அவர் களை நான் தயார்ப்படுத்தி வைத்திருந்தேன்.

கொஞ்ச நாளைக்கெல்



இது என்ன விபரீதமாக அல்லவா இருக் கிறது? ஏதோ, தம்பிக்கு உடம்பு குணமா வதற்காக இந்த ஏமாற்றத்துக்கு நான் சம்மதித்தேன். கல்யாணத்துக்கு எப்படிச் சம்மதிக்க முடியும்? எப்போதுமே அவனுக்கு உண்மை தெரியாமல் இருக் குமா? தெரியும்போது என்ன கதி ஆவது?

ஆனால் இந்த ஆட்சேபம் ஒன்றும் வனஜாவிடம் பலிக்கவில்லை, ''பிற்பாடு நானல்லவா கஷ்டப்படப் போகிறேன்? உங்களுக்கு என்ன?'' என்றாள். அழுது கண்ணீர்விட்டு எப்படியோ என்னைச் சம்மதிக்கப் பண்ணி விட்டாள். அவளுடைய தாயா ரையும் சம்மதிக்கச் செய்தாள்.

அடுத்த மாதம் திருநா கேசுவரம் கோயிலில் அவர் களுக்குக் கல்யாணம் நடத்திக்கொண்டு ஊருக் குத் திரும்பி வந்து சேர்ந் தோம்...''

இப்படிச் சொல்லி

கந்தப்ப பிள்ளை சொன்ன கதைகள் - 6

விட்டு, கந்தப்ப பிள்ளை சும்மா இருந்தார். ஏதோ பெரிய யோசனையில் ஆழ்ந்தவர் போல் தோன்றினார்.

"அப்புறம் என்ன?" என்று கேட்டேன்.

"அப்புறம் என்ன? மாப்பிள்ளையும் மருமகளும் சௌக்கியமாயிருக்கிறார்கள். மணிமணியாய் இரண்டு ஆண்பிள்ளைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன" என்றார்.

எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. அவர் சொல்ல வேண்டியது இன்னும் பாக்கி இருப்பதாகத் தோன்றியது.



"இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்டேன்.

"முந்திரிச் சோலை என்று கேட்டிருக்கிறீர்களா, சாமி? காரைக்காலுக்கும் முத்துப் பேட்டைக்கும் நடுவே மத்தியில் சமுத்திரக் கரையோரத்தில் இருக்கிறது. முந்திரிச் சோலை மாரியம்மன் கோயில் வெகு பிரசித்தம். கிராமம் வெகு அழகாயிருக்கும். சுற்றிலும் கண்ணுக்கெட்டிய தூரம் முந்திரி மரங்களும் சவுக்கு மரங்களும்தான். ஊருக்குக் கிழக்கே கொஞ்சதூரம் வரையில் இந்தத் தோப்புகள்; அப்புறம் நாணல் காடு. அதற்கும் அப்பால் அலை வீசும் சமுத்திரம். இடைவிடாமல் அலைகளின் 'ஓ'வென்ற சப்தமும் சவுக்குத் தோப்புகளின் 'ஹாய்' என்ற சப்தமும் கேட்டுக்கொண்டே இருக்கும்.

இந்த முந்திரிச் சோலைதான் என்னுடைய பூர்வீக கிராமம். இங்கே எனக்கு ஒரு சின்ன வீடும் கொஞ்சம் காணியும் உண்டு. சிவக்கொழுந்து, பெயரும் புகழுமாய் நன்றாயிருந்த காலத்தில், இந்தக் கிராமத்துக்கு இரண்டு மூன்று தடவை வந்திருக்கிறான். ஊர் தனக்கு ரொம்பப் பிடித்திருப்பதாகவும், எப்போதாவது கச்சேரி செய்வதை நிறுத்தினால், இந்த ஊரில் வந்து வசிக்கப் போவதாகவும் அடிக்கடி சொல்வான்.

கல்யாணம் ஆன சில நாளைக்கெல்லாம், தம்பி, "மாமா! நான் முந்திரிச் சோலைக்குப் போகப் போகிறேன். உங்கள் வீட்டை எனக்குக் கொடுக்க வேணும்" என்றான். அதெல்லாம் கூடாதென்று நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். "கண் பார்வை இல்லாமற் போனால் என்ன, தம்பி? அதற்காக நீ வாத்தியம் வாசிப்பதை நிறுத்திவிடக் கூடாது. அந்தக் காலத்தில் சரப சாஸ்திரியார் கண்ணில்லாமல் புல்லாங்குழல் வாசிக்கவில்லையா? கச்சேரி வராதோ என்று நினைக்காதே. ஏதேஷ்டமாய் வரும்" என்றேன்.

எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. "வேணுமானால் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். சில வருஷமாவது நான் கிராமத்தில் இருக்கப் போகிறேன். கொஞ்ச நாளைக்கு நாயனத்தையே நான் தொடப் போவதில்லை" என்று பிடிவாதமாய்ச் சொன்னான்.

அந்தப்படியே அவனும் வனஜாவும் முந்திரிச் சோலைக்குப் போய் விட்டார்கள். இன்னமும் அங்கேதான் இருக்கிறார்கள்.

அமரர் கல்கி



இவ்வாறு கந்தப்ப பிள்ளை மறு

படியும் கதையை முடித்தார். ஆனால் என் மனம் சமாதானம் அடையவில்லை. அவருடைய கதையில், இடிவிழுந்து சிவக்கொழுந்தின் கண் போனதைக்கூட நான் நம்பினேன். ஏனெனில், இம்மாதிரி அபூர்வ சம்பவங்களை நானே பார்த்திருக்கிறேன். ஆனால் வனஜா மனோ ரஞ்சிதமாக மாறி, சிவக்கொழுந்தை மோசம் செய்த விஷயத்தை மட்டும் என்னால் நம்ப முடியவில்லை. என்ன தான் கண் குருடாயிருந்தாலும், இந்த மாதிரி ஏமாற்றுவது சாத்தியமா?

அப்படிக் கல்யாணமே நடந்திருந்தாலும், பின்னால் தெரியாமல் இருந்திருக்குமா?

இப்படி எண்ணி, "அப்புறம், சிவக்கொழுந்துக்குத் தெரியவேயில்லையா? உங்களுடைய மோசத்தைக் கண்டுபிடிக்கவேயில்லையா?" என்று கேட்டேன்.

"ஸ்வாமி! இந்த எண்ணத்தினால் எத்தனை நாள் தூக்கம் பிடிக்காமல் கஷ்டப்பட்டிருப்பேன் என்று நினைக்கிறீர்கள்? தம்பி எப்போது உண்மையைத் தெரிந்து கொள்வானோ, அப்போது அவனுக்கு எப்படிப்பட்ட கோபம் வருமோ, என்ன செய்வானோ என்று எனக்குத் திக்திக்கென்று அடித்துக் கொண்டுதானிருந்தது. இந்தப் பயத்தினாலும் அவர்கள் பேரில் எனக்கிருந்த பிரியத்தினாலும் அடிக்கடி முந்திரிச் சோலைக்குப் போய்க் கொண்டிருந்தேன். நாலு மாதத்துக்கு ஒரு தடவையாவது கட்டாயம் போய்விடுவேன். இரண்டு பேரும் ரொம்ப சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதைப் பார்த்து நானும் சந்தோஷமடைந்தேன்.

இந்த மாதிரி ஒரு தடவை போயிருந்தபோது, வீட்டுக்கூடத்தில் தம்பியின் வாத்தியம் வைத்திருந்ததையும் அதன் பக்கத்தில் சுருதிப் பெட்டி ஒன்று இருந்ததையும் பார்த்தேன். வனஜாவை, "தம்பி இப்போது வாத்தியம் வாசிப்பதுண்டா?" என்று கேட்டேன். "சில சமயம் ராத்திரியில் வாசிப்பாங்க; நான் சுருதி போடுவேன்" என்று சொன்னாள்.

நல்லவேளையாகத் தவுல் எடுத்துக் கொண்டு போயிருந்தேன். அன்று ராத்திரி ரொம்பவும் பிடிவாதம் செய்து தம்பியை நாயனம் வாசிக்கச் சொல்லி, நானும் தவுல் அடித்தேன். ஆகா! அது என்ன வாசிப்பு? என்ன வாசிப்பு! சாமி! அது மனுஷ்யர்களுடைய சங்கீதமல்ல; தேவ சங்கீதம். ஒரு சமயம் அழுகை வரும்; ஒரு சமயம் சிரிப்பு



வரும். ஒரு நிமிஷம் எங்கேயோ ஆகாயத்தில் தூக்கிக் கொண்டு போவது போலிருக்கும்; அடுத்த நிமிஷம் மலை உச்சியிலிருந்து பாதாளத்தில் உருட்டி விடுவது போலிருக்கும்; ஒரு சமயம் ஊஞ்சலாடுவது போலிருக்கும். இன்னொரு சமயம் எழுந்திருந்து கூத்தாட வேண்டுமென்று தோன்றும். நடுவில் நடுவில் நான் தவுல் அடிப்பதை நிறுத்திவிட்டு, ஆஹா! ஆஹா! என்று ஆர்ப்பரித்துக் கொண்டிருப்பேன்.

இம்மாதிரி தம்பி வாத்தியம் வாசிக்கிற விஷயம் தெரிந்ததிலிருந்து, முன்னைக் காட்டிலும் அதிகமாகவே முந்திரிச் சோலைக்குப் போகத் தொடங்கினேன். நாளாக ஆக, தம்பியை ஏமாற்றிய விஷயமாய் எனக்குப் பயம் குறைந்து வந்தது. இனிமேல் அவனுக்கு எங்கே தெரியப் போகிறது என்றே நினைத்து விட்டேன்.

முந்திரிச் சோலையில் தம்பியும் வனஜாவும் போய்த் தங்கி மூன்று, நாலு வருஷம் இருக்கும். ஒரு தடவை நான் அங்கே போயிருந்தபோது, தம்பியின் முன்னால் ஞாபக மறதியாக, 'வனஜா!' என்று கூப்பிட்டுவிட்டேன். உடனே, என் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டேன்.



"வனஜாவா? அது யார், மாமா?" என்றான் சிவக்கொழுந்து.

"இங்கே யாருமில்லை, அப்பா! என் மருமகள் ஞாபகமாகக் கூப்பிட்டுவிட்டேன்!"

"அதனால் என்ன, மாமா! இவளும் உங்கள் மருமகள் தானே? வனஜா என்ற பெயர் உங்களுக்குப் பிடித்திருந்தால், அப்படியே கூப்பிடுங்களேன்" என்றான்.

'நல்லவேளை, பிழைத்தோம்' என்று நினைத்துக்கொண்டேன்!

அன்று ராத்திரி வழக்கம்போல் சிவக்கொழுந்து வாத்தியம் வாசித்தான். அவன் சஹானா ராகம் வாசித்த போது என்னால் சகிக்கவே முடியவில்லை. ஒரே பரவசமாய் 'ஆண்டவனே!' என்று அலறிவிட்டேன். வாசித்து முடிந்ததும், "தம்பி! கடவுளுக்கு அல்லவா கண்ணில்லை போலிருக்கிறது? இப்பேர்ப்பட்ட நாதவித்தையை உனக்குக் கொடுத்துவிட்டு, உன் கண்ணை எடுத்துக் கொண்டு விட்டாரே?" என்றுவாய்விட்டுக் கதறினேன்.

அப்போது சிவக்கொழுந்து புன்னகை செய்தபடி, "மாமா! ஸ்வாமி என் கண்ணை எடுத்துக் கொள்ளவில்லை. உண்மையில் எனக்குக் கண்ணைக்



கொடுத்தார். வனஜாவைக் காட்டிலும் இன்னொருத்தி ஒசத்தி என்று நினைத்தேனே? என்னைவிடக் குருடன் யார்?" என்றான்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன சொல்கிறாய், தம்பி!" என்றேன்.

"மாமா! எனக்குக் கண்ணில்லையென்று என்னை நீங்கள் ஏமாற்றப் பார்த்தீர்கள். ஆனால் உண்மையில் உங்களைத்தான் நான் ஏமாற்றினேன். முதல் நாள் ஆஸ்பத்திரிக்கு வந்தபோதே, இவள் வனஜாதான் என்று எனக்குத் தெரியும்" என்றான்.

அச்சமயம் அங்கு வந்த வனஜாவின் முகத்தைப் பார்த்தேன். அவளுடைய புன் சிரிப்பிலிருந்து அவளும் இதற்கு உடந்தைதான் என்று தெரிந்து கொண்டேன்.

"வனஜா! நீயும் சேர்ந்துதான் இந்தச் சூழ்ச்சி செய்தாயா? தம்பிக்குத் தெரியுமென்பது முதலிலேயே உனக்குத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"இல்லை, மாமா! கல்யாணத்துக்கு மறுநாள்தான் எனக்குத் தெரியும். ஆனால், உங்களுக்குச் சொல்லக் கூடாது என்று என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டாங்க! நீங்க அவரை ஏமாற்ற நினைத்ததற்காக உங்களைத் தண்டித்தார்களாம்!" என்றாள்.

"எப்படியும் நீங்கள் இரண்டு பேரும் ஒன்றாய்ப் போய் விட்டீர்களல்லவா? நான்தானே பிறத்தி மனுஷனாய்ப் போய் விட்டேன்? எனக்கென்ன வேலை இங்கே? நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

என் மனத்திற்குள் எவ்வளவோ சந்தோஷம். ஆனால், வெளிக்கு மட்டும் கோபித்துக் கொண்டவன் போல் நடித்தேன். அவர்கள் இரண்டு பேரும் ரொம்பவும் சிரமப்பட்டு என்னைச் சமாதானப்படுத்தினார்கள்.

ஒரு மாதிரியாகக் கோபம் தீர்ந்த பிறகு, "போனது போகட்டும், தம்பி! முதல் நாளே இவள் வனஜாதான் என்று உனக்குத் தெரிந்துவிட்டது என்றாயே? அது எப்படித் தெரிந்தது?" என்று கேட்டேன்.

அதற்குச் சிவக்கொழுந்து சொன்ன பதில் என்னை ஆச்சரியத்தில் பிரமிக்கும்படி செய்துவிட்டது.

"பகவான் ஒரு அவயத்தை எடுத்துக் கொண்டால், இன்னொரு அவயத்தைக் கூர்மையாக்கி விடுகிறார். மாமா! எனக்குக் கண் போச்சு; ஆனால் காது கூர்மை

யாச்சு. வளையல் குலுங்கியபோதே வனஜாதான் என்று தெரிந்து கொண்டேன். மேலும் மனோரஞ்சிதம் வந்திருக்க மாட்டாள் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். சென்ட்ரல் ஸ்டேஷனில் நான் என் பிரதிக்ஞைக்கு பங்கம் செய்து கொண்டிருக்கும்போது, அடுத்த அறையில் அவளுடைய போதைச் சிரிப்பைக் கேட்டேன். அப்போதே என் மனம் 'சீ!' என்று வெறுத்து விட்டது. அப்படிப்பட்டவளா என்னைப் பார்க்க வரப் போகிறாள்? ஒரு நாளுமில்லை. எனக்கேற்பட்ட ஆச்சரியமெல்லாம் நீங்கள் ஏன் அவ்வளவு பெரிய பொய் சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள் என்பது தான். அதன் காரணமும் நானே ஊகித்துக் கொண்டேன். நான் 'மனோரஞ்சிதம், மனோரஞ்சிதம்' என்று வெறுப்பினால் சொல்லிக் கொண்டிருந்ததைத் தப்பாக நினைத்துக்கொண்டு, இப்படி என்னை மோசம் செய்யப் பார்க்கிறீர்கள் என்று தெரிந்து கொண்டேன். இவள் 'பட முடியாதினித் துயரம்' என்று பாடியதும் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் எனக்குப் போய்விட்டது. மாமா! நீங்களும் ஒரு சங்கீத ரஸிகர் என்று சொல்லிக் கொள்கிறீர்களே? அந்த நாடகக்காரி பாட்டுக்கும் உங்கள் மருமகள் பாட்டுக்கும் எப்படி வித்தியாசம் தெரியாமல் போச்சு? ராகம், குரல், சங்கதிகள் எல்லாம் அப்படியே இருந்தது வாஸ்தவந்தான். ஆனால் அந்த நாடகக்காரியின் பாட்டிலே ஆத்மா கிடையாது; அது தொண்டைக்கு மேலிருந்து வந்த பாட்டு. ஆனால் உங்கள் மருமகளோ இருதய அந்தரங்கத்திலிருந்து பாடினாள். இந்த வித்தியாசம் உங்களுக்குத் தெரியவில்லையே?" என்றான்.

"இப்படி மருமகனும் மருமகளும் சேர்ந்து எனக்கு அசட்டுப் பட்டம் கட்டினார்கள். ஆனால் அதைக் குறித்து நான் வருத்தப்படவில்லை, ஐயா! என் தலையிலிருந்து ஒரு பாரம் நீங்கியது போலிருந்தது. எப்படியாவது குழந்தைகள் இரண்டு பேரும் சந்தோஷமாயிருந்தால் சரி! எனக்கென்ன வந்தது? சாமி! காடு வா வா என்கிறது. வீடு போ போ என்கிறது. இந்த உலகத்தின் சுகதுக்கங்களெல்லாம் அநுபவித்தாகிவிட்டது. தம்பியின் நாத வித்தையில் சொர்க்கத்தின் சுகத்தைக் கூட அநுபவித்துவிட்டேன். பகவான் எப்போது கூப்பிடுகிறாரோ அப்போது போகத் தயாராயிருக்கிறேன்..."

வண்டி விழுப்புரம் ஸ்டேஷனில் நின்றது. கந்தப்ப பிள்ளையின் 'சோக்ரா' பையன் வேறு வண்டியிலிருந்து வந்து ஏறி, அவருடைய பிரிக்காத படுக்கையையும் பெட்டியையும் தூக்கிக் கொண்டான். கந்தப்ப பிள்ளை தவுலை ஒரு தட்டுத் தட்டிப் பார்த்துவிட்டு அதைத் தாமே கையில் எடுத்துக்கொண்டு இறங்கினார். "போய் வருகிறேன், ஐயா! பட்டணத்துக்கு வந்தால் பார்க்கிறேன்!" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.



அன்றிரவு பாக்கி நேரமும் எனக்குத் தூக்கம் வரவில்லை. ஐயம்பேட்டைக் கந்தப்பன் கூறிய அதிசயமான சம்பவங்கள் திரும்பத் திரும்ப ஞாபகம் வந்தன அவையெல்லாம் உண்மையாக நடந்தவைதானா? அல்லது; அவ்வளவும் கந்தப்ப பிள்ளையின் கற்பனையா? மறுபடியும் அவரைப் பார்க்கும்போது விசாரித்து உண்மை தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் நிஜமாயிருந்தாலும் சரி, கதையாயிருந்தாலும் சரி, ஒருவிதத்தில் பரம திருப்தியாயிருந்தது. என்னுடைய கதைகளைப் போல் துயரமாக முடிக்காமல் 'பிள்ளை குட்டிகளுடன் சௌக்கியமாயிருக்கிறார்கள்' என்று மங்களகரமாகக் கதையை முடித்தாரல்லவா?

(தொடரும்)

அடுத்த இதழில்
கந்தப்ப பிள்ளை சொன்ன கதை:
'வீணை பவானி'

அ'டெங்கு' கொசுவே!

'கொசுக்களால் வியாதி பரவும்'. தெரியாதா என்ன? 'தேங்கிய நீரில் கொசுக்கள் அதிகம் இருக்கும்.' பள்ளிப் பாடத்திலேயே படித்ததுதானே? 'மழை பெய்து ஓய்ந்தபின் வீட்டைச் சுற்றிலும் தண்ணீர் ஆங்காங்கே தேங்கும் போது அதனால் வீட்டில் வசிப்பவர்களுக்கு மலேரியா,



• 'டெங்கு'வைப் பரப்பும் ஈடிஸ் கொசு

டெங்கு காய்ச்சல்கள் வந்து வாழ்க்கை முறையையே புரட்டிப் போடலாம்.' 'திக்' என்கிறதா?

ஒவ்வொரு வருடமும் சுமார் பத்து கோடிப் பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படுகிறார்கள் என்கிறது உலக சுகாதார மைய அறிக்கை. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் வசிக்கும் இடங்களின் பட்டியலில் இந்தியாவும் இருக்கிறது. மழைக் காலம் முடிந்த கொஞ்ச நாட்களிலேயே இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது. சமீபத்தில்தான் தமிழகத்தின் பல பகுதிகளில் வருணன் முழு வேகத்தோடு பொழிந்து கொண்டிருக்கிறாரே! திருவாளர் 'டெங்கு' குறித்து அதிகமாக அறிந்துகொள்ள வேண்டாமா?



விவரங்கள் அறிய மயிலை, ஜெயா க்ளினிக் டாக்டர் ஜி. சாய்ரமணனை அணுகினோம்.

டெங்கு காய்ச்சல் நான்கு விதமான வைரஸ்களால் பரவுகின்றன. டென் -1, டென்-2, டென்-3, டென்-4 என்ற திருநாமங்கள் கொண்டவை இவை. இவையனைத்துமே ஒருவரை அவர் வாழ்நாளில் வெவ்வேறு பகுதிகளில் பாதிக்கலாம். ஆனால் ஓர் அற்ப திருப்தி. ஒரு குறிப்பிட்ட வைரஸ் ஒருவரை ஒரு முறைதான் டெங்கு காய்ச்சலுக்கு ஆளாக்குகிறது.


இதனால், டெங்கு காய்ச்சல் வந்தால் நோயாளிக்கு வாழ்நாள் எதிர்ப்புசக்தி கிடைத்துவிடும் என்பது நிச்சயமல்ல. ஆனால், எங்கள் அனுபவத்தில் ஒருமுறை டெங்குக் காய்ச்சல் வந்தவருக்கு மீண்டும் வருவதில்லை எனக் கண்டறிந்திருக்கிறோம்.

வைரஸ்கள் புகுந்தவருக்கு இரண்டிலிருந்து ஏழு நாட்களுக்குள் அறிகுறிகள் தெரியத் தொடங்கும். மிகவும் பலவீனமாக உணர்வார்கள். பசி இருக்காது. கடுமையான தலைவலியுடன் சில சமயம் வாந்தி வரலாம். அடுத்த கட்டமாக அதீத ஜுரம், முதுகுவலி, மூட்டுவலி, கண்களை அசைக்கும் போது வலி, கண்ணில் மெகா சீரியல் பார்க்காத போதும் நீர் போன்ற அறிகுறிகள் தோன்றலாம். பிறகு, நடப்பது என்பதே நடக்காத காரியமாகிவிட, சோர்ந்து படுக்கையிலேகிடப்பார்கள். இவை தவிர (அல்லது இவற்றின் காரணமாக) மனச்சோர்வும் ஏற்படும். முதல் இரண்டு

நாட்களிலேயே உடலில் ஆங்காங்கே சிவப்புத் திட்டுகள் தோன்றும். வயிறு மற்றும் மார்புப் பகுதிகளில் தொடங்கி பிற பகுதிகளுக்கும் இவை பரவலாம்.

எனவே, கடுமையான ஜுரத்துடன், உடலில் சிவப்பு நிறத் திட்டுகள் தோன்றினால், அது டெங்குவாக இருக்கக் கூடும்... கவனக்குறைவாக இருந்தால், இறப்பும் நேரிடலாம்!

பரிசோதனையின்போது நிணநீர்ச் சுரப்பிகள் பெரிதாகி இருப்பது தெரிய வரும். ரத்தப் பரிசோதனையில் ரத்த வட்டுக்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகக் காணப்படும். உடனடியாக அவர்கள் உடலில் ரத்த வட்டுகளைச் செலுத்த வேண்டும். (ரத்தவட்டுக்களைத் தனியே பிரித்துச் செலுத்தலாம்).



தொடர்ந்து குறையாத காய்ச்சல் கொண்டவர்களின் உடலில் 'ஹைபர் டென்ஷன்' ஏற்படலாம். அதாவது தடாலென்று ரத்த அழுத்தம் குறைந்து விடுவது. இதனால் ரத்த ஓட்டமே தடைப்படலாம். இதன் உச்சகட்டமாக வயிற்றுப் பகுதியில் ரத்தக்கசிவு ஏற்பட்டு மலத்தின் மூலமாக அது வெளியேறும். கல்லீரலில் உள்ள என்சைம்களின் அளவுகள் அதிகமாகும்.

டெங்கு காய்ச்சலின்போது வெள்ளை அணுக்களின் எண்ணிக்கையும் குறையலாம். இவைதான் நோய் எதிர்ப்பு சக்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தளபதிகள் இறந்துவிட்டால் எதிரி நாட்டவர் வெகுவேகமாக ஆக்கிரமித்து விடுவார்களே அந்த நிலை தோன்றிவிடுகிறது.

டெங்கு காய்ச்சலுக்கு என்று தனியான சிகிச்சை கிடையாது என்றாலும் தீவிரத்தைக் கருதி மருத்துவரை நாடுவதே நல்லது. பாரசிட்டமால் மாத்திரைகள் பயன்படுத்தலாம். ஆஸ்பிரின் கூடாது - அது குடலில் ரத்தக் கசிவைத் தூண்டலாம். ஆண்டிபயாட்டிக் உட்கொள்ள வேண்டியிருக்கும்.

டெங்கு காய்ச்சலுக்கான தடுப்பூசி கண்டுபிடிப்பு இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. ஆனால் அதுவரை? 'வருமுன் காப்பதே சிறந்தது!'

நீர்த்தொட்டிகளுக்கு மூடி இல்லையா? மூடி இடுங்கள். கொசுவலை, கொசுவத்திச்சுருள் போன்ற கேடயங்கள் இல்லையா? பயன்படுத்துங்கள். வீட்டைச் சுற்றி நீர் தேங்குகிறதா? அகற்றுங்கள். அல்லது கொசு மருந்தையாவது அடியுங்கள். குடிநீரை மூடி வையுங்கள். இதை எல்லாம் மீறியும் காய்ச்சல் வந்து, வழக்கமான சிகிச்சைக்குக் கட்டுப்படாமல் ஜுரம் இழுத்துக்கொண்டு போனால் அருகிலுள்ள டாக்டரை அணுகுங்கள்.

- ஜி.எஸ்.எஸ்.

படம் : ஸ்ரீஹரி

டாலராய் மாறிய -நூதன மோசடி

நைஜீரியாவைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள். ஒரு சின்ன சூட்கேஸைத் திறக்கிறார் அவர்களில் தலைவன் போன்ற தோற்றம் கொண்ட மைக் பிரின்ஸ். பெட்டிக்குள்ளே பிளாஸ்டிக் காகிதத்தில் சுற்றி வைக்கப்பட்ட பாக்கெட்டுகள். ஒரு பாக்கெட்டைப் பிரிக்கிறான் மைக். ரூபாய் நோட்டு சைஸில் கறுப்பாய்க் காகிதங்கள். அதிலிருந்து ஒன்றை உருவி எடுக்கிறான்.

ஒரு டிரேயில் தண்ணீரை நிரப்பி அதில் ஒரு சின்னஞ்சிறு பாட்டிலிலிருந்து ஏதோ ஒரு திரவத்தைச் சில சொட்டுகள் விடுகிறான். பெட்டியிலிருந்து எடுத்த கறுப்பு நிறக் காகிதத்தை நனைக்கிறான். லேசாக அதனைத் தடவியதும், அடியாத்தா! டாலர் கரன்ஸி!

இன்னும் இரண்டொரு கறுப்பு காகிதங்களைக் கட்டிலிருந்து உருவி அவற்றையும் டாலர் கரன்ஸியாக்கிக் காட்டுகிறான்.



• "இந்தப் பெட்டியில் இருக்கும் அத்தனையும் அமெரிக்க டாலர் கரன்ஸி நோட்டுக்கள். இந்திய மதிப்பில் இவை ஒன்றரைக் கோடி." என்கிறான் மைக் பிரின்ஸ்.

இப்போது மைக், அவனது சகாக்களான பெஞ்சமின், மைக்கேல் மூவரும் சென்னை மத்திய சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நூதன மோசடியின் விவரங்கள் விறுவிறுப்பானவை. வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள சென்னை எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ரமேஷ் சொல்கிறார்.

"கடந்த மாதம் 25-ம் தேதி, நைஜீரியாக்காரர்கள் மூவரும் ஆட்டோவில் கோயம்பேடு போயிருக்கிறார்கள். ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை ஆட்டோக்காரரிடம் நீட்டியிருக்கிறார்கள். அவர் சில்லறை வாங்க அங்கிருந்த ஒரு கடைக்குப் போயிருக்கிறார். ஆட்டோக்காரர் ஆயிரம் ரூபாய்க்குச் சில்லறை கேட்டபோது கடைக்காரருக்கு ஆச்சரியம்.

மூன்று நைஜீரியாக்காரர்களும் தங்களை இந்தியாவில் படிப்பதற்காக வந்திருக்கும் மாணவர்கள் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு, "எங்களுக்கு நைஜீரியாவில் நிறையச் சொத்து இருக்கிறது. இந்தியாவின் பொருளாதாரம் சிறப்பாக இருப்பதால், இங்கே ஏதாவது முதலீடு செய்து தொழில் ஆரம்பிப்பதாக இருக்கிறோம். அதற்காக சரியான கூட்டாளிகளைத் தேடிக்கொண்டு இருக்கிறோம்" என்று சொல்லி இருக்கிறார்கள்.


கோயம்பேடு கடைக்காரர், "எனக்கு அவ்வளவு வசதி இல்லை" என்று சொல்லி, நெசப்பாக்கத்துக்காரரான பாலசுந்தரம் என்பவரை அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

பாலசுந்தரம் ஒரு கேடரிங் காண்டிராக்டர். அவரிடம் தங்கள் பிசினஸ் திட்டங்கள் பற்றி விவரித்த மைக், "எங்களுடைய முக்கிய டாக்குமெண்ட்களும் இதர பொருள்களும் அமெரிக்கத் தூதரகத்தில் சிக்கிக்கொண்டிருக்கின்றன. எண்ணூறு டாலர் செலுத்தி அவற்றை எடுத்துக்கொண்டு வர வேண்டும். எண்ணூறு டாலர் (நம் ரூபாயில் சுமார் 35 ஆயிரம்) உடனே கொடுத்து உதவ வேண்டும்" என்று கேட்டிருக்கிறான்.

பாலசுந்தரம் அவ்வளவு பெரிய தொகையைத் தர தயங்கியபோது, " நான் மட்டும் போய் அமெரிக்கத் தூதரகத்திலிருக்கும் லக்கேஜை எடுத்துக்கொண்டு பணத்துடன் மறுபடி வருகிறேன். அதுவரை இவர்கள் இருவரும் இங்கேயே இருக்கட்டும்" என்று சொல்ல, பாலசுந்தரம் பணத்தைப் புரட்டி மைக்கிடம் கொடுத்துவிட்டார்.

அடுத்த சில மணி நேரத்தில், ஒரு சிறிய சூட்கேஸுடன் திரும்பி வந்தான் மைக். தொடர்ந்து இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் விவரிக்கப்

• மைக்பிரின்ஸ்





காகிதம்!

பட்ட காட்சி அரங்கேறியது.

எதற்காக டாலர் கரன்ஸி நோட்டுக்களை இப்படி கறுப்பாக்கி வைத்திருக்கிறீர்கள்? என்று கேட்டபோது, மைக், ''பாதுகாப்பு காரணமாகத்தான், நாடு விட்டு நாடு, கரன்ஸி எடுத்துச் செல்கிறபோது, இப்படி எடுத்துச் செல்லுவதுதான் பாதுகாப்பு என்று அமெரிக்க அரசாங்கமே வற்புறுத்துகிறது'' என்று சொல்லி அமெரிக்காவின் கருவூலத் துறை அளித்துள்ளதாகச் சில தஸ்தாவேஜுகளைக் காட்டி இருக்கிறான் மைக்.

அவற்றில், கரன்ஸி நோட்டுகள் ஏன் கறுப்பு நிறமாக்கப்பட்டுள்ளன? ரசாயன திரவம் பயன்படுத்தினால் எப்படி நிஜ உருவுக்கு மாறும்? என்றெல்லாம் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

பாலகந்தரம் தான் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டபோது, "ரசாயன திரவம் தீர்ந்து போய்விட்டது. மலேசியாவிலிருந்து, டெல்லி வழியாகத் திரவம் கைக்கு வந்து சேர சில நாட்களாகும். அதுவரை பொறுத்துக்கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டனர்.

பத்து நாட்களாகியும் பாலகந்தரத்தின் பணம் திரும்ப வரவில்லை. நைஜீரியாக்காரர்களுக்கு ஃபோன் செய்தபோதெல்லாம் திரவம் வராததற்கு ஏதாவது ஒரு காரணம் சொன்னார்கள். தாம் ஏமாற்றப்பட்டு விட்டோமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது பாலகந்தரத்துக்கு. போலீசில் புகார் கொடுத்துவிட்டார்.

நைஜீரியாக்காரர்களுடன் தொடர்பு கொண்டு உடனே சந்தித்துப் பேச விரும்புவதாகச் சொல்லி, தம் இடத்துக்கு வரவழைத்த பாலகந்தரம், போலீஸுக்கும் தகவல் கொடுத்தார்.

மைக், பெஞ்சமின், மைக்கேல் மூவரையும் மடக்



• பறிமுதல் செய்யப்பட்ட பாஸ்போர்ட்கள்

கிப் பிடித்தது போலீஸ். அவர்கள் மோசடி செய்த பணம் மீட்கப்பட்டு விட்டது. அவர்களது பாஸ்போர்ட்களைப் பறிமுதல் செய்திருக்கிறோம். அவை போலியாக இருக்குமோ என்று சந்தேகமாக இருக்கிறது. விசாரணையின்போது, அவர்கள் இந்தியாவுக்கு, படிப்பதற்காக வரவில்லை என்பது தெளிவானது. பறிமுதல் செய்யப்பட்ட கரன்ஸி நோட்டுக்களைத் தட அறிவியல் பரி சோதனைக்கு அனுப்ப விருக்கிறோம். இவர்கள் இதுபோல வேறு எங்கெங்கே மோசடி செய்திருக்கிறார்கள்? இவர்களுக்கு வேறு கூட்டாளிகள் உண்டா? என்று புலனாய்வு செய்து கொண்டிருக்கிறோம். அயல் நாட்டுப் பிரஜைகள் ஈடுபட்டுள்ள மோசடி என்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் இதைக் கையாள்கிறோம்'' என்று கூறினார் இன்ஸ்பெக்டர் ரமேஷ்.

- எஸ். சந்திரமௌலி

படங்கள்: **கௌதம்**

"நான் ஒண்ணும் பயந்துடல!"

பட்டாபி பாஸ்கர் 'தில்'

'சிவகாசி' படத்தில் தான் வெளுத்து வாங்கிய வக்கீல் கேரக்டர் சர்ச்சையில் சிக்கிக் கொண்டதில் ஏக வருத்தத்தில் இருக்கிறார் 'பட்டாபி' எம்.எஸ். பாஸ்கர். அவருடன் ஒரு மினி பேட்டி.

என்ன சார்... ரொம்ப பரபரப்பா இருக்கீங்க போல...?

அதை ஏன் கேட்கறீங்க? அந்த கேரக்டர் ஒரு வேலையில்லாத வக்கீல் கேரக்டர். அது தொடர்பா சின்னச் சின்ன காமெடி சீன்கள் வச்சது இவ்ளோ பெரிய சர்ச்சையா வெடிக்கும்னு கனவுலகூட நினைக்கல. இப்போ வேலூர் கோர்ட்ல போட்ட வழக்குல என் பெயரையும் சேர்த்திருக்கறதா தகவல் வந்திருக்கு. மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு.

நடிக்கறப்போ இந்த மாதிரி பிரச்னை வரும்னு யோசிக்கலையா...?

அய்யா... ஆண்டவன் மேல ஆணையா யாரையும் கேவலப்படுத்தணும்ங்கற எண்ணம் எங்க யாருக்குமே இல்ல. அதை நாங்க காமெடியாத்தான் பார்த்தோம். அது சில பேருக்குத் தப்பா தெரிஞ்சுருக்கு. அது மட்டுமில்லாம இந்த மாதிரி விஷயத்தை அந்த கேரக்டரை உருவாக்கறவங்கதான் சிந்திக்க முடியுமே தவிர என்னை மாதிரியான ஆர்டிஸ்ட்டுகள் அதுவும் வளர்ந்து வர்ற நிலையில இது பற்றிச் சிந்திக்க முடியாது. இதுதான் நிலைமை.

அப்போ... இனிமே வக்கீல் கேரக்டர்னாலே எகிறிக் குதிச்சு ஓடிடுவீங்களா...?



• ஷில்பா



• தாரிகா



• அஜய்

• ராடனின் தயாரிப்பான 'சின்னப்பாப்பா - பெரிய பாப்பா' முடிந்துவிட்டதால், அடுத்த காமெடி ப்ராஜெக்ட் சுடச்சுடத் தயாராகி வருகிறது. அதில் பிரபல சினிமா காமெடியன் சின்னத் திரைக்கு ரீ என்ட்ரி ஆகிறாராம்.

• தேவர் இன அமைப்புகள் சார்பாக நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் புவனேஸ்வரி கலந்து





அய்யோ... சான்ஸே இல்ல. என்னோட ஆடியன்ஸைத் திருப்திப்படுத்த கொகவாக்கூட நடிச்சுட்டேன். அதனால எந்த கேரக்டரையும் பண்ணத் தயாரா இருக்கேன். இப்பவும் சொல்றேன். நான் ஒண்ணும் பயந்துடல... மனசு வருத்தமா இருக்கு... அவ்னோ தான்.

எப்படியோ... கேரக்டர் செம ஹிட் ஆயிடுச்சு. அடுத்தடுத்து வெளுத்து வாங்குங்க பாஸ்கர்.

கொள்கிறார். அதுவும் 'தேவரின் திருமகள்' என்ற அடைமொழியுடன்... (வம்பை விலைக்கு வாங்கும் வயசுடா...!)

• 'நிஷா'விலிருந்து 'தாரிகா'வுக்கு மாறிவிட்ட பின்னரும்கூட அம்மணிக்கு 'கெட்டிமேளம்' சீரியலைத் தவிர வேறு சொல்லிக் கொள்கிற மாதிரி சீரியல் எதுவும் கமிட் ஆக வில்லையாம். (அப்போ அடுத்தது கெட்டிமேளம்தானா?)

• 'கோலங்கள்' ஆதித்யா அஜய் ஸ்க்ரிப்ட் எழுதுவதில் அதிக நேரம் செலவிடுகிறார். இப்போதே நாலைந்து ஸ்க்ரிப்டுகள் அஜய் வசம் ரெடியாக உள்ளதாம்... ஹலோ... புரொடியூசர்ஸ்... காதுல விழுந்துச்சா...?



• புவனேஸ்வரி



• அர்ச்சனா

• கையில் கலர்கலரான டாட்டூக்களை வரைந்துகொண்டு விழாக்களுக்கு செல்வது என்றால் ஷில்பாவுக்கு ஏகப் பிரியம்.

• சன் டி.வி., கே டி.வி. சிறப்பு நிகழ்ச்சிகள் என்றால் மற்ற எவரையும் விட அதிக முன்னுரிமை 'காமெடி டைம்' அர்ச்சனாவுக்குத்தான் தரப்படுகிறதாம்.

- முராரி

படம்: ராஜன்

வாரம் ஒரு வாசகர் குடும்பம்

பூஜை அறையிலிருந்து ஜன்னல் வழியாக, சாம்பிராணிப் புகையுடன் கலந்து அந்தப் பாடல் வாஜஸ்பதி ராகத்தில் மிதந்து வந்தது. "பராத்பரா பரமேஸ்வரா... பார்வதிபதே ஹர பசுபதே... பராத்பரா..." மனம் கசிந்துருகிப் பாடிக்கொண்டிருந்தவர் லலிதா நாராயணன். உடன் உட்கார்ந்து லயித்துக் கேட்டவர்கள் ஏ.வி. நாராயணன், மாமியார் காந்திமதி. பூஜை அறையிலிருந்து வெளிப்பட்டவர்களை, சுப முகூர்த்த வேளையில் வாரம் ஒரு வாசகர் குடும்பத்துக்காகச் சந்தித்தோம்.

கடந்த பத்தாண்டுகளாக, டால்மியாபுரம் சிமெண்ட் ஆலை குடியிருப்பில் வசித்து வருகிறது ஏ.வி. நாராயணனின் குடும்பம். நாராயணனின் பிறந்த ஊர் ஆறுமுகமங்கலம் கிராமம். அவரது மனைவி லலிதாவின் பிறந்த ஊர் அரியநாயகிபுரம். இருவருமே திருநெல்வேலி மாவட்டம். சென்னை, கிண்டி இன்ஜினியரிங் கல்லூரியில் பி.இ. முடித்தவர், தன் மாமன் மகளையே திருமணம் செய்துகொண்டார். மும்பையில் இரண்டு ஆண்டுகள் டாடா பவர் கம்பெனியில் பணி புரிந்த பிறகு திருச்சி பாய்லர் ஆலையில் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார். அப்போது பாய்லர் ஆலை இயங்கத் துவங்கிய சமயம். பாய்லர் தயாரிப்புத் தொழில் நுட்பம் அறிந்துகொள்ள வேண்டி, 1964-ல் செக்கோஸ்லோவேகியா நாட்டுக்கு 65 நபர்களைத் தேர்வு செய்து அனுப்பி வைத்தது பாய்லர் ஆலை நிர்வாகம். அதில் ஒருவர் ஏ.வி. நாராயணன். அதன் பின்னர் ஏழெட்டு ஆண்டுகள் கழித்து, அமெரிக்காவுக்கு ஒரு குழுவை அனுப்பி வைத்தது திருச்சி பாய்லர் ஆலை நிர்வாகம் அந்தக் குழுவிலும் ஒரு நபராக இடம் பெற்றிருந்தார் நாராயணன். பாய்லர் ஆலையில் வடிவமைப்புப் பிரிவில் (1985-94) பொது மேலாளராகப் பணியாற்றினார். 94-ல் டெல்லி பி.ஹெச்.இ.எல்லுக்கு எக்ஸிகியூட்டிவ் டைரக்டராகப் பதவி உயர்வு பெற்றார்.



டால்மியாபுரம் சிமெண்ட் யூனிட்டுக்கு அவர் விரும்பி வந்து இணைந்தது 1995 டிசம்பரில். சிமெண்ட் தயாரிப்புப் பிரிவில் எக்ஸிகியூடிவ் டைரக்டராக பணியாற்றிய இவர், தற்போது கேசவ் பவர் பிரைவேட் லிமிடெடின் இதன் முழு நேர இயக்குனராக இருக்கிறார்.


“எங்களுக்கு இரண்டு பெண்கள்” என்று எளிய முன்னுரையுடன் தொடங்கினார் லலிதா நாராயணன். "மூத்த பெண் ராதிகா, கணவர் விஸ்வநாதனுடன் மஸ்கட்டில் வசித்து வருகிறார். இளைய பெண் ரேணுகா, கணவர் ஈஸ்வருடன் அமெரிக்காவில் வசித்து வருகிறார். அவர்களும் கல்கி வாசகிகள்தாம்" என்று

பூரித்தார் லலிதா. முறைப்படி கர்னாடக இசை பயின்று தேர்ச்சி பெற்ற இவர், இருபது ஆண்டுகளாக திருச்சிராப்பள்ளி, அகில இந்திய வானொலியில் பாடி வரும் பி ஹைகிரேடு கர்னாடக இசைப் பாடகி.

"கல்கியில் டிசம்பர் சீஸனில் வெளியாகும் சங்கீதக் கட்டுரைகள் என்னை மிகவும் ஈர்க்கும். கர்னாடக இசை சார்ந்த விமர்சனங்கள் மிகவும் துல்லியமாய் அமைந்திருக்கும். கல்கியின் 'கந்தப்ப பிள்ளை சொன்ன கதைகள்' தற்போது மறுபிரசுரம் பெற்று வருகிறது. இன்றைய இளம் வாசகர்களுக்கு அது ஓர் அரிய பொக்கிஷம். அதேபோல அமரதாராவை மறு பிரசுரம் செய்வீர்களா?'' என்று மிகுந்த ஆர்வத்துடன் கேட்கிறார் லலிதா.

"பொன்னியின் செல்வன், பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம்' என 'கல்கி'யின் முத்திரைப் படைப்புகள் மூன்று. அவற்றை என் வாழ்க்கையில் திரும்பத் திரும்பப் பலமுறை வாசித்து, அதன் களங்களில் நானும் ஒரு பாத்திரமாகப் பழகி, கற்பனையில் உலவி வந்துள்ளேன். பணி நிமித்தமாக டெல்லிக்குப் போனாலும், அமெரிக்கா போனாலும் எப்பொழுதும் நான் தொடர்ந்து வாங்கிய ஒரே தமிழ் வார இதழ் கல்கி!'' என்று உற்சாகமாகப் பேசுகிறார் நாராயணன்.

"நாற்பத்தி ஆறு வயதில் 1952-ல் என் கணவர் இறந்து போனார். எனக்கு நான்கு பையன்கள். இரண்டு பெண்கள். அப்பொழுது பெரியவனுக்கு வயது இருபது. கடைசிப் பையனுக்கு வயது பன்னிரண்டு. இந்த ஆறு பிள்ளைகளையும் படிக்க வைத்து, உத்யோகத்தில் அமர்த்தி, அதில் இரண்டு பெண்களுக்குத் திருமணம் செய்து, பகவான் ஒவ்வொருவரையும் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறான் என்றுதான் சொல்ல வேண்டும். தற்போது நான், என்னுடைய கடைசி மகன் நாராயணனுடன் வசித்து வருகிறேன். என் மகன்களில் ஒருவர் ஏ.வி. கணேசன். அவர் ஐ.ஏ.எஸ் அதிகாரியாக டெல்லியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது சென்னையில் வசித்து வருகிறார். ஜெனிவாவில் இயங்கி வரும் WTO எனப்படும் உலக வர்த்தக அமைப்பின் நீதிபதிகளில் அவரும் ஒருவர். அந்த அமைப்புக்கு உலக நாடுகளிலிருந்து ஏழு நபர்கள் நீதிபதிகளாகத் தேர்வு செய்யப்பட்டார்கள். அந்த ஏழு நீதிபதிகளில், இந்தியாவிலிருந்து தேர்வு செய்து அனுப்பி வைக்கப்பட்ட ஒரே ஒரு நபர், என் மகன் ஏ.வி. கணேசன். என் மகன்கள் நாலு பேரும் நான்கு வகை ரத்தினங்கள்!'' எனச் சொல்லிப் பூரிப்படைகிறார் 92 வயதாகும் காந்திமதி. இவர் கல்கியின் அறுபது வருட வாசகி!




கற்பனையாக உலவி... பாத்திரமாகப் பழகி...

பெருங்கடன் தீர்த்தது குசேலன்
கைப்பிடி அவல்!
பிறவிப் பெருங்கடல் மீட்கும் என்
திருவடி நிழல்..

- ஸ்ரீ கிருஷ்ணன்

எங்கே என் கண்ணன்?





அனுராதாவின் முகத்தில் பரவிய ஆச்சரிய அதிர்வை கணேஷும் கவனித்தான். அருகில் வந்து அந்த மூங்கில் பெட்டியை அவன் பார்த்தான். கொஞ்சம் பகிரென்றது.

"ஐயோ, இது அந்த ஸ்ரீனிவாசன் சார் பெட்டியாச்சே?'' என்றான் சட்டென்று...

''அப்ப அவர்கிட்ட இருக்கற பெட்டி...?''

''பெட்டி மாறிடுச்சு... எப்படி இப்படி ஆச்சு...? என் பெட்டில எதுவும் கிடையாதே.. தூக்கும்போது வெயிட்டை வெச்சுக் கூட அவர் இது நம்ம பெட்டி இல்லைன்னு தெரிஞ்சுக்கிட்டு இருக்கலாமே...?''


- முணுமுணுத்தபடி குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

"அது எப்படி அச்சு அசலா அவர் பெட்டி மாதிரியே ஒரு பெட்டி உங்களுக்கு இந்தக் காசியில கிடைச்சது?''- அனுராதா இப்படி ஒரு கேள்விக்கு மாறினாள்.

இருவர் முகத்திலும் சலன ரேகைகளின் ஓட்டம்... அனுராதாவோ குனிந்து அந்தக் கண்ணன் விக்ரகத்தைத் தொடப் போனாள். திடீரென கரண்ட் கட் ஆகி இருண்ட சூழல் தோன்ற அவள் கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு

நிமிர்ந்தான்.

"போச்சுடா... இந்த ஊர்ல கரண்ட் போனா வரதுக்கு பல நாள் கூட ஆகும்..." - என்றபடியே மெழுகுவத்தியைத் தேடினான் கணேஷ்... "அந்த மனுஷன் நாளைக்



குக் காலைல பூஜைக்காக டெல்லியில பெட்டியைத் திறக்கும்போது அவருக்கு ஹார்ட் அட்டாக்கே வந்தாலும் வந்துடும்னு நினைக்கறேன்..." என்றபடியே தீக்குச்சியை உரச ஒரு தீபச் சுடர்தோன்றி மஞ்சள் பூசிய வெளிச்சம் அறைச் சதுரத்துக்குள் பரவியது.

"க்ஷேத்ராடனம்தானே போறாங்க... வழியில ஒரு நாள் பூஜை செய்யலைன்னா தான் என்ன?"

"ஒரு நாள் இல்ல... எப்பவுமே எதுக்கு பூஜைங்கறது என்னோட கேள்வி?"

"ஓ... உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இல்லைல்ல?"

"உங்களுக்கு?"

"எனக்கு இருக்கு... ஆனா அதுக்காக இப்படித் தினசரி பூஜை ஆசாரம் அப்படி இப்படின்னு அலட்டிக்கற அளவு எனக்கு பக்தி வெறி கிடையாது..."

– அதைக் கேட்டு கணேஷ் ஒரு மாதிரிச் சிரித்தான்.

"ஒரு விதத்துல அந்த ஜோசியர் சொன்னபடியே நடந்தாச்சு... ஒரு வேளை அந்த ஆள்தான் பெட்டியை மாத்தி வெச்சு ஏதாவது கோல்மால் பண்ணிட்டாரோ?" என்று உதட்டை சுழித்தவனை, 'யார் அந்த ஜோசியர்?' என்கிற கேள்வியோடு பார்த்தாள் அனுராதா.

"ஜோசியர் என் ஊர்க்காரர். எதிர்பாராதவிதமா அவரைச் சந்திச்சேன் என்று எல்லா விவரங்களையும் கூறி முடித்தான். "எனக்குத் தெரிஞ்சு ஜோசியர் யாரும் வந்த மாதிரித் தெரியல..." என்ற அனுராதாவிடம் குபீரென்று ஒரு மாற்றம். பெட்டியை ஒரு புதிய பரவசத்தோடு பார்த்தாள். மெழுகுவத்தி வெளிச்சத்தில் உள்ளிருக்கும் கண்ணனும் சாளக்கிராம கற்களும் சன்னமாக மின்னிக் கொண்டிருந்தன.

"என்ன மிஸ் அனுராதா... நான் சொல்ற இந்த விஷயங்கள் எல்லாமும் கூட உங்க தீபாவளி மலர் கட்டுரைல வருமா..? நீங்க யோசிக்கறத பார்த்தா இதுல எல்லாம் ஏதோ இருக்கறமாதிரி நீங்க நினைக்கறீங்கன்னு நினைக்கறேன்..."

"ஆமாம் மிஸ்டர் கணேஷ்... உங்களை மாதிரி இதை ஜஸ்ட் ஒரு

இந்திரா செளந்தர்ராஜன் 18

கோஇன்சிடென்ட்டா என்னால நினைக்க முடியல. கோஇன்சிடென்டுன்னா ஒரு விஷயம் நடக்கலாம், இல்ல இரண்டு... ஆனா இங்க வரிசையா பல விஷயங்கள். ஆமா, அந்த ஏட்டுக்கட்டு, நோட்டுக் இதை எடுத்து படிச்சுப் பார்த்தீங்களா?"

"சாரி... அதுக்கு எனக்கு நேரமும் இல்லை... அதுல எனக்கு விருப்பமும் இல்லை..."

"ப்ளீஸ் நான் அதை எடுத்துப் படிச்சுப் பாக்கட்டுமா?"

"தாராளமா... ஆனா ஒண்ணு இதை எடுத்துப் படிச்சுட்டு ஆஹா ஓஹோன்னு அந்த ஸ்ரீனிவாசன் பேசின மாதிரி மட்டும் பேசாதீங்க... பைதபை, நான் மும்பை புறப் படணும் உங்க பயணத்திட்டம்?"

"என் பயணத் திட்டம்..."

"டிக்கெட் கிடைச்சா கிளம்பிடுவீங்க இல்லையா?"

– அனுராதா பதில் கூறாமல் அவனையே வெறித்தாள்.

"என்ன மேடம்... உங்களைத்தான்."

"நானும் கிளம்பணும்தான். ஆனா எனக் கென்னமோ இங்க சில நாட்கள் இருக் கலாம்னு தோணுது."

"சரி நீங்க இருங்க, நான் கிளம்பறேன்..."

"ஆமா இந்தப் பெட்டியை என்ன செய் யப் போறீங்க?"

"மிஸ்டர் ஸ்ரீனிவாசன் எப்படியும் போன் பண்ணுவார். திரும்பும்போது காசி வந்து பெட்டியை எடுத்துக்கிட்டு போங் கன்னு சொல்ல வேண்டியதுதான்..."

"இதுக்காக திரும்பி வருவாரா?"

"என்னைக் கேட்டா இந்த பெட்டிக்காக அவர் உயிரையே கூட விடுவார். இங்க வர்றதுதானா விஷயம்? முன்னூறு வருஷத் துல ஒரு நாள் கூட தவறாம பூஜை பண்ணின விக்ரகம்னு அவர் சொன்னது ஞாபகத்துக்கு வருது... பாவம்... நாளைக்கு பூஜை பண்ண முடியலையேன்னு ஒப்பாரி வைக்கப் போறார்..."

"கேட்கவே சங்கடமா இருக்கு... அவ ருக்கு அப்படி ஒரு நிலை வரக் கூடாது..."

"சுனாமி கூடத்தான் வரக்கூடாது... ஆனா வந்ததே...! அதோட ஒப்பிட்டா இது சுண்டைக்காய் பெறாத விஷயம். அசட்டுத் தனமான செயல்களுக்கும் ஒரு நாள் முடிவு வரும். இப்ப வந்திருக்கறதா நான் நினைக் கறேன்..."

"மிஸ்டர் கணேஷ்... இதை ஒரு பக்திக் குரிய விஷயமாவே நீங்க நினைக்காதீங்க. நான் ஸ்டாப்பா நடக்கற ஒரு விஷயம் இது. நீளமா முடி வளர்க்கறது, பின்னாலேயே பல மைல்கள் நடக்கறதுங்கற ஒரு கின்னஸ் சாதனை மாதிரி இதை நினைக்கலாம் இல்லையா?"

"சரி... என் இடத்துல இருந்தா நீங்க என்ன செய்வீங்க... கமான்... அவரை மாதிரி என்னைப் பூஜை செய்யச் சொல்வீங்களா...?

- பேச்சின் போக்கில் கணேஷ் கேட் டதை கப்பென்று பிடித்துக் கொண்டாள் அனுராதா.

"ஏன் செய்யக் கூடாது?"

"வாட் நான்சென்ஸ் யு ஆர் டாக்கிங்... நான் பூஜை பண்ணினா பார்க்கச் சகிக்



சுடோகு விடை

2	6	7	9	4	3	1	8	5
4	5	3	2	1	8	7	6	9
1	9	8	5	7	6	4	2	3
8	4	6	1	2	5	3	9	7
3	7	5	8	6	9	2	1	4
9	1	2	7	3	4	6	5	8
6	2	9	4	8	7	5	3	1
5	3	4	6	9	1	8	7	2
7	8	1	3	5	2	9	4	6

குமா? கசாப்புக் கடைக்காரன் அஹிம்சை பத்திப் பேசற மாதிரி இருக்கும்..."


"அதுவும் சரிதான்... அடுத்து எப்படி பூஜிக்கறதுங்கறதும் முக்கியமில்லையா?"

"வேண்டாம்... இந்தப் பேச்சை இதோட விட்ருங்க..." என்று அவள் ஒரு முற்றுப் புள்ளி வைத்த போது, அவனை செல் போனில் ஆடிட்டர் அழைத்தார்.

''என்னங்க டிரைவர் வெளியே குதிக்கப் போறாரு! வீட்டில் சண்டையா?"

"இல்லீங்க... பஸ் பிரேக் பிடிக்கலையாம்!"

– வே. முருகேசன்



"கணேஷ்... மும்பை போகப் போறதா மடத்து மேனேஜர் சொன்னார்... உன் அப்பாவை தேடித்தானே?"

"ஆமாம் சார்... இங்க பாக்க வேண்டிய ஃபைல்லை எல்லாம் பாத்துட்டேன் சார். அவசியப்பட்டா அடுத்த மாசம் ஒரு நாலு நாள் வந்துட்டுப் போனா போதும்னு நினைக்கறேன்."

"அதான் இல்ல... அங்கேயே நீரஜ் குமார்னு ஒருத்தர் ஒரு ஆட்டோ மொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் பிசினஸ் பண்ணிக்கிட்டிருக்கார். அவரோட அக்கவுண்ட்ஸை அண்டர்டேக் பண்ணச் சொல்லி போன் பண்ணினார். லோக்கல்ல இருந்த அவரோட ஆடிட்டர் ஹார்ட் அட்டாக்ல போய்ட்டாராம். எனக்கு அவர் நல்ல பழக்கம்... அந்த ஆடிட்டர் நிறைய குளறுபடியெல்லாம் வேற பண்ணி வெச்சுருக்காராம். என்ன சொல்றே?"

"சாரி சார்... அப்பா பத்தி தகவல் கிடைச்சிருக்கற நிலைல நான் இவ்வளவு நேரமா இங்க இருக்கறதே தப்பு. நீங்க அங்க இருந்து கதிரேசன் இல்ல மாணிக்கவேலை அனுப்பிக்கொடுங்க சார்."

"இப்படிச் சொல்வேன்னு எனக்குத் தெரியும். இதுல கதிரேசனுக்கு ஜான்டிஸ். மாணிக்கவேல் ஜலந்தர் போயிருக்கான்..."

"சார்ர்ர்!"

"உன் அப்பாவை மும்பைல தேட வேண்டியது என் பொறுப்பு. அங்க ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸியை எனக்குத் தெரியும். உன் வீட்டுக்குப் போய் உன் அப்பா போட்டோவை வாங்கி நாளைக்குக் காலைல வாங்கிக்க ஏற்பாடு பண்றேன். நீ இங்க நீரஜ் அக்கவுண்ட்ஸை பார்... கோடிக்கணக்குல டர்ன் ஓவர் பண்றவன். தன்னோட டர்ன் ஓவர் டீடெய்ல்ஸ் லோக்கல் ஆட்களுக்குத் தெரிய வேண்டாம்னும் நினைக்கறான்..."

"சார்ர்ர்..."

"உன் அப்பா விஷயம் இந்த நொடி என்னோட அசைன்மெண்ட்... சொன்னா கேள்..."

– ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி சரியான கடக மனிதர். பிடித்து அமுக்க நினைத்தால் தப்பிக்க முடியாது. கணேஷும் மடங்கிப் போனான்.

அருகே இருந்த அனுராதா, "என்ன மிஸ்டர் கணேஷ் உங்க பயணத்திட்டமும் கேன்சலா?"- என்று கேட்க அவன், தலை அசைத்து ஆமோதித்தான், அவனிடம் ஒரு புத்துணர்வு. அவன் முகத்திலோ சொல்ல முடியாத அளவு சோர்வு.

சட்டென்று கரண்ட் வரவும் பளிச் சென்று அவனது ஏமாற்றத்தைப் பார்த்தவன், திரும்பப் பெட்டியைப் பார்த்து அதிலுள்ள ஏட்டுக் கட்டுகளையும் நோட்டையும் எடுக்கக் கையைக் கொண்டு சென்றான்.

தடுப்பதுபோல் மணிக்கட்டு மேல் ஒரு பல்லி விழுந்து அவனை அலற விட்டது.

அவனுக்குப் புரிந்துவிட்டது.

"கணேஷ்... அந்த ஏடுகளையும் நோட்டையும் கொஞ்சம் எடுத்து தரீங்களா...நான் கைய நீட்டும் போதெல்லாம் ஒரு தடை வர்றதை பார்த்தா..."- என்றவளை இலேசாக முறைத்துக்கொண்டே பெட்டிக்குள் கையை விட்டு அவற்றை வெளியே எடுக்க ஆரம்பித்தான்.

அந்த நொடியில் எங்கிருந்தோ ஒரு மணிச் சப்தம்!

(தொடரும்)

ஜாக்கி :

ஜாக்கிசான் உலகமே உச்சி முகர்ந்து உதட்டில் புன்னகையுடன் கொண்டாடும் ஆக்ஷன் டார்லிங்! ஜாக்கிசானின் அதிகாரப்பூர்வ வலைத்தளம் www.jackiechan.com. ஜாக்கி யாரு, இதுவரைக்கும் என்ன பண்ணினாரு. இனி என்ன பண்ணப் போறாரு இப்படி அவரோட ஜாதகத்தையே சுருக்குன்னு கொடுத்திருக்காங்க. ஜாக்கி கலந்துகிட்ட பொது நிகழ்ச்சிகளோட புகைப்படங்கள், வீடியோ க்ளிப்ஸ் எல்லாம் இந்தத் தளத்துல இருக்கு. அடுத்து யாரை உதைச்சுக்கிட்டு இருக்கார், எங்க அடிபட்டு கிடக்காருன்னு செய்திகள் கிடைக்குது. 'போன முறை ஜெர்மனிக்குப் போனப்ப ஒரு குட்டிக் குழந்தை எனக்கு ரொம்ப ஆசையா உம்மா கொடுத்துச்சு', 'அந்த விமானத்துல ஏர் ஹோஸ்டஸ் செம க்யூட்டா இருந்தாங்க'ன்னு ஜாக்கி எழுதுன விஷயங்களும் படிக்கக் கிடைக்குது. ஜாக்கியோட டப்பிங் பட ஸ்டைல்ல சொல்லணும்னா "என்னம்மா கண்ணு, என் வெப் சைட்டு பக்கம் வந்து பாரு, ஒரே குஷியாயிடுவ!"

ஆக்ஷன் டார்லிங்!





டௌன்லோட் :

கவனமா குறிச்சுக்கோங்க ftp.anyhost.ru/books/www.krf.bsu.by/- நீங்க ஐ.டி. ஃபீல்டுக்குள்ள எப்ப குதிக்கலாம்னு காத்துக்கிட்டிருக்கற ஆளா... நான் சொன்ன அட்ரஸ்ல எக்கச்சக்கமா ஐ.டி. புத்தகங்கள் pdf வடிவத்துல கிடைக்குது. அட இலவசமாக் கெடைக்குதுங்க! ஜாவா, டாட் நெட், நெட்வொர்க்கிங், மெயின்ஃப்ரேம்னு தனியா ஒரு லிஸ்ட்டே போடலாம். உடனே அங்க போங்க. புத்தகங்களெல்லாம் ரஷ்ய மொழியில இருக்கும். என்னைத் திட்டாதீங்க. பொறுமையா scroll பண்ணுங்க. கீழ ஆங்கிலப் புத்தகங்கள் கிடைக்கும். ஓ.கே. வா!

வலைப்பதிவு :

வடிவேலுவின் 'கிரி' திரைப் படத்தின் நகைச்சுவையை மனதில் நினைத்துக்கொண்டு மேற்கொண்டு தொடரவும்.

"சரி, ஒரு ரவுண்ட் தானேன்னு நம்பி ஒரு இன்டர்வியூக்குப் போனேன். அங்கே அஞ்சு பேருமா... மாத்தி மாத்திக் கேள்வி கேட்டாய்ங்க. என்னால முடிஞ்ச வரைக்கும் பதில் சொன்னேன். அப்புறம் நாலாவது மாடிக்குப் போய் ஆர்டர் வாங்கிக்குங்கன்னு சொன்னாய்ங்க. சரி, நானும் நம்ம்ம்பி நாலாவது மாடிக்குப் போனேன். அங்கே எட்டு பேர்மா! அவிங்களாலே எவ்ளோ முடியுமோ அவ்ளோ கேள்வி கேட்டாய்ங்க. திடீர்னு ஒருத்தன் HR-க்கு போன் போட்டு 'மச்சான் ப்ரீயா இருந்தா இங்க வாடா! ஒருத்தன் சிக்கியிருக்கான்'னு சொன்னான். நானும் எவ்ளோ நேரந்தான் பதில் தெரிஞ்சமாதிரியே நடிக்கிறது!! அதுல ஒருத்தன், 'என்ன கேள்வி கேட்டாலும் சமாளிக்கிறான். இவன் ரொம்ப நல்லவன்'னு சொல்லிட்டான்மா? (www.milestonevijay.blogspot.com வலைப்பதிவிலிருந்து)

- **வலைஞன்**

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம் : தொட்டதெல்லாம் துலங்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் ஊதிய உயர்வு/பணி மாற்றம் ஏற்படும். வீடு/வாகனம் வாங்க ஏற்ற தருணம். வியாபாரிகளுக்கு நற்பலன் கிட்டும். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானுக்கு விளக்கு ஏற்றி காக்கைக்கு எள்ளு சாதம் போடவும்.

ரிஷபம் : நன்மையும் தீமையும் கலந்த வாரம். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். ஞாபக மறதி வரும். மனதில் தன்னம்பிக்கை மிகுந்து காணப்படும். கணவன், மனைவி அனுசரணையுடன் நடப்பது நல்லது. வியாபாரிகளுக்குத் தொழிலில் மந்தநிலை இருக்கும். எதிலும் ஆழ்ந்து யோசித்துச் செயல்படுவது நற்பலனை அளிக்கும். ராகு/கேது வழிபாடு சிறந்தது. வியாழன்தோறும் ராகவேந்திர சுவாமியை வழிபட்டு, அருகில் யோக நரசிம்ம சுவாமியை வழிபட்டு வர நற்பலன் கிட்டும்.

மிதுனம் : தொட்டது துலங்கும் வாரம். சுபகாரியம் நடக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் நற்பலன் ஏற்படும். வியாபாரிகள் முன்னேற்றம் காண்பார்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பாராட்டும் வெகுமதியும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் வரும். ராகு/கேது வழிபடுதல் நலம்.

கடகம் : வித்தையில் மேன்மை பெறும் வாரம். கொடுக்கல் - வாங்கல் நன்றாக இருக்கும். சிலருக்கு வீடு மாற்றம் / தொழில் மாற்றம் ஏற்படும். புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு வேலை கிடைக்கும். வியாழக்கிழமை தோறும் சிவன் ஸ்தலம் சென்று தெட்சிணாமூர்த்தி சுவாமியை வழிபட்டு குரு காயத்ரி படித்து வந்தால் நினைத்தது நடக்கும்.

சிம்மம் : எதிலும் கவனமுடன் செயல்பட வேண்டிய வாரம். வீடு/தொழில் மாறும் சூழ்நிலை ஏற்படும். சிக்கனம் தேவை. எந்தக்





● படம்: ஸ்ரீஹரி

தஞ்சை பரத்வாஜ்

27.11.2005 முதல் 3.12.2005 வரை

எனது சகோதரியின் மகன்கள் இருவருக்கும் திருமணம் எப்பொழுது நடக்கும்?

- எஸ். நாகராஜய்யர் - திருக்கடையூர்

உங்கள் சகோதரியின் மூத்த மகனுக்கு 45 வயதில் திருமணம் கைகூடும். பிறந்த ஊருக்குத் தெற்கு திசையில் வசிக்கும் பெண் அமைவாள். சர்ப்பதோஷம் உள்ள வரன் சேர்க்கவும். இளைய மகனுக்கு 44 வயசு முடிவடைந்து 45 வயதில் திருமணம் முடியும்.

எனது திருமணம் மற்றும் வேலை வாய்ப்புப் பற்றிச் சொல்ல முடியுமா?

- புனிதவதி, திருச்சி

உங்களுக்கு செவ்வாய் மகாதசை நடந்து வருகிறது. உங்களுக்கு வெளிநாட்டு வரன் அமைந்து வெளிநாடு சென்று வேலை செய்யக்கூடிய அமைப்பு உள்ளது. மேற்படிப்பு, தொழில்நுட்பத் துறையில் படிக்கவும். 23 வயதில் திருமணம் நடக்கும். பன்னாட்டு நிறுவனத்தில் நல்ல வேலை கிடைக்கும்.

எனக்குத் திருமணமாகி நான்கு ஆண்டுகளாகின்றன. குழந்தை பாக்கியம் எப்போது அமையும்?

-ஜி. காந்திமதி, திருப்பூர்.

தற்போது தங்களுக்கு குருதசை நடைபெறுகிறது. 2006-ல் குழந்தைப் பேறு ஏற்படும். அஸ்தம், திருவோணம், ரோகிணி நட்சத்திரத்தில் ஆண் குழந்தை பிறக்கும்.


காரியத்தையும் சிரமப்பட்டு போராடி முடிக்கும் சூழ்நிலை உருவாகும். வியாபாரிகளுக்குத் தொழிலில் மந்தகதி இருக்கும். சனி/ராகு/கேது/குரு வழிபாடு நல்லது.

கன்னி : மேன்மையான வாரம். சுப காரியம் கைகூடும். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். பதவி உயர்வு கிட்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. அண்டை நாட்டு வியாபாரம் நல்ல முன்னேற்றம் தரும். பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். ராகு/கேது வழிபட்டு வருதல் நலம் தரும்.

துலாம் : நல்லது நடக்கும். தனம், கல்வி, குடும்பம் மேலோங்கும். எதிர்ப்பு, தொல்லை தீரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. நீண்டகாலம் குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்குப் புத்திரபேறு கிட்டும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். நீண்டநாள் எண்ணங்கள் நிறைவேறும். புதிய வேலை கிடைக்கும். குரு/ சனி வழிபட்டு வருதல் நலம் தரும்.

விருச்சிகம் : ஏற்றம் தரும் வாரம். புதிய முயற்சிகள் யாவும் கைகூடும். வீடு/வாகனம் வாங்க நல்ல காலம். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். நெருங்கிய உறவினர்/நண்பர்களுக்கு இடம் மாற்றம் அளிக்கும். சத்ரு தொல்லை விலகும். பத்திரிகைகளில் பெயர் வரும். வியாபாரிகளுக்கு நற்பலன் கிட்டும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். ராகு/கேது/குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

தனுசு : சிறப்பான வாரம். குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வீடு/வாசல்/வாகனம் வாங்க நல்ல தருணம். புதிய தொழில் ஆரம்பிக்க, நல்ல முதலீடுகள் செய்ய நல்ல காலம். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு/கேது/சனி வழிபடுதல் நற்பலனைத் தரும். சனீஸ்வரன்



பரிகாரம் தேவையில்லை.

நான்கு ஆண்டுகளாகத் தடைப்பட்டு வரும் எனது மூத்த மகனின் திருமணம் எப்பொழுது நடக்கும்?

- முனிரத்தினம், சென்னை

தங்களின் பையனுக்கு 31 வயது ஆரம்பத்தில் திருமணம் கைகூடும். வியாழன் (அ) புதன் திருமணம் நடக்கும். 2006-ல் திருமணம் முடியும்.

எனது கடன் தொல்லை எப்போது தீரும்? புதுவீடு வாங்கும் யோகம் உண்டா?

- எஸ்.வி. நரசிம்மன், வேலூர்

தற்போது உங்களுக்கு ராகுதசை முடிவடைந்து குரு தசை ஆரம்பம் ஆகி உள்ளது. நீங்கள் நினைக்கும் காரியம் அனைத்தும் வெற்றி தரும். பூர்வீக சொத்து வேறு கைக்கு மாறி புது வீடு வாங்கும் யோகம் ஏற்படும். கடன் தொல்லை தீரும்.

எனது மகனின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

கே. சின்னையாத்தேவர், பொங்களூர்

தற்பொழுதுள்ள குருதசை 36 வயது வரை நடக்கும். உங்கள் மகனுக்கு வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை செய்யும் யோகம் இருக்கிறது. முயற்சி செய்யவும். இல்லற வாழ்வு நன்றாக அமையும்.

பரத்வாஜ் பதில்கள்


என்ற முடிச்சு போட்டு தீபம் ஏற்றவும். காக் கைக்கு எள்ளு சாதம் போடவும். பீடை விலகும்.


மகரம் : தொட்டது துலங் கும். வீடு/வாகனம் வாங்க நல்ல தருணம். கொடுக்கல், வாங்கல் நற் பலனைத் தரும். வீடு மாற்றம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல மதிப்பு மரியாதை கிடைக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி அளிக்கும். உடல்நிலையில் முன்னேற்றம் காண்பிக்கும். குழந்தைகளால் சந்தோஷம் மிகுதி ஆகும். விலகிப் போனவர்கள் சேரு வார்கள். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆஞ்சநேயர்/ குரு வழிபாடு சிறந்தது.

கும்பம் : பதவி, பட்டம், புகழ் பெறும் வாரம். சிலருக்கு வெளிதேசம் செல்லக் கூடிய வாய்ப்புக் கிட்டும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் கிட்டும். நெருங்கிய உறவினர்/ நண்பர் இடம் மாறி செல் லுவார்கள். வண்டி வாகனம் செல்லும் போது கவனம் தேவை. உடல் ஆரோக் கியத்தில் கவனம் தேவை. வீடு, வாசல் வாங்க நல்ல சமயம். மாணவ, வியாபாரிகள் நற்பலனை அடைவர். ராகு/கேது வழிபட்டு வருதல் நலம் தரும். செவ்வாய்/வெள்ளி கிழமை தீபம் ஏற்றவும்.

மீனம் : சுமாரான வாரம். எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் சுபகாரியம் ஏற்படும். வீடு வாங்க நல்ல நேரம். எதிர்ப்பு ஒழியும். வியாபாரிகள் ஏற்றம் காண்பார்கள். உத்தியோகத்தில் வேலைந் பளு அதிகரிக்கும். வழக்கு வெற்றி அளிக்கும். திருமணத் தடைவிலகி திருமணம் கைகூடும். பணப் பற்றாக்குறை வராது. ராகு/கேது/ குரு வழியில் சிறந்தது. நலம் தரும்.





"அம்மா! வனஜாம்மா! வனஜாம்மா!"

குரல் கேட்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தேன்.

வாசலில் பக்கத்து வீட்டு வேலைக்காரி வள்ளி... அவள் அருகில் முப்பத்து ஐந்து வயதில் ஒரு பெண்ணும் அவள் கையைப் பிடித்தவாறே பத்து வயதில் ஒரு சிறுமியும் நின்றிருந்தனர்.



"வனஜாம்மா... பத்து நாளைக்கு முன்னால உங்ககிட்டே சொன்னேனே!"


சட்டென்று ஞாபகம் வந்தது.

'என்னோட பக்கத்து வீட்ல காவேரின்னு ஒரு பொண்ணு குடித்தனம் இருக்கா. அவளுக்குப் பத்து வயசுல 'மங்கா'ன்னு பொண்ணு இருக்கு. காவேரியோட புருஷன் ஒரு குடிகாரன். தினம் குடிச்சுட்டு வந்து அடிப்பான். 'அம்மாவை அடிக்காதேப்பா'ன்னு போய் தடுக்குற மங்காவையும் போட்டு அடிப்பான். அதனால காவேரி எங்கிட்டே வந்து, 'வள்ளி... எம் மகளை ஏதாவது வீட்டுல சேர்த்துவிடு, அங்கேயே தங்கி வேலை செஞ்சு பிழைச்சுக்கட்டும்... இல்லைன்னா மங்காவையும் அடிச்சே கொன்னுடுவான்னு அழுதும்மா' என்று வள்ளி கேட்டுக் கொண்டது ஞாபகத்துக்கு வந்தது.

"நான் சொன்னேனே... காவேரி, மங்கா... இவங்கதான்" என்றாள் வள்ளி. நான் அந்தச் சிறுமியைப் பார்த்தேன். மாநிறம், ஒல்லியான உடம்பு. கண்கள் மட்டும் அந்தச் சோகத்திலும் அழகாய் இருந்தன.

"பாப்பா! உம் பேரென்ன...?" - என்றேன்.

மங்கா!



விஜயபாலன்

"மங்கை... மங்கானு கூப்பிடுவாங்க..."

"எங்க வீட்ல வேலை செய்யறியா?"

தன் தாயை நிமிர்ந்து பார்த்தாள்.

"மங்கா, உன்னைத்தான் கேக்கறேன்... வீட்டைப் பெருக்கணும், கடைக்குப் போகணும், செடிக்குத் தண்ணி ஊத்தணும், இதுமாதிரி சின்னச் சின்ன வேலைதான். செய்யறியா?"

காவேரி திடீரென்று பதறிக் கொண்டு இடையில் பேசினாள்.

"அம்மா... எம் புருஷன் தினமும் குடிச்சுட்டு வந்து வம்பு பண்ணி, எங்களை அடிப் பாரு. அடிவாங்கியே சாகணுங்கிறது என்னோட தலையெழுத்து. இந்தப் புள்ளை என்ன பாவங்க செஞ்சுது? ஏதாவது படக் கூடாத இடத்துல பட்டுச்சுன்னா செத்துடுங்க! இந்தப் புள்ளையாவது எங்கியாவது நிம்மதியா இருக்கட்டும்... உங்களுக்குப் புண்ணியமா போகும். மங்காவுக்கு ஏதாவது வேலை குடுங்க தாயி" என்று கையெடுத்துக் கும்பிட்டாள் காவேரி கண்களில் நீரோடு.

"சரி...சரி... அழாதேம்மா... மங்காவை எப்பக் கொண்டு வந்து விடப் போறீங்க?" என்றேன்.

காவேரி தன் கையிலிருந்த துணிப் பையை மங்காவின் கையில் அவசரமாய்த் திணித்தாள்.

"இப்பவே விட்டுட்டுப் போறேங்க.."- என்றாள்.

"சரி... காபி, டிபன், சாப்பாடு எல்லாம் போட்டு மாசம் இருநூறு ரூபாய் தர்றேன். வருஷத்துக்கு மூணு டிரெஸ் எடுத்துக் கொடுத்தர்றேன். சரியா?"

"நல்லா இருப்பேம்மா" என்று காவேரி கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு வள்ளியோடு புறப்பட்டாள்.

போகும் தன் அம்மாவையே திரும்பித் திரும்பிப் பார்த்தபடி உள்ளே வந்தாள் மங்கா. அந்தக் கரு விழிகளில் கண்ணீர், மாலையாய் வழிந்தது.

மங்காவைப் பற்றி நான் என்னவோ நினைத்திருந்தேன். ரொம்ப சுறுசுறுப்பு. மலர்ந்த முகத்தோடு, பொறுப்பாக வேலை செய்தாள். என்னை 'அக்கா!' என்று அழைத்தாள்.

என் கணவரை 'சார்... சார்..!' என்று கூப்பிட்டாள்.

சேர்ந்து ஒரு மூன்று மாதம் கூட இருக்காது... அந்த அதிர்ச்சியான செய்தி வந்தது.

காவேரி இறந்து விட்டாள்.

மங்கா அழுதுகொண்டே இருந்தாள். அவளைத் தேற்றி காருக்குள் உட்கார வைத்தேன். கார் அவளது வீட்டை நோக்கிப் பறந்தது.

தூரத்தில் பத்து இருபது குடிசைகள் தெரிந்தன. ஒரு குடிசையின் முன்னால் கூட்டமாக இருந்தது. என் கணவர் காரை ஓர் ஓரமாய் நிறுத்தியதும் மங்கா, அழுது கொண்டே குடிசைக்குள் ஓடினாள்.

வள்ளி அழுது வீங்கிய முகத்தோடு காரை நெருங்கினாள்.

"வள்ளி! காவேரிக்கு என்னாச்சு...?" - என்றேன்.

"பத்து நாளா படுத்த படுக்கையா இருந்தாம்மா... நேத்து திடீர்ன்னு செத்துப் போயிட்டா..."

"எனக்குத் தகவல் சொல்லி இருக்கலாமே?"

"காவேரிதான் சொல்ல வேண்டான்னு சொல்லிடுச்சு."

ஒருவன் தள்ளாடியவாறே காரை நெருங்கினான்.

"வாங்க. குட்டுமானிங்" - என்ற அவனிடம் சாராயவாடை 'குப்'பென்று வீசியது.

நான் புருவத்தை உயர்த்தி வள்ளியைப் பார்த்தேன்.

"இவருதான் காவேரியோட புருஷன்" என்றாள்.

வேட்டி அவிழ்ந்தது கூடத் தெரியாமல், காலில் விழப் போனவனைத் தடுத்து நிறுத்தினார் என் கணவர்.

ஆயிரம் ரூபாயை வள்ளியின் கையில் திணித்தேன்.

"வள்ளி...! காவேரியோட காரியம் எல்லாம் நல்லபடியா முடிச்சுட்டு... மங்காவைக் கொண்டு வந்து விட்டுடு..."

திரும்பிப் பார்த்தேன்.

மங்காவின் அழுகுரல் மட்டும் என் காதுக்குள் விழுந்து கொண்டிருந்தது.

மங்கா திரும்பவும் வீட்டுக்கு வந்து ஒரு மாதம் ஓடிப் போயிருந்தது.

பத்து நாட்களுக்கு முன்னால் காவேரியைப் பற்றி வள்ளி சொன்ன ஒரு செய்தி எனக்குள் ஒரு கலக்கத்தை உண்டு பண்ணியிருந்தது.

அன்றைக்கு நான் ஏதோ ஒரு வேலையாய் இருந்தேன். மங்கா டி.வியை துடைத்துக் கொண்டிருந்தாள்.

"மங்கா... ஏ...மங்கா..."

வெளியே யாரோ கூப்பிடும் குரல் கேட்டது.

மங்கா கதவைத் திறந்துகொண்டு வாசலுககுப் போனாள்.


வாசல் கேட்டருகே தள்ளாடியபடி நின்றிருந்தான் மங்காவின் அப்பா. மங்காவைப் பார்த்ததும், "கண்ணு... நல்லா இருக்கியா?" என்று பல்லைக் காட்டினான்.

மங்கா தலையாட்டினாள்.

"ரெண்டு நாளா சாப்பிடல கண்ணு... ரொம்பப் பசியா இருக்கு கண்ணு!"

மங்கா, திரும்பி என்னை அண்ணாந்து பார்த்தாள்.

"காலைல செய்த பூரி மசால் இருக்கு. தரட்டு



"இந்த டாக்டர் ஆபரேஷனுக்கு வெறும் ஆயிரம் ரூபாதான் வாங்குவார்..."

"டெட் சீப்னு சொல்லுங்க..."

- கே.ஆனந்தன்

மான்னு கேளு மங்கா?''

அவன் தலையாட்டி மறுத்தான்.


''வேண்டாம் கண்ணு ஏதாவது பணம் இருந்தாக் குடு... கடையில சாப்பிட்டுக்கறேன்...'' என்றான்.

அவன் குடிப்பதற்குப் பணம் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொண்டேன்.

''உலகின் முதல் PASS WORD எது?''

''அலிபாபா கதையில் வரும் திருடர்கள் சொன்ன அண்டாகா கசம்... அபூகா கசம்... திறந்திடு சீசேம்''தான்.

- வசந்தா குருமூர்த்தி



''பணமெல்லாம் இல்லேன்னு சொல்லு?''

மங்கா திரும்பி என்னைக் கெஞ்சலாகப் பார்த்தாள்.

''ப்ளீஸ் அக்கா! ரெண்டு நாளைக்கு முன்னால என்னோட சம்பளம் இருநூறு கொடுத்தப்ப நீங்களே வைங்கன்னு சொன்னேனில்ல, அந்தப் பணத்தை கொடுங்க அக்கா?''

நான் ஏதும் பேசாமல் மங்காவிடம் கொண்டு வந்து நீட்டினேன்.

''இந்தாப்பா..!''

அவன் கண்களில் பிரகாசம்.

சட்டென்று பணத்தை வாங்கிக் கொண்டான்.

''இவங்க சாமி மாதிரி கண்ணு. உன்னை ரொம்ப நல்லாப் பாத்துக்குவாங்க... நல்லபடியா இரு... வரட்டா மங்கா?''

''அப்பா!''- என்று மெதுவாய்க் கூப்பிட்டாள் மங்கா.

''என்ன... கண்ணு?''

''ரொம்பக் குடிச்சு... ஒடம்பை கெடுத்துக்காதப்பா'' - என்றாள் விழிகளில் நீரோடு.

''அதைப்பத்தி நீ ஒண்ணும் கவலைப்படாத கண்ணு...'' என்றவன் தள்ளாடியபடியே நடந்தான்.

நான் மங்காவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன்.

''நான் உங்கிட்ட ஒரு ரகசியம் சொல்லப் போறேன்... மங்கா!''

''என்னக்கா?''

''இந்த ஆளு உங்கப்பாவே இல்ல. நீ ஒரு வயசுக் குழந்தையா இருந்தப்ப... உங்கப்பா செத்துப் போயிட்டாரு... உங்கம்மா கட்டட வேலைக்குப் போயிட்டு இருந்தப்ப இந்தாளு சிநேகிதமாகி உங்கம்மாவைக் கூட்டிட்டு வந்து குடும்பம் நடத்தி இருக்கான்''

மங்கா அமைதியாய்ச் சொன்னாள்.

''தெரியும்கா!''

''தெரியுமா?'' - எனக்கு முதல் அதிர்ச்சி.

''ஆமாக்கா...''

''எப்படி?''

''ஒருநாள் கடைக்குப் போயிட்டு வீட்டுக்கு வந்தப்ப, அம்மாவும் அப்பாவும் சண்டை போட்டுட்டு இருந்தாங்க. 'ஏய்யா இதுவே நீ பெத்த புள்ளையா இருந்தா இப்படிப் போட்டு அடிப்பியான்னு அம்மா அழுதாங்க...'

எனக்கு இரண்டாவது அதிர்ச்சி.

''அப்பா இல்லேன்னு தெரிஞ்சும்... எதுக்காக இந்தாளுக்குப் பணம் தர்றே...?''

''என்னோட சின்ன வயசிலிருந்தே இவரைத்தான் அப்பா... அப்பான்னு கூப்புடறேன். இவரு என்னை மகளா நினைக்கறாரோ இல்லையோ, நான் இவரை அப்பாவாகத்தான் நினைக்கறேன்... இப்ப மட்டுமல்ல... எப்பவும் இவருதான் என்னோட அப்பா!'' ○

தி.நகரிலுள்ள ஒரு கார் ஷெட்டில் 1939-ம் வருடம், தொடங்கப்பட்ட தையல் கடையான நாயுடு ஹால் இன்று அடுக்குமாடிக் கட்டடமாக விஸ்வரூபம் எடுத்து பாண்டிபஜார், மயிலாப்பூர், புரசைவாக்கம், அடையாறு என நகரமெங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. நாயுடு ஹாலின் மூன்றாவது தலை முறையைச் சேர்ந்த இருபத்தெட்டு வயது அரவிந்த், நம்மிடையே அதன் வரலாற்றையும் வளர்ச்சியையும் பகிர்ந்து கொண்டார்...



"நாயுடு ஹால் என்றாலே அது பெண்களுக்கான ஆடையகம் என்று குழந்தைக்குக் கூடத் தெரிந்திருக்கிறது. யோசித்துப் பாருங்கள், எந்தக் கடைக்கும் கிடைக்காத இந்தச் சிறப்பு எங்களுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது? எல்லாக் கடைகளிலும் பெண்களுக்கான துணிவகைதானே அதிகமாகக் குவிந்துள்ளது? பிறகேன் பெண்கள் அவர்கள் மனத்துக்கருகில் எங்களை மட்டும் அமர்த்தினார்கள்...?

மனமயக்கும் பெண்களின் ராஜ்ஜியம்

நாயுடு ஹாலை ஆரம்பித்தது முதல் அதன் எல்லா பெருமைகளுக்கும் சொந்தக்காரர் தாத்தா எம். கோவிந்தசாமி நாயுடுதான். குடியாத்தம் அருகே உள்ள சிறு கிராமத்தில் பிறந்தவர். தினமும் உழைத்தால்தான் சாப்பாடு என்கிற சாதாரணக் குடும்பம். சிறு வயதில் குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு தகராறு காரணமாக தாத்தா வீட்டைவிட்டு வெளியேறி ரயில் நிலையத்துக்கு வந்திருக்கிறார்... அடுத்து என்ன செய்



• அரவிந்த்



வதென்றே தெரியாமல், ஏதோவொரு ரயிலில் ஏறிவிட்டிருக்கிறார். திருப்புமுனை, டிக்கெட் பரிசோதகர் உருவத்தில் வந்திருக்கிறது. பரிசோதகர் அதட்டலுடன் டிக்கெட் கேட்ட பொழுது, பயத்தில் நடுங்கி அழுதிருக்கிறார். ஒரு சிறுவன் நிர்கதியற்று நிற்பதைக் கண்ட ஒரு முஸ்லிம் அன்பர் முன்வந்து உதவி செய்து, டிக்கெட்டுக்கான அபராதத் தொகையை தாமே கட்டியிருக்கிறார். அதோடு அவர் தன் கடமையை முடித்துக் கொள்ளவில்லை. அந்தச் சிறுவன் வேறெங்கும் போய் சீரழிந்து விடக்கூடாது என்றெண்ணி தன்னுடனே பெங்களூருக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அவர் ஒரு தையல்காரராக இருந்ததால் தாத்தாவுக்கு அந்தத் தொழிலிலுள்ள அத்தனை நுணுக்கங்களையும் கற்றுத் தந்திருக்கிறார். (ஒருவேளை அவர் தையல்காரராக இல்லாமல் போயிருந்தால் நாங்கள் இத்தொழிலுக்குள் காலடி எடுத்து வைத்திருக்கவே மாட்டோம்.)

என்னதான் தொழில் கற்றுக் கொடுத்த ஊராக இருந்தாலும் தாத்தாவுக்கு பெங்களூரில் தொழில் செய்ய நாட்டமேயில்லை. ஆயிரம் கலைகள் கற்றிருந்தாலும் அதை தம் சொந்த மண்ணில் செய்துகாட்ட வேண்டும் என்கிற எண்ணத்தோடு சென்னை வந்திறங்கினார்.

ரா கவையா தெருவில் தொடங்கப்பட்ட 'நாயுடு கடை' மக்களிடம் மெல்ல மெல்லப் பிரபலமடையத் தொடங்கியிருக்கிறது. பெங்களூரில் தொழில் கற்றதால், தாத்தா நவநாகரிக உடைகளைத் தைப்பதில் வல்லவராக இருந்தார். பெண்களின் உடைகளைக் கச்சிதமாகத் தைத்துத் தரும் டெய்லர் என்ற நற்பெயரை ஏரியா மக்களிடம் பெற்றிருந்தார். அந்தக் காலத்தில் பெண்களுக்கென்று தனியாக தையல் கடைகள் ஏதும்



பெரிதாக இல்லாததால், வியாபாரம் சூடு பிடிக்க ஆரம்பித்தது. நம் நாட்டில் எந்தத் தொழில் செய்தாலும், பெண்களின் ஆதரவு கிட்டிவிட்டால், பின்னர் அதன் வளர்ச்சியே தனிதான். பெண்களின் மகத்தான ஆதரவோடு 1967-ம் வருடம் தி.நகர் பாண்டி பஜாரில் 'நாயுடு ஹால்' ரெடிமேட் ஷோரூமைத் திறந்தார் தாத்தா எம்.ஜி. நாயுடு.

தாத்தாவுக்குப் பெரிய தூண் போல் பேருதவியாக இருந்தது அவருடைய குடும்பம். 1989-ல் நாயுடு ஹால் வளர்ச்சியில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஆண்கள், குழந்தைகளுக்கான ரெடிமேட் ஷோரூமை பாண்டி பஜாரில் தொடங்கி கடையை மேலும் விரிவுபடுத்தினார். ரிலே ரேஸ் போல அதுவரை ஓடிக் களைத்த தாத்தாவிடமிருந்து கடையையும் அதன் பாரம்பரியத்தையும் தங்கள் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு செவ்வனே வழி நடத்தினர் அப்பாவும் அவரது சகோதரர்களும்.

நான் பன்னிரண்டாவது தேர்வில் தோல்வி அடைந்த உடனே தொடர்ந்து படிக்க மனமில்லாமல் முழுவதுமாகத் தொழிலில் இறங்கி விட்டேன். 'டேய், இது பொம்பளைங்க வர்ற கடைடா நண்பர்களை இந்த இடத்தில் எல்லாம் சந்திக்காதே'ன்னு தாத்தா என்னிடம் அடிக்கடி சொல்வார். நண்பர்களை நம்பி ஏமாந்து விடக்கூடாது; நண்பர்களினால் வியாபாரத்துக்கு பங்கம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று அப்பாவும் அடிக்கடி சொல்வார். வியாபாரத்தில் ஏமாளியாக இருந்தால் நம்மை மிதித்து நம் மேலே நடப்பார்கள் என்று உதாரணங்களுடன் கதை கதையாக அப்பா எனக்கு வியாபாரத்தின் அரிச்சுவடிகளைக் கற்றுத் தந்தார். அதனால்தான் இன்று தன்னந்தனியாக என்னால் இத்தொழிலில் நடைபோட முடிகிறது.

அப்பா இறந்தபின் பாகம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஆளாளுக்கு நாயுடு ஹாலின் கடைகளைச் சொந்தமாக்கிக் கொண்டோம். நான் தலைமை தாங்கும் 'நாயுடு ஹால்' முற்றிலும் பெண்களுக்கென்று தனியாக இருப்பது. ஆனால் அடுத்தடுத்து சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் ஆண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பகுதிகளைத் திறக்கவுள்ளேன். அதேபோல் தி.நகரில் துணிக்கடை நடத்தினால்தான் வியாபாரம் செழிக்கும் என்கிற மாயையையும் மெள்ள, உடைத்து வருகிறோம். ஏற்கெனவே சென்னையின் பிரதான பகுதிகளில் கிளைகளைத் திறந்திருக்கிறோம். அடுத்தடுத்து சென்னையின் புறநகர்ப் பகுதிகளிலும் நாயுடு ஹால் கிளைகளைப் பரப்பவிருக்கிறது.

ஆண்கள், குழந்தைகளுக்குக்கூட இத்தனை வெரைட்டிகள் கிடையாது. பெண்களின் ராஜ்ஜியம்தான் டெக்ஸ்டைல் தொழிலை முழுவதுமாக ஆக்ரமித்துள்ளது. பெண்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்துவிட்டால் பின்பு மற்ற அனைத்து விஷயங்களும் மிகவும் சுலபமாகி விடும் தானே!

- ச.ந. கண்ணன்

படங்கள்: ஸ்ரீஹரி



''ஐந்து மணிக்கு உண்ணாவிரதத்தை முடிக்கப் போறேன்னு சொன்ன தலைவர் இரண்டு மணிக்கே முடிச்சுட்டாரே, ஏன்?''

''வாங்கி வெச்சிருந்த பிரியாணி வாசனை மூக்கைத் துளைச்சுடுச்சாம்!

- வே. முருகன்

அண்ணாமலையார் அருட்பெருஞ் ஜோதியாக காட்சி அளிக்கும்



திருஅண்ணாமலையில் கார்த்திகை தீபத் திருநாளில்



நடைபெறும் ஸ்ரீ சிவ பஞ்சாட்சர மஹா வில்வ ஹோமத்திலும் (13-12-2005 காலை 6-10) அன்னதான பெருவிழாவிலும் நேரில் கலந்து கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் தங்களுக்கு தீபத்திருநாளில் அனைத்து நலன்களையும் தந்தருள பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ அன்ன பூரணி அன்னதான சேவா டிரஸ்ட் சிவமடத்தில் நடத்தும் 8-ம் ஆண்டு அன்னதான சேவை.

இமயமலைக்கு [illegible] திருத்தலமான தீபத்திருஅண்ணாமலை, [illegible] மலை அண்ணாமலை. [illegible] மலை அண்ணாமலை. [illegible] மலை அண்ணாமலை. [illegible] மலை அண்ணாமலை. [illegible] கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று இம்மலையின் உச்சியில் ஓர் ஒளியை [illegible] 21 தலைமுறைக்கும் முக்தி கிட்டும். சித்தர்கள் நிறைந்திருக்கும் சிறப்பு வாய்ந்த திருஅண்ணாமலையில் கிரிவலம் வரும் [illegible] அடி அண்ணாமலையில் உள்ள சிவமடத்தில் கார்த்திகை தீபத்திருநாளில் நடைபெறவிருக்கும் மாபெரும் அன்னதான பெருவிழாவில் கலந்து கொண்டு தங்களால் இயன்ற அளவு நன்கொடையை அனுப்பி அண்ணாமலையார் [illegible] உணவு [illegible] வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அண்ணாமலையார் ஜோதியாய் காட்சியளிக்கும் கார்த்திகை தீபத்தன்று சிவமடத்தில் நடைபெறும் ஸ்ரீ சிவபஞ்சாட்சர மஹா வில்வ ஹோமத்தில் கலந்து கொண்டு தங்கள் பிரார்த்தனைகளை செலுத்தி துன்பங்கள் நீங்கி நிம்மதியாக, இன்பமாக ஸ்ரீ அண்ணாமலையாரின் அருளாசியுடன் வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

வில்வம் சிவனுக்கு மிகவும் விருப்பமானது. வில்வ இலைகளில் மஹாலட்சுமி [illegible] இருக்கிறாள். [illegible] திருஅண்ணாமலையில் செய்யும் ஸ்ரீ சிவபஞ்சாட்சர மஹா வில்வ ஹோமம் சிவ கடாக்ஷத்தையும், லட்சுமி கடாக்ஷத்தையும் மஹா விஷ்ணு அருளையும் தரும். வில்வத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வம் (ஒரு இலை) லட்சம் [illegible] புஷ்பத்திற்கு சமம். ஒரு வில்வதளம் (இலை) சிவனுக்கு அர்ப்பணித்தால் மஹாபாவங்கள் விலகி சகல சௌபாக்கியங்கள் உண்டாகும். ஜோதி பிழம்பாய் அண்ணாமலையார் காட்சியளிக்கும் கார்த்திகை தீபத்தன்று நடைபெறும் ஹோமத்தில் பங்குபெறும் அன்பர்கள் தங்கள் சங்கல்பத்திற்காக ரூ.400/- அனுப்புவதோடு பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம் மற்றும் தங்களது பிரார்த்தனை போன்ற விவரங்களை தெளிவாக எழுதி அனுப்பினால் அதற்கு ஏற்ப சங்கல்பம் செய்து அதற்கான பிரசாதங்களுடன் ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட [illegible], ஸ்ரீ அண்ணாமலையார் படம், ஸ்ரீ அண்ணாமலையார் வெள்ளி டாலர், அட்சதை, மஞ்சள் ரட்சை, குங்குமம் மற்றும் ஹோம பஸ்பத்துடன் கூரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் பங்கேற்பவர்கள் சங்கல்பம் செய்து கொண்டு பூர்ணாஹுதி வரை இருந்து பிரசாதம் பெற்றுக்கொள்ளலாம். ஹோமத்தில் நேரில் கலந்து கொள்பவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

ஸ்ரீ சிவ பஞ்சாட்சர மஹா வில்வ ஹோமத்தில் பங்குபெற சங்கல்ப கட்டணம் ரூ.400/-

அன்னதானத்திற்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீக மாத இதழ் மூன்று மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு, தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீக மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு, தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீக மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீக மாத இதழ் ஐந்து வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட வலம்புரிசங்கும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

ரூ. 5000 - அனுப்பும் அன்பர்கள் சார்பாக, கார்த்திகை தீபத்திருநாள் அன்று சிவமடத்தில் நடைபெறும் ஸ்ரீ சிவபஞ்சாட்சர மஹா வில்வ ஹோமத்தில் [illegible] நட்சத்திரப்படி சங்கல்பம் மற்றும் அன்னதானம் செய்து ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அண்ணாமலையார் யந்திரம், ஸ்ரீ அண்ணாமலையார் வெள்ளி டாலர், அட்சதை, மஞ்சள் ரட்சை, குங்குமம் மற்றும் ஹோம பஸ்பத்துடன் தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீக மாத இதழ் தங்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் ஸ்ரீ அண்ணாமலையாரின் [illegible] CD-யும், 1024 பக்கங்களுடன் கூடிய [illegible] புத்தகத்தையும் (தமிழ்) அனுப்பி வைக்கிறோம்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று நடைபெறும் அன்னதானத்திற்கும் ஹோமத்திற்கும் சமித்து, வஸ்திரங்கள் மற்றும் பொருட்கள் சிவமடத்தில் நேரில் கொடுக்கலாம்.

அன்னதானம், ஹோமத்திற்கு தாங்கள் அனுப்பும் நன்கொடையை Sri Annapoorani Annadhana Seva Trust என்ற பெயரில் Cheque / D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.




நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு

Cheque / D.D. / M.O., கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:


சிவ மடம்

கிரிவலச் சாலை, அடி அண்ணாமலை (P.O.) திருஅண்ணாமலை - 606 604

Tel : 044-2495 9302 Fax:044-5206 6525 E-mail : Sivasiva@vsnl.net



அன்னதானம் மற்றும் ஹோமத்தில் பங்குபெறுபவர்களுக்கு தங்கள் பிரார்த்தனைகளுக்கு ஏற்ப சிவமடத்தில் தீபம் ஏற்றப்படும்.



பசு முட்டை போட்டுக்கொண்டிருக்க, அருகில் கோழி அமுதமாய் பாலைப் பொழிந்துகொண்டிருந்தது. "நீ சின்னவன், நீயே குடி" என்றபடி அந்தப் பாலை எலியின் பக்கமாக நீட்டியது பூனை.

"ஐயோ, இதெல்லாம் எப்படிச் சாத்தியம்?" என்று பிரமித்தது உடும்பு.

"கண்களை மூடிக் கொண்டிருந்தால் எதுவுமே சாத்தியம்தான்" என்றது கழுதை.

கண்களைத் திறந்தது உடும்பு. 'அட, கனவு கண்டிருக்கிறோம்' என்று தேற்றிக் கொண்டது. கழுதைக்கு நன்றி கூறியது. இப்போது அதன் மனதில் வேறு ஒரு சந்தேகம். 'கனவில் தான் கண்ட காட்சிகள் கழுதைக்கு எப்படித் தெரிந்தன?"

"அசட்டு உடும்பே, நீ கனவில் கண்ட காட்சிகளை அப்போது வாயை விட்டுப் பிதற்றிக் கொண்டிருந்தாய், அதுதான்" என்றபடி நகர்ந்து சென்றது கழுதை.

"ஓ இவ்வளவுதானா!" என்ற உடும்புக்கு மீண்டும் ஒரு குழப்பம். தான் மனத்தில் நினைத்ததைக் கழுதையால் எப்படி உணர முடிந்தது? விடை கிடைக்காத கவலையில் உணவு உட்கொள்ளவும் பிடிக்காமல் உடல் மெலியத் தொடங்கியது உடும்பு.

விலங்குகள்


"**உ**னக்கு அறிவு கெட்டுப் போச்சா? மிருகங்களுக்கு சிகிச்சை அளிப்பது மட்டமான விஷயமா?"

அனுஷா தடுமாறினாள்.

"அதுவும் ஜூ மாதிரி இடங்களிலே இருக்கும் மிருகங்கள் ரொம்பப் பாவமில்லையா? அவற்றுக்கு வைத்தியம் பார்த்துக் குணப்படுத்துவது என்பது ரொம்பப் புண்ணிய காரியம்"

"அதுக்கில்லே ஸ்ரீ, மனிதர்களுக்கு சிகிச்சை அளிப்பது அதிக கௌரவம் இல்லையா?"

"யார் சொன்னது? ஒரே உயிர் ஏழு



அருண் சரண்யா 14

பிறவி எடுக்கும்னு சின்ன வயசிலே அம்மா நமக்குக் கதை சொல்லி இருக்காங்களே. அப்படிப் பார்த்தால் நேற்றைய விலங்கின் உயிர், இன்றைய மனித உயிராக இருக்கலாம் இல்லையா?"

அனுஷா தங்கையை வியப்புடன் நோக்க, அவள் அடுத்ததாக ஒரு அணுகுண்டை வீசினாள். "தவிர, என் கணவரும் ஒருவிதத்தில் மிருகங்களுக்கும்தான் சிகிச்சை அளிக்கிறார்."

என்ன உளறுகிறாள்? மன இறுக்கம் அவளைத் தாறுமாறாக நினைக்கச் செய்கிறதோ?

"மூணு நாள் முன்னே, இவர் சிகிச்சை அளித்த வி.ஐ.பியைப் பற்றி நாளிதழிலே முதல் பக்கத்திலே செய்தி வந்திருந்ததே.



நீ படிக்கலையா?"

நினைவுக்கு வந்தது. கார்த்திக்கின் திறமையான இதய அறுவைச் சிகிச்சையால் உயிர் பிழைத்திருந்த அந்த வி.ஐ.பி. பல இளம் சிறுமியர்களைக் கற்பழித்தவன் என்று பிரகரித்திருந்தார்கள். ஆக ஒரு மிருகத்துக்குத்தான் கார்த்திக் சிகிச்சை அளித்திருக்கிறான்!

"சரி ஸ்ரீ, மனிதர்களுக்குச் சிகிச்சை அளிப்பது, விலங்குகளுக்குச் சிகிச்சை அளிப்பது இரண்டுமே சமம்னு வெச்சிக்கலாம். அப்படியே இருந்தாலும் கார்த்திக் செய்வதும் ஓர் உத்தமமான பணிதானே?"

"புரியாமல் பேசாதேக்கா. கார்த்திக்கை ஒரு டாக்டர்ங்கிற கோணத்தில் நான் வெறுக்கலை. அவர் சந்தேக புத்தியை வெறுக்கிறேன். ஒருமுறை நானும் அவருமாகத் தெருவில் போனபோது எதிரிலே மகாதேவன் வந்தான். அவனோடு ரெண்டு நிமிஷம் நான் பேசினதைக்கூட இவர் விரும்பலே'' மகாதேவன் ஸ்ரீலதாவின் கல்லூரி நண்பன்.

"கார்த்திக் வளர்ந்த சூழல் அவரை அந்த மாதிரி மாத்தியிருக்கு ஸ்ரீ. கார்த்திக்கே என்னிடம் என்ன சொன்னார்னா...." அனுஷா மேலும் தொடர்வதற்குள் ஸ்ரீலதா சீறினாள்.

"அவரும் சொல்வார். நீயும் பேசுவ. உனக்குக் கிடைத்தது எந்த சந்தேகமுமில்லாத சுதந்திர வாழ்க்கை. அதனால, உன்னாலே என் வலியை சரியாகப் புரிஞ்சுக்க முடியாது."

கோபம் வந்தது. இவளை என்னை விட யாரால் புரிந்துகொண்டு விட முடியும்? ஆனால் அந்தக் கோபம் உச்சத்தை அடைவதற்கு முன்பே ஸ்ரீ கூறியதில் உள்ள நியாயமும் உரைத்தது. எள்முனை அளவுகூட சந்தேகம் இல்லாதவர்தான் ராஜன்.

'ராத்திரி நான் வீடு திரும்ப நேரமாகலாம். அதனாலே ஆனந்தை நான் வரும்வரை நம் வீட்டிலேயே இருக்கச் சொல்' - இப்படிக் கூற எத்தனை கணவர்களால் முடியும்?

'அனு, நம்ம ஆனந்துக்கு உன்னை மாதிரியே ஒரு பொண்ணு கிடைச்சால்தான் கல்யாணம் செய்துப்பானாம்' - விகல்பம் சிறிதுமின்றி இதைத் தெரியப்படுத்தும் மனம் சுலபத்தில் வந்து விடக் கூடியதா? கணவனின் அருமை இப்போது அனுஷாவுக்கு மேலும் அதிகமாகவே விளங்கியது.

தங்கையின் பார்வை தன்னை ஊடுருவிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். "என்ன அப்படிப் பாக்குற? ராஜனைப் பற்றி நீ சொன்னது உண்மைதான். ஆனால் அதேசமயம் கார்த்திக்கும் மாறிக்கிட்டு வரார். நீ வேணா பாரேன் அவர் உன் உணர்வுகளை நிச்சயம் முழுமையாகவே புரிஞ்சுப்பார்."

அடுத்த ஓரிரு நாட்களில் ஸ்ரீலதாவிடம் ஏற்பட்டிருந்த மன இறுக்கம் குறைந்தது போலிருந்தது.

காரணம் எதுவாக இருக்கும்? 'இப்போது கூட நாங்கள் சொன்னவுடனேயே கார்த்திக் உன்னை எங்களுடன் அனுப்பி வைக்கவில்லையா' என்றுதான் ஆதாரம் காட்டியதா?

அல்லது மல்லிகா விஷயத்தில் மர்ம முடிச்சு எதுவுமில்லை என்பது விளங்கியதாலா?



''என்னய்யா எதைப் பார்த்தாலும் ரெண்டு ரெண்டா தெரியுதுன்னு சொன்னியே... நான் செக் பண்ணிக் கொடுத்த கண்ணாடிய போட்டியா?''

''நீங்க கொடுத்த ரெண்டு கண்ணாடியில எதை டாக்டர் போடுறது?


- விஸ்வேதா

மறுநாள் காலை சகோதரிகள் அருகிலிருந்த காய்கறிக் கடைக்குச் சென்றிருந்த போது நாற்பது வயதுப் பெண்மணி ஒருத்தி, ஸ்ரீலதாவின் கைகளைப் பற்றியபடி 'உங்க புருஷனின் வைத்தியத்திலே தான் என் தாலி நிலைச்சுருக்கும்மா. நீங்க நல்லாயிருக்கணும்' என்று வாழ்த்தியதாலா?

''அண்ணே ஒவ்வொரு மாசமும் 9, 18, 27 தேதியில மட்டும் டென்ஷனா இருக்கீங்களே... ஏன்?''

''அமைச்சர் பதவிய பறிச்சுடுவாங்களோன்னு தான்!''

- சாந்தி பாஸ்கர்



எதுவாக இருக்கட்டும். அல்லது இத்தனை காரணங்களின் கூட்டு விளைவாகவும் இருக்கட்டும். ஸ்ரீ சரியானால் சரி. தங்கைக்குப் பிடித்த ஒலி நாடாக்களை ஒலிக்கவிட்டாள். அவளுக்குப் பிடித்த பழங்களை ராஜன் வாங்கிவர, அவற்றை உட்கொள்ள வைத்தாள்.

அன்று மாலை கார்த்திக்கிடமிருந்து தொலைபேசி அழைப்பு. தங்கையிடம் ரிசீவரைக் கொடுத்துவிட்டு நாகரிகமாக வேறு பக்கம் நகர்ந்துவிட்டாள். ஆனால் இருபது நிமிடங்கள் அந்தப் பேச்சு நீண்டது வியப்பாகத்தான் இருந்தது. பரவாயில்லையே! தொலைபேசிப் பேச்சு முடிந்த பிறகு தன்னிடம் வந்த ஸ்ரீலதா "அவருக்கு ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்கலையாம். நான் கொஞ்சநாள் அங்கே தங்கிட்டு அப்புறமா வரட்டுமா?'' என்றாள்.

ராஜன் வந்தபிறகு மூவருமாகவே கார்த்திக் வீட்டுக்குக் கிளம்பினார்கள். கிளம்புவதற்குமுன் "கார்த்திக்கிடம் ஒரு வார்த்தை சொல்லிட்டு மல்லிகாவை மறுபடியும் வேலைக்குச் சேரச் சொல்லலவா? நானேகூட இதை அவளிடம் சொல்லத் தயார்'' என்றாள் அனுஷா. ஆமோதிப்பதாகத் தலையசைத்தாள் ஸ்ரீ.

கார்த்திக்கிடம் இதை வெளிப்படுத்தியதும் "எந்தச் சிக்கலும் இல்லேன்னா எனக்கு ஓகேதான்'' என்றான்.

"இனிமேல் எந்தச் சிக்கலும் இருக்காது'' என்றான் ராஜன் அழுத்தந்திருத்தமாக. இதற்குள் அனுஷா அவனிடம் அனைத்தையும் சுருக்கமாகப் பகிர்ந்து கொண்டிருந்தாள்.

வீடு வந்தபோது மணி பத்தை தாண்டியிருந்தது. பிற வேலைகளை முடித்துவிட்டுப் படுக்கையறைக்குள் அனுஷா நுழைந்தபோது ராஜன் கண்களை மூடியபடி படுத்துக் கொண்டிருந்தான். தூங்கிவிட்டானா என்பது தெரியவில்லை. அவனையே சற்றுநேரம் உற்றுப்பார்த்த அனுஷா அவன் நெற்றியை நோக்கித் தன் இதழ்களைக் கொண்டு சென்றாள். அது வெறும் தொடக்கம்தான்.

இம்முறை தனக்கு ஏற்பட்ட சிலிர்ப்புக்கு நிச்சயம் அருவருப்பு காரணமல்ல என்பது அனுஷாவுக்குப் புரிந்தது.

மறுநாள் காலை ஐந்தரை மணிக்கே ஸ்ரீலதாவிடமிருந்து தொலைபேசி. "ரொம்ப ரொம்ப தாங்ஸ்க்கா. எல்லாத்துக்குமே'' என்றாள்.

'நானல்லவா இவளுக்கு நன்றி கூற வேண்டும். உளவியல் வல்லுனர்போல செயல்பட்டு இவளைச் சரி செய்ய வேண்டும் என்று நான் எண்ணியிருக்க, என்னையல்லவா இவள் சரி செய்திருக்கிறாள்?'

ஏனோ சட்டென அதைக் கேட்கத் தோன்றியது. ''ஸ்ரீ, உன்வீட்டு மீன் தொட்டியைப் பார்த்தியா?''


''தொட்டியிலே அது இப்ப இல்லைக்கா. நிம்மதியா இருக்கு''

மத்தாப்பு சேலை கட்டி மாமன்
பொண்ணு வாராடா
மனசெல்லாம் சுக்கு நூறா
ஆக்கிவிட்டுப் போறாடா

தொட்டாச் சிணுங்கியாட்டம்
முகஞ் சுருங்கிப் போறாடா
தூர நின்னு பார்க்கும்
போது
ஓரக்கண்ணால் ரசிப்பாடா

நெய்யால பொங்கல் வச்சு நேத்துஅவ
தந்தாடா
நெஞ்சிலந்த பொங்கல் போல
ஒட்டிக்கிட்டு நின்னாடா
பைய நானும் பக்கம் போனா
பாஞ்சு ஓடிப் போறாடா
பைத்தியமா என்னை அவ
ஆக்கிவிட்டுப் போறாடா

குத்து விளக்காட்டம்
தலை குனிஞ்சு வாராடா
கூட வரும்
அத்தைக்காரி கொட்டும்
தேளைப் போலடா



மத்தாப்பு சேலைக்காரி!

பத்துப் பேரை கூட்டிக்கிட்டு நானும்
போகப் போறேன்டா
பாக்கு வச்சு பரிசம் போட்டு நாள்
குறிச்சு வாரேன்டா!

இராசபாளையம் பா.முருகேசன்

இன்னும் மீன்கள் அதில் துள்ளி விளையாடுவதாக ஸ்ரீ குறிப்பிடவில்லை. ஆனால், அப்படி அவன் சொல்லும் நாள் விரைவிலேயே நெருங்கிவிடும் என்று பட்டது.

தொலைபேசி ரிசீவரை வைத்து விட்டு, ஸ்டவ்வில் பாலை வைத்துவிட்டு மீண்டும் அறைக்குள் வந்தாள். உறக்கம் முழுதுமாகக் கலையாமல் புரண்டு கொண்டிருந்த ராஜனின் முகத்தில் ஆனந்தத் திருப்தி புலப்பட்டது.

அந்தத் திருப்தியை எப்போதும் தொலைக்கவே கூடாது என்ற தீர்மானம் அவளுக்குள் வலுவாக எழுந்தது.

(நிறைவடைந்தது)





"நல்லாட்சி நிச்சயம்!"

- நிதிஷ்குமார்

இரண்டாம் தடவையாகப் பீகார் மாநில முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கிறார் நிதிஷ் குமார். முதல்தடவையாக 2000-ம் ஆண்டு மார்ச் மாதம் சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியுமா என்ற சந்தேகம் நிலவிய சூழ்நிலையில் முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். மூன்றாம் தேதி பதவி ஏற்றவர், பத்தாம் தேதி பதவி இழக்கும்படி ஆனது.

இந்தமுறை பீகார் மக்கள், ஐக்கிய ஜனதா தளம், பா.ஜ.க கூட்டணிக்கு மெஜாரிடி கொடுத்து, மீண்டும் அரியணை ஏற்றி இருக்கிறார்கள். "இந்தத் தேர்தல், இரண்டு விஷயங்களைத் தவிடு பொடியாக்கியிருக்கிறது; பீகாரில், பாரபட்சமற்ற முறையில் நேர்மையாகத் தேர்தல் நடத்துவது என்பதே இயலாது என்ற கருத்தை, தேர்தல் கமிஷன் முறியடித்துள்ளது. தேர்தல் கமிஷனுக்கு கங்கிராட்ஸ்! இன்னொன்று பீகாரில் நல்லாட்சி என்பது வெறும் கனவு! அதுவும் தகர்க்கப்பட்டுள்ளது. மாற்றத்தை எதிர்நோக்கி வாக்களித்துள்ள பீகார் மக்களுக்கு நல்லாட்சி வழங்குவதே என் முதல் பணி!" என்று கூறியிருக்கிறார் நிதிஷ்குமார்!

நிதிஷ்குமாரின் சொந்த ஊர் பாட்னா மாவட்டத்தின் பக்தியார்பூர். பாட்னாவில் உள்ள பீகார் இஞ்சினியரிங் கல்லூரியில் படித்தவர். எழுபதுகளில் பீகாரில், ஜெயபிரகாஷ் நாராயண் ஆரம்பித்த மாணவர் இயக்கத்தில் ஒரே சமயத்தில் சேர்ந்தவர்கள்தான் லாலுவும் நிதிஷ்குமாரும். இரண்டு பேரும் ரொம்ப தோஸ்த். அந்தக் காலத்தில் பத்திரிகையாளர்களுடன் சரளமாய் ஆங்கிலத்தில் உரையாடக்கூடிய இளைய தலைவர் என்று பெயர் எடுத்தவர் நிதிஷ்குமார். எமர்ஜென்சியின்போது ஜெயில்வாசம் அனுபவித்தவர். லாலு பீகார் முதலமைச்சரானபோது, அவரது அமைச்சரவையில் பங்கேற்ற நிதிஷ், ஒரு கட்டத்தில், இனியும் லாலுவிடம் இருந்தால், மேலே வர முடியாது என்று நினைத்தார். தக்க தருணம் பார்த்து, 94-ல் ஜார்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் 12 எம்.பி.களுடன் நிதிஷ் குமார் விலக, சமதா கட்சி உதயமானது.

89-ல் பாராளுமன்றத்துக்கு முதல் தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிதிஷ் குமார் 90-ல் மத்திய துணை அமைச்சர் (விவசாயம்) ஆனார். தொடர்ந்து, தரைவழிப் போக்குவரத்து, விவசாயம், ரயில்வே என்று முக்கியத் துறைகளை நிர்வகித்தவர்.

தொடக்க காலத்தில் தன் சகாவான லாலு யாதவுடன் இருந்தபோது, இன்று தோழமைக் கட்சியாக இருக்கும் பா.ஜ.கவை மதவாதக் கட்சி என்று விமர்சித்தவர் நிதிஷ்குமார். இன்னும் சொல்லப் போனால் அத்வானி முதல் ரதயாத்திரை போனபோது, அவரைக் கைது செய்த லாலுவின் அமைச்சரவையில் நிதிஷ்குமாரும் இடம் பெற்றிருந்தார். அதனைத் தொடர்ந்து வி.பி.சிங் அரசு கவிழ்ந்தது வரலாறு!

- எஸ். சந்திரமௌலி

அம்மா அனுப்பிய நான்கு துணைமேயர்கள்!

'நான் இல்லாம கூட்டத்தைக் கூட்ட முடியாதுங்கறேன்'னு துணைமேயரு ஒரு பக்கம் சவுண்டு விட, 'நடத்திக்காட்றேன் பாரு'ன்னு அம்மா சைடுல இருந்து முண்டா தட்ட, ஏகப்பட்ட கசமுசா ஆகி ஒருவழியா போன திங்கள்கிழமை கூட்டத்தை ஜெகஜ் ஜோதியா நடத்திட்டாங்கப்பு... எப்படின்னு கேக்கறீங்களா, நம்ம ஓ.பி.எஸ் மாதிரி ஒரு நல்லதம்பியை (பேரு விஜய. ராமகிருஷ்ணா) புடிச்சாந்து, மன்றத் தலைவராக்கி கிட்டத் தட்ட அஞ்சரை மணிநேரத்துக்கு மன்றத்தை நடத்தி நூத்திசொச்சம் தீர்மானத்தையும் நிறைவேத்திபுட்டாங்கப்பு...

பின்னே சும்மாவா... கராத்தே எடத்துக்கு நாலு துணைமேயருங்களையில்ல அம்மா அனுப்பினாங்க... அட... இது என்னப்பா.... புதுக் குழப்பமா இருக்கேன்றீங்களா... மன்றத்தை நடத்துறது துணைமேயருன்னா, தற்காலிக மன்றத் தலைவரோட ஆளுங்கட்சித் தலைவரு சுகுமார்பாபு, வெற்றிவேலு, சேகர்பாபு எம்.எல்.ஏ மூணு பேருமா சேர்ந்துதானே மன்றத்தையே நடத்துன மாதிரி தெரிஞ்சுது. அத்தோட பாலகங்காவும் வந்து ரிப்பன் பில்டிங்ல டேரா போட்டுட்டாரு... அவரு சேகர்பாபு எல்லாரும் சேர்ந்து மன்றத்துல யாரு எந்த நேரத்துல எப்படிப் பேசறதுன்னு டிப்ஸ் கொடுத்துட்டே இருந்தாங்கப்பு...

இப்போ மன்றத்துல என்னென்ன நடந்துச்சுன்னு வெலாவாரியா சொல்லாம பிட்டுபிட்டா சொல்றேன்... ஓகேவா...க்க்கும்...

வெள்ளபாதிப்புப் பணிகளை பார்க்கறதுக்கு அம்மா போனப்போ எடுத்த போட்டோக்களை மன்ற வாசல்ல வச்சிருந்தாங்க... அது எல்லாத்துலயும் கமிஷனரு படா ஷோக்கா இருந்தாரு... ஆனா அது ஒன்னுல கூட கவுன்சிலருங்க இல்லன்னு ரொம்பவே மன்றத்துல கோச்சுக்கிட்டாருப்பு ராயபுரம் மனோ... அய்யோ... பாவம்...


வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவங்களுக்கு உணவுப்பொட்டலம் வழங்கப்பட்டதுக்கு எம்புட்டு செலவாச்சுன்னு கேட்டதுக்கு சுகுமார்பாபு அவசரத்துல தப்பா தகவல் தந்துட்டாரு... நிலைமையைப் புரிஞ்சுக்கிட்ட கமிஷனரு கபால்னு மைக்கைப் பிடிச்சு இன்னும் செலவுக் கணக்கை இறுதி பண்ணலைன்னு சொல்லிச் சமாளிச்சுட்டாரு.

துணை மேயரு எப்டியும் வருவாரு... வந்தா மடக்கிடலாம்னு ஐடியா பண்ணி வாசல்ல செமையா போலீஸ் பாதுகாப்பு போட்டிருந்தாங்க... இதுல துணை மேயரோட தபேதார் வேற யூனிஃபார்ம்ல இருந்தாரா... பாவம், போலீஸ் கண்ணுல விளக்கெண்ணையை ஊத்திக்கிட்டு நின்னுச்சு. ஆனா கட்சி வரைக்கும் கராத்தே வரவே இல்ல... திடீர்னு ஒரு புரளி... கராத்தே, மனோ ஆபீஸ்ல இருக்குறார்னு.... கார்ப்பரேஷனே ஆடிப்பூடுச்சப்பு...


• விஜய. ராமகிருஷ்ணா



• மனோ



• கமிஷனர்




• வெற்றிவேல்



கலைஞர் மற்றும் ஸ்டாலினைத் திட்டாதவரைக்கும் நீங்க வெளிநடப்பு பண்ண வேணாம்னு மேலிடத்துல இருந்து உத்தரவு வந்திருக்கு போல... எப்பவும் இல்லாத மாதிரி அஞ்சு மணி நேரம் வெளிநடப்பு பண்ணாம சபையில இருந்தாங்கப்பு திமுக



ஒற்றன்



கவுன்சிலருங்க... என்ன ஆச்சுன்னு தெரியல... திடுதிப்புன்னு வெள்ள நிவாரணம் தொடர்பா தீர்மானம் நிறை வேற்றலன்னு சொல்லி எல்லா எதிர் கட்சியும் வெளிநடப்பு பண்ணிட்டாங்க... அப்பத்தான் மன்றம் நடந்தமாதிரியே பல பேருக்குத் தெரிஞ்சதுப்பு...

இதையே எதிர்பார்த்துட்டு இருந்த அதிமுக சைக்கிள் கேப்ல எல்லா தீர்மானத் தையும் நிறைவேத்திட்டாங்க... பாவம் ஏன்டா வெளில வந்தோம்னு வருத்தப்பட் டாங்க எதிர்கட்சி கவுன்சிலருங்க... இதுதான் யாருமே எதிர்பார்க்காத சூப்பர் க்ளை மாக்ஸ்...

சரி... இந்தக் கூட்டம் நடந்துமுடிச்சு... துணைமேயரு வேற 28 கூட்டம் நடத்து வாரே... நீங்க கலந்துக்குவீங்களான்னு ராய புரம் மனோகிட்ட கேட்டா...

"மூணு மாசத்துக்கு ஒருதடவை நடக்கும் கூட்டம். அது தோ... முடிஞ்சு போச்சு... அந்தக் கூட்டத்தை நடத்தணும்னு சொல்ற துணைமேயரே எங்கேன்னு தெரியல... காகி தப்புலி மாதிரி எங்கேயோ இருந்துகிட்டு அப்பப்போ அறிக்கை விடறாரு... அவரு கிட்ட இருந்து காத்துல பறந்து வர்ற செய்தி களை வச்சு கூட்டம் நடக்குமா நடக் காதான்னு சொல்ல முடியாது. ஆனா ஒண்ணு, மன்றத்தைக் கூட்டும் உரிமை அவ ருக்குத்தான் உண்டு"ன்னு சொல்றாரு.

சரி... இந்த மன்றத்தைக்கூட்டி என்னதான் சாதிச்சீங்கன்னு வெற்றிவேலு கிட்ட கேட்டா சாரு கடுப்பாயிட்டாரு...

"சட்டப்படிதான் கூட்டம் கூட்டப்பட்டு மக்களுக்கான நலத்திட்டங்கள் குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கே... துணைமேயர்ங்கற தனிமனிதர் இல்லன் னாலும்கூட மன்றம், தன்னோட மக்கள் நலத் திட்டங்களை விட்டுக் கொடுக்காம நிறைவேற்றும்னு இன்னிக்கு நிரூபிக்கப் பட்டிருக்கு. வேறென்ன வேணும்? உண்மை யிலயே மன்றம் எப்படி நடந்ததுன்னு நீங்களே பார்த்திருப்பீங்க... அதேசமயம் துணைமேயர் இல்லாம தாற்காலிகத் தலைவரை வைத்துக் கூட்டத்தை நடத் துவது ஒண்ணும் தவறான முன்னுதாரண மில்லை."

ம்ஹூம்... என்னென்னவோ நடக்கும்; பாதுகாப்பா போவோம்னு ஹெல்மேட்டு... கேடயம்னு போனதுதான் மிச்சம். ஒண்ணுமே விவகாரமா நடக்கலப்பு!

படங்கள்: **ராஜன்**

நீங்கள் கேட்டவை -தராசு

பத்திரிகைகள் எதையும் பெரிதாக்க முடியுமா?

● கே.வி. ராமன்,
சென்னை -73

? தி ஹிந்து ஆசிரியர் என். ராம், ஸ்ரீலங்கா அரசின் உயர்ந்த 'ஸ்ரீலங்கா ரத்னா' விருது பெற்றுள்ளாரே...?

! தி ஹிந்துவுக்குக் கௌரவம்; இந்தியாவின் மகிழ்ச்சி!

● அ. சாம்பசிவம்,
சென்னை - 23

? வெள்ள நிவாரண உதவிகளை, பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி அனைத்து மக்களுக்கும் வழங்குவது...?

! அனைத்து மக்களுக்கும் கிடைத்துவிட்டால் பாதகம் இல்லையே! பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்காமல் போய், பாதிக்கப்படாதவர்களுக்குக் கிடைக்கும் போதுதான் எதிர்ப்பு எழுகிறது! வறட்சி, புயல், வெள்ள நிவாரணங்கள் தனி நபர்களைக் குறி வைக்காமல் சமுதாயத்தைக் குறி வைத்துத் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டால் இத்தகைய புகார்கள் எழாது.

● தி. சந்தானம்,
சென்னை - 35

? ஏன் தமிழ் சமூகம் இப்படி சகிப்புத் தன்மையை இழந்து தவிக்கிறது... தாழ்வு மனப்பான்மையா?

! இல்லை... உயர்வு மனப்பான்மைதான்!



● தேசத்தின் மகிழ்ச்சி

● எஸ்.எம். ஷாஜஹான், மேலப்பாளையம்

? திரையுலகில் தங்கர்பச்சான், குஷ்பூ - கஹாசினி - இவர்கள் வரிசையில் விஜய்யும் சேர்ந்துவிட்டாரா? அவருடைய உருவ பொம்மையும் எரிக்கப்படுகிறதே?

! வழக்கறிஞர்கள் போட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால் அதைப்பற்றி கருத்துக் கூற விரும்பவில்லை. ஒன்று நிச்சயம் சொல்லலாம்... விஜய், எழுதிக் கொடுத்த வசனத்தைப் பேசியவர். கஹாசினி, குஷ்பு, தங்கர்பச்சான் தாங்களே வசனம் பேசினார்கள். இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. வழக்கறிஞர்களுக்குத் தெரியாதா என்ன...!

● அ. கஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? 'ஏ.சி அறையில் உட்கார்ந்துகொண்டு அரசியல் நடத்துகிறார்கள்' என பா.ஜ.க. தலைவர்கள் மீது ஷத்ருகன் சின்ஹா குற்றம் சாட்டியுள்ளாரே...?

! வளர்த்த கடா மார்பிலே பாயும் என்று கேள்விப்பட்டதில்லையா!

● மர்ம முடிச்சுகள்!



● 'ஏஸி' குற்றச்சாட்டு!



● எம். பாஸ்கர், திண்டுக்கல்

? "உலக அரங்கில் தமிழர்களுக்கு ஒரு சிறந்த அங்கீகாரத்தை வாங்கித் தந்தவர் பிரபாகரன்; உலகத் தமிழர்களையே வழி நடத்தும் அளவுக்குப் பிரபாகரனுக்குத் தலைமைப் பண்புகள் இருக்கின்றன. என்னுடைய இந்தப் பேச்சு இந்திய இறையாண்மைக்கு எதிரானது அல்ல..." என திருமாவளவன் கூறுவது பற்றி...?

! தமிழர்களுக்கு உலக அரங்கில் ஒரு அபகீர்த்தி மிக்க அங்கீகாரத்துக்கும்

தவறான வழி நடத்தலுக்கும் திருமாவளவன் அளிக்கும் சான்றிதழ்!

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33

? இன்றைய சிறந்த ஆன்மிகப் பேச்சாளர் யார்...?

! பலர் உண்டு என்ற போதிலும் வேளுக்குடி கிருஷ்ணனின் வைணவ தமிழோடு இணையும் வித்வத்தும் புலமையும் பக்தியும் யதார்த்த நோக்கும், திரும்பத் திரும்பக் கேட்கத் தூண்டுகின்றன.

● பி. இராஜேந்திரன், லோயர் அணைக்கட்டு

? டெல்லி ஜவாஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்காக ஆணுறை விற்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதாமே - கேட்பதற்கே கொடுமையாக இல்லையா சார்?

! மாணவர்கள் அவமானப்பட வேண்டிய விஷயம்! "எங்களுக்கு இது தேவையில்லை; நீக்கி விடுங்கள்..." என்று என்றைக்கு அவர்கள் குரல் கொடுக்கிறார்களோ, அன்று அப் பல்கலைக் கழகத்தின் கல்விமுறை அர்த்தம் பெறும்.



● ... தந்த வசனமும்!



● அ.ப. ஜெயபால், பரங்கிப்பேட்டை

? இந்திய கிரிக்கெட் அணியில் தொடரும் ஆட்டக்காரர்கள் மாற்றங்களையும் திருத்தங்களையும் 'டேலன்ட் ரிசர்ச்' என்கிறார்களே?

! இப்போது வெறுமே 'சர்ச்'தான் பண்ணுகிறார்கள். 'ரிஸர்ச்' பண்ண வேண்டியது நிறைய பாக்கியிருக்கிறது.



● சொந்த வசனமும்...

● டி. சந்திரன், ஈரோடு - 2

? பத்திரிகைகள் நினைத்தால் எந்த விவகாரத்தை வேண்டுமானாலும் பெரிதாக்க முடியுமா?

! முடியும். ஈரைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்கும் மலிவான யுக்தியை வாசகர்கள் ஏற்று, வரவேற்கும்வரை... முடியாது - வாசகர்கள் இந்தப் போக்கை நிராகரிக்க ஆரம்பிக்கும் போது.

● ஏ. சுகுமார், காட்பாடி

? கனிமொழி, கார்த்திக் சிதம்பரம் ஆரம்பித்துள்ள 'கருத்து' இயக்கம் பற்றி தராசுவின் கருத்து?

! பொதுவாக, சகிப்புத்தன்மை குறைந்து வருகிற காலகட்டத்தில் கருத்துச் சுதந்திரத்தைப் பேணிக் காக்க இணைய தளத்தில் கருத்துப்பதிவு செய்யச் சொல்கிறார்கள். கூடவே பொறுப்புணர்வையும் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்க அவசியம் இருக்கிறது.



● மல்லிகைமன்னன், மதுரை - 17*

? மத்திய அமைச்சரவையில் மாற்றம் செய்த பிறகும் பிரதமர் அயல் உறவுத் துறையைத்

• வாடாத துளசி!

தம்மிடமே வைத்துக் கொண்டிருப்பதன் மர்மம் என்ன...?

! அயலுறவுத் துறையிலிருந்து வெளியேற்றப்பட்ட அமைச்சர் தொடர்பாக ஏதேனும் மர்மமுடிச்சுகள் அவிழ்ந்தால் அது முதலில் தமக்குத் தெரிய வரட்டும் என்கிற நோக்கில்தான்!



● ஆர். கோபாலன்,
சென்னை - 33

? நாட்டில் மண்டிக் கிடக்கும் காட்டுச் செடிகளின் மத்தியில் மது தண்டவதே ஒரு துளசிச் செடியாக இறுதிவரை வாழ்ந்தது மற்றவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்குமா?

! பிரச்னையே காட்டுச் செடிகளை துளசிச் செடிகள் என்று மக்கள் நம்பி ஏமாறுவதுதான். புதிய துளசிச் செடிகளைப் பயிர் செய்து வளர்ப்பதும் காட்டுச் செடிகளைக் களையெடுப்பதும் மக்கள் கடமை. விழிப்புணர்ச்சி பரவித்தான் வருகிறது. செய்து காட்டுவாங்க - நம்பிக்கையோடு இருங்க.

● மதுரை முருகேசன்,
திருச்சி - 18

? "நான் முழுக்கைச் சட்டைக்காரன், ஜி.கே. வாசன் அரைக்கைச் சட்டைக்காரர் - இந்தச் சட்டைக் கைகளில் மட்டும்தான்



• தப்புச் சான்றிதழ்!

எங்கள் வித்தியாசம்" என்று ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறுகிறாரே...?

! கைச் சின்னத்தை மறந்துட்டு, அரைக் கை - முழுக்கை வித்தியாசங்களைப் பாராட்டிக்கிட்டுப் பூசலை வளர்த்துக்கொள்வதுதான் பிரச்னையே!

• அழைக்கும் ஆன்மிகம்

● சு. அபிராமி, ஆவணத்தாங்கோட்டை (அஞ்)

? சார்க் உச்சி மாநாட்டால் ஒரு நாட்டுக்கு என்னென்ன நன்மைகள் கிட்டும்...?



! வர்த்தகம், விசா வழங்குதல், போக்குவரத்து, வலைப்பின்னல் போன்றவற்றில் ஒத்துழைக்கலாம் என்பது சமீபத்திய சார்க் மாநாட்டின் தீர்மானங்கள். இத்தீர்மானங்கள் செயல்வடிவம் பெறுகிறபோது பயன்தரும். ஆனால் அதே மாநாட்டை இந்தியாவைத் தாக்க பாகிஸ்தான் பயன்படுத்துகிறபோது, உச்சி மாநாடு உகப்பல் மாநாடாகி விடுகிறது!

● வி. லக்ஷ்மிராமன், சென்னை - 73

? கோல்கத்தா அரசு மருத்துவமனை ஒன்றில், கண்ணில் எறும்பு கடித்து ஒரு நோயாளி இறந்துவிட, மேற்கு வங்க அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாமே...?

! இந்தியாவெங்கும் பல அரசு மருத்துவமனைகளில், லாபரோஸ்கோப் கருவிகளே உற்பத்தி செய்யாத நிறுவனங்களிடம் அவை 'வாங்கப்பட்டுள்ளதாக' தெரிய வந்துள்ளது. இப்படிப்பட்ட அரசு மருத்துவமனைகள் இருந்தால் எறும்புக்கடியால் நோயாளி சாவது என்பதுகூட நடக்கக்கூடியதுதான்.

❑ ரூ 100 பரிசு பெறுபவர்
அ. சாம்பசிவம்
15/7, ரங்கய்யா தெரு,
அயன்புரம்,
சென்னை 600 023

★ ரூ 50 பரிசு பெறுபவர்
மல்லிகைமன்னன்,
12-9-32, குமரன் நகர்,
முடக்கத்தான்,
மதுரை 625 017

ராஜவெற்றி!

"நான் தலைவனல்ல... உங்கள் பாதுகாவலன்"

இது இலங்கையின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மஹிந்த ராஜபட்சய சமீபத்தில் அடித்த அசத்தல் டயலாக். அந்நாட்டின் ஐந்தாவது ஜனாதிபதியாகியிருக்கும் இவரைப் பற்றிய ஐந்து செய்திகள் இதோ...

● இவரும் ஒரு அரசியல்வாதியின் வாரிசுதான். ஆம்... பண்டாரநாயகேவின் நெருங்கிய சகாவான டி.ஏ.ராஜபட்சயவின் மகன்தான் மஹிந்தா. இவர் 1970-ல் ஹம்பன்டோடா மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராளுமன்றத்துக்குள் அடியெடுத்து வைத்தபோது வயது 24. அப்போது அங்கிருந்தவர்களுள் இளங்கன்று இவர்தான். அப்போது யாருக்குமே தெரிந்திருக்காது ராஜபட்சய ஒருநாள் இப்படி உச்சத்தை எட்டுவார் என்று.

● 1989 - 1993-ல் ரணசிங்கே பிரேமதாசா ஆட்சிக்கெதிராக நடத்தப்பட்ட போராட்டத்தில் அதிதீவிரமாகக் கலந்து கொண்டது முதல் ராஜபட்சயவின் செல்வாக்கு படிப்படியாக உயரத் தொடங்கியது. மீன்வளம் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தபோது வீடற்ற மீனவ மக்களுக்குக் குடிசை அமைத்துத் தரும் திட்டத்தினைக் கொண்டு வந்தார். அது முழுமையாக நிறைவேறாவிட்டாலும்கூட இது மக்கள் மத்தியில் பெரிய அளவில் ராஜபட்சயவின் மதிப்பை உயர்த்தியது.

• ராஜபட்சய



● 2004 நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிகா கட்சி வெற்றி பெற்றபொழுது மறைந்த லக்ஷ்மண் கதிர்காமரும் ராஜபட்சயவும் பிரதமர் பதவிக்கு வேட்பாளராக சந்திரிகாவால் முன்னிறுத்தப்பட்டனர். அப்போது ராஜபட்சய பிரதமரானார்.

● விடுதலைப்புலிகள் விவகாரத்தில் கொஞ்சம் கடுமையாக நடந்து கொள்பவர் ராஜபட்சய. இதன் காரணமாக இந்தத் தேர்தலில் ஈழத்தமிழர்கள் எவரும் வாக்களிக்கவில்லை. இந்தச் சமயத்தில் ராஜபட்சய ஜெயித்திருப்பது ஈழத் தமிழர் பிரச்னைக்கு ஒரு தவறான சமிக்ஞையாகவே கருதப்படுகிறது. 'இவரது வெற்றி, விரைவில் எங்களுக்கான வெற்றியாக முடியப் போகிறது' என்கின்றனர் விடுதலைப்புலிகள். அதாவது, போர் மூலமே தீர்வு காண முடியும் என்ற எண்ணத்திற்கு விடுதலைப் புலிகள் வந்துவிட்டதாகவே தெரிகிறது.

● வெற்றி பெற்றவுடன் இவர் அளித்த பேட்டியில், "இனி நான் மக்களிடம் முன்பு போல அவ்வளவு நெருக்கமாகப் பழக முடியாது போலத் தெரிகிறது. ஏனென்றால், என்னைச் சுற்றி பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுவிட்டது. உண்மையிலேயே இது எனக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது" என்று உணர்ச்சிவசப்பட்டார். இந்தச் சமயத்தில் இவர் ஒரு முன்னாள் நடிகர் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்.

• முத்து

ஆந்தரத் தெலுங்கினில்


"ஆக்கவலி நேனு வாடினி முந்து முந்து பாம்பே ஏர்போர்ட்லோ சூஸா" என்று அஸின் சுந்தரத் தெலுங்கில் சூர்யாவைக் கலாய்க்கும்போது "சினிமா அதிரிந்தி, சாலபாகுந்தி" என ஆர்ப்பரிக்கிறார்கள் ஆந்திர இளைஞர்கள். 'கஜினி'யின் மெகா வசூலைக் கண்டு எம்.என். நம்பியார் போல கையைப் பிசைகின்றனர் தெலுங்கு ஹீரோக்கள். அட, என்ன நடக்குது ஆந்திராவில்?

வழக்கமாகத் தமிழ்நாட்டிலிருந்து கிளம்பும் புயல்தான் ஆந்திராவை வாட்டியெடுக்கும். இப்பொழுது தமிழ்ப்படங்களும் ஆந்திராவில் பின்னிப் பெடலெடுத்துக் கொண்டிருக்கின்றன.

பாண்டு, டேஞ்சர், பகிரதா, அல்லரி பிடுகு, வம்சம், பன்னி... இவையனைத்தும் சமீபகாலமாக பாக்ஸ் ஆபிஸில் பல்லிளித்த தெலுங்குப் படங்கள். மாறாக சந்திரமுகியும் அன்னியனும் தெலுங்கில் டப் செய்யப்பட்டு, இந்த வருடம் வெளியான அனைத்துத் தெலுங்குப் படங்களின் வசூலையும் மிஞ்சி விட்டன.

'ம்... ரஜினி, விக்ரமெல்லாம் பெரிய நடிகர்கள். மக்கள் ரசிக்கிறார்கள்...' என்று தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்ட டோலிவுட்டுக்கு மீண்டும் தலையில் பேரிடி. 'கஜினி,' 'காதல்' இரண்டும் டப் செய்யப்பட்டு 'நீ முந்தி, நான் முந்தி' என்று இப்பொழுது வசூல் மழை பொழிந்து கொண்டிருக்கிறது. நாற்பத்தைந்து லட்சம் செலவில் தெலுங்குக்காக விற்கப்பட்ட 'காதல்' பின்னர் 1.5 கோடி செலவில் 'பிரேமிஸ்தி' என்று மொழிமாற்றம் செய்யப்பட்டு கோடிக்கணக்கில் பணத்தை வாரி இறைத்துக்கொண்டிருக்கிறது.

'காதல்' மாதிரியான க்ளாசிக் படங்களை




பஸ் ஸ்டாண்டுக்கும் சைக்கிள் ஸ்டாண்டுக்கும் என்ன வித்தியாசம்?
பஸ் ஸ்டாண்டுல பஸ் போனதுக்கப்புறம் ஸ்டாண்ட் அங்கேயேதான் இருக்கும்.
சைக்கிள் ஸ்டாண்டுல சைக்கிள் போறப்ப ஸ்டாண்டும் கூடவே வரும்.

இளமை கல்கி

மிஸ்டர் எக்ஸ், 9444194441 நம்பரை எப்படி டயல் பண்ணுவாரு?
ஒருதடவை 94441 டயல் பண்ணிட்டு, ரீடயல் பண்ணுவாரு!

நாய்க்கு எலும்பு பிடிக்கும்!
எறும்புக்குச் சர்க்கரை பிடிக்கும்!
குரங்குக்குப் பழம் பிடிக்கும்!
குதிரைக்குக் கொள்ளு பிடிக்கும்!
ஆனா மாட்டுக்கு உன்னைத்தான் பிடிக்கும்...
புரியலையா... நீதான் புண்ணாக்காச்சே!





படமெடுத்து...

தமிழ் ரசிகர்கள் மட்டும் தான் என்றில்லை. நாங்களும் ரசிப்போம். வலிப்பு வருவதுபோல் ஆடுவது, வண்ணத் திரையை ரத்தக் காடாக்குவது, எல்லையில்லா கவர்ச்சியை ரசிகர்கள் மீது திணிப்பது என்று புளித்துப்போன ஃபார்முலாக்களிலிருந்து இனி மேலாவது வெளியே வாருங்கள்' என்று தெலுங்குத் திரையுலகுக்கு சம்மட்டி அடி அடித்திருக்கின்றனர் தெலுங்கு ரசிகர்கள்.

விளைவு? அபாரமான மூளைகொண்ட தமிழ் இயக்குனர்களை பெரிய விலை கொடுத்துத் தன் வசம் இழுத்து வருகிறது டோலிவுட். ஷங்கர், முருகதாஸ், தரணி, பி.வாசு, விக்ரமன் என பல பிரபல தமிழ் இயக்குனர்கள் கையிலும் தெலுங்குப் படங்கள்.

- செந்தில்

ஜிகு ஜிகு SMS!

அண்ணாமலை டயலாக்:
"உன்னோட காலண்டர்ல குறிச்சு வைச்சுக்கோ! இந்த நாள், என்னோட கார்டை ரீ-சார்ஜ் பண்ணி, உன்னை விட அதிகமா எஸ்.எம்.எஸ் அனுப்பி, நீ எப்படி எனக்குத் தொல்லை கொடுத்தியோ, அதேமாதிரி நானும் கொடுக்கல, நான் உன் நண்பன் இல்ல... 2 + 2 = 8. கூட்டிக் கழிச்சுப் பாரு! கணக்குத் தப்பா வரும்!

10 செகண்டுல 121 பெயர்களைச் சொல்ல முடியுமா?
முடியாது. நீ சொல்லு!
ரொம்ப ஈஸி! எண்ணிக்கோ!
100 முகமுது, 6 முகம், 7 மலை, 5 வா, 3 ஷா!

வரப்போகும் கம்ப்யூட்டர் படங்கள்!

சின்ன ப்ரோகிராம்! பெரிய ப்ரோகிராம்!
ஜாவாவுக்கு மரியாதை!
எங்களுக்கும் அவுட்புட் வரும்!
சி இருக்கும்வரை...!
. Net S/0 மைக்ரோசாஃப்ட்.
டேட்டாராஜா DBMS
.Net பாதி! VB பாதி!
காலமெல்லாம் கம்பைலர் வாழ்க!
என் கோடிங் தான்! எனக்கு மட்டும்தான்!
தொட்டி ஜாவா!

- முகில்

ஜூனியர் கபில் பராக்!

கபில்தேவ் - உலகின் மிகச்சிறந்த ஆல்ரவுண்டர்களுள் குறிப்பிடத்தகுந்தவர். இவருக்குப் பிறகு ஒரு சர்வதேசத் தரமிக்க ஆல்ரவுண்டர் என்பது இந்திய அணிக்கு எட்டாக்கனி. அவ்வப்போது ராபின்சிங் போன்றோர் வந்து சில காலம் கலக்குவார்கள். பல சமயங்களில் ரிஷிகேஷ் கனித்கர் போன்ற ஆசாமிகள் ஆல்ரவுண்டர் போர்வையில் வந்து சொதப்பிவிட்டுச் செல்வார்கள். இவையெல்லாம் இந்தியர்களின் நேற்றைய புலம்பல்கள்.

ஹலோ, டோன்ட் வொர்ரி... ஜூனியர் கபில் ரெடி என்று சொல்லாமல் சொல்கிறார் இர்ஃபான் பதான். ஸாரி... அவங்க அம்மாவுக்கு அப்படிச் சொன்னா கோபம் வந்துடுமாம். இர்ஃபான்கான் பதான்னுதான் சொல்லணுமாம்... அதுதான் அவரோட முழுப் பெயராம்... ஓகே..ஓகே...

இந்த பரோடா எக்ஸ்பிரஸ் பேட்டிங்லயும் செம புலி. இதை நிரூபிக்கறமாதிரி அப்பப்போ அடி பின்னுவாரு. ஆனா 'தல' இவ்ளோ பெரிய ஆல்ரவுண்டரா ஓவர் நைட்ல மாறி இலங்கை - தென்னாப்பிரிக்க பௌலர்களை பொளந்து கட்டுவார்னு அப்போல்லாம் யாருமே நினைக்கல.

இளமை கல்கி



சினெஸ்தீஷியா!

அனஸ்தீஷியா தெரியும். கத்தியைக் கையில் எடுப்பதற்கு முன்பும் ஆஸ்பத்திரி பில் பிரிண்ட் அவுட் எடுப்பதற்கு முன்பும், அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள நோயாளிகளுக்கு மருத்துவமனையில் இதை அளிப்பார்கள். சினஸ்தீஷியா வேறு. கொஞ்சம் சுவாரசியமானது.

பிரான்ஸ் லிஸ்ட் எனும் இசை மேதையை ஒரு சினஸ்தீஷியர் என்று சொல்லலாம். எந்த இடத்தில் எதை எப்படி வாசிக்க வேண்டும் என்று விரிவாக நோட்ஸ் எழுதிக் கொடுத்து விடுவார். வாசிக்கும்பொழுது ஒரு வயலின்காரர் குறிப்பிட்ட இடத்தில் சற்றுக் கூடுதல் அழுத்தம் கொடுத்துவிட்டால் லிஸ்ட் இப்படிக் கத்துவார். 'மெதுவா மெதுவா ரொம்ப நீலமா வாசிக்கறீங்க. கொஞ்சம் குறைச்சு லைட் பச்சைக்கு கொண்டுவாங்க.'

புரிகிறதா? லிஸ்ட்டைப் பொறுத்த வரையில் அவர் எழுதிக் கொடுத்த நோட்ஸ் அவருடைய மூளையில் பச்சை, நீலம், சிவப்பு என்று பதிவாகியிருக்கிறது. 'டிங் டாங்' என்றால் இளம் ரோஸ். 'டொய்ங் டொய்ங்' என்றால் மயில் கொண்டை நீலம். அதையே

எப்டிப்பா இதெல்லாம்னு கேட்டா "ஹைஹயோ... என்னை ஆல்ரவுண்டர்னு சொல்லாதீங்க... எனக்குக் கூச்சமா இருக்கு..." என்று வெட்கப்படுகிறார் பதான்.



இப்போ சமீபகாலமா இவரை பின்ச் ஹிட்டரா இறக்கி விடறதால எந்த ப்ரஷரும் இல்லாம சும்மா வெளுத்து வாங்கிட்டு சைக்கிள் கேப்ல ரெண்டு மூணு மேன் ஆப் த மேட்சை வேற தட்டிட்டுப் போயிட்டாரு. அதுக்காக பேட்டிங்ல வெளுக்கற மேட்ச்ல பந்தை சும்மாச்சுக்கும் வீசல... விக்கெட்டுகளை வேற மானாவாரியா அள்ளிடறாரு... இதனால நமக்கு ஒரு எக்ஸ்ட்ரா பௌலர் இல்ல பேட்ஸ்மேனை எடுத்துக்க வாய்ப்பிருக்கு.

ஸோ... இர்ஃபானோட இந்தத் தொடர்ச்சியான சக்ஸஸ்ஃபுல் பர்ஃபார்மென்ஸைப் பார்க்கறப்போ இந்தியாவுக்கு ஒரு ஜூனியர் கபில்தேவ் கிடைச்சுட்டார்னு தான் தோணுது. உடனே நாம செய்ய வேண்டியது கவனமுடன் கையாளவும்னு ஸ்டிக்கர் ஒட்டாத குறையா அவரை ரொம்ப ஜாக்கிரதையா யூஸ் பண்ணணுங்கறது தான். என்ன ஜாமி.... (டிராவிட்) காதுல விழுந்துச்சா?

- கலை

'டொய்ங்ங்ங்' என்று நீட்டித்தால் கிளிப்பச்சை.

லிஸ்ட் இது போல் என்றால் வேறொரு சினஸ்தீஷியருக்கு வேறு மாதிரியான புரிதல்கள் இருக்கும். 123 என்று எழுதினால் அதை ஒருவர் ஆனியன் ரோஸ்ட் என்று படிப்பார். 321 என்றால் கெட்டி சட்னி. 213 என்றால் காரம் குறைச்சல். வார்த்தைகள் கூட வெவ்வேறு அர்த்தங்களை அளிக்கும். 'அல்ஜீப்ரா' எனும் வார்த்தையைப் படித்தால் நமக்கு பிரம்பு நினைவுக்கு வரலாம். ஆனால், சம்பந்தப்பட்டவர் அதை மழை என்று புரிந்துகொள்வார்.

ஆராய்ச்சியாளர்களைக் கேட்டால் மூளையில் நடக்கும் சிலபல குழப்பங்களால்தான் இத்தனை அமர்க்களமும் என்கிறார்கள்.

ஆனால் ஒன்று பேப்பர் படிக்கும் பொழுதும், துணி இஸ்திரி போடும் பொழுதும் தன்னுடைய கேர்ள் பிரண்ட் ஞாபகத்தில் தனக்குத் தானே சிரித்துக் கொள்வதற்கும் சினஸ்தீஷியாவுக்கும் துளி சம்பந்தமும் கிடையாது. இதற்கு வேறு ஏதோ பெயர் வைத்திருக்கிறார்கள்.

- மருதன்

கடவுளின்

தாமரைப்பூ போல அவ்வளவு அழகாய் இருந்தது அந்தக் குழந்தை. பொருத்தமாக 'அரவிந்தன்' எனப் பெயரும் சூட்டினார்கள். ஆனால் பெற்றோர்களின் மகிழ்ச்சி, நீண்ட காலம் நீடிக்கவில்லை. குழந்தை, போட்டது போட்டபடியே கிடந்தது. அழைத்தால் திரும்புவதில்லை. சிரிப்போ, விளையாட்டோ எதுவுமில்லை. ஒன்றரை வயதில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் எடுத்துப் பார்க்கிறார்கள். மூளை நார்மலாக இருப்பதாகவே பரிசோதனை முடிவுகள் தெரிவிக்கின்றன. 'பின் ஏன் இப்படி இருக்கிறான்' என தவித்துப் போகும் பெற்றோர், ஏதேதோ வைத்தியம், மந்திரம், தாயத்து என செய்து பார்க்கின்றனர். குழந்தையிடம் எந்த முன்னேற்றமும் இல்லை. வயதாக ஆக அழுகை ஆரம்பித்தது. அதுவும் தொடர் அழுகை. இரவு பத்து மணிக்கு ஆரம்பித்தால், விடியற்காலை நான்கு, ஐந்து மணி வரை நீடிக்கும். பெற்றோர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் அக்கம் பக்கத்தினர்? பல சமயங்களில் சண்டைக்கே வந்து விடுவார்களாம். வேறு வழியே இல்லாமல், மனசைக் கல்லாக்கிக் கொண்டு அருகிலுள்ள மருத்துவரிடம் போய், 'சைக்ளோஃபார்ம்' ஊசியைப் போட்டு தூங்கச் செய்வார்களாம். அதுவும் எப்படி? தொட்டிலில் போட்டு மணிக் கணக்கில் ஆட்டினால்தான் தூக்கம் வருமாம்!



*பவானி ஷங்கர்



• ஷீலா



• சுமதி

ஆனால், இப்போது அரவிந்தன் அழுவதில்லை. அவனுடைய பிரச்னை என்ன எனத் தெரிந்து விட்டதால் அதற்கான சிறப்புச் சிகிச்சை தரப்பட்டிருக்கிறது. அரவிந்தனுக்கு ஹைப்பர் ஆக்டிவிடி மற்றும் ஆட்டிஸம் எனப்படும் மூளைக் குறைபாடு இருப்பது மிகத் தாமதமாகத்தான் பெற்றோர்களுக்கே தெரிய வந்திருக்கிறது. இப்போது அரவிந்தன் பாயிலேயே படுத்துக் கொள்கிறான். அம்மா - அப்பாவை அடையாளம் தெரிகிறது. சிரிக்கிறான். பசி தெரிகிறது. இரண்டொரு வார்த்தைகள் பேசுகிறான். முன்பெல்லாம் அரவிந்தனை



• பயிற்சி தரும் ஸ்வீடன் நாட்டுக் குழுவினர்...

வெளியே கூட்டிச் செல்லவே அஞ்சிய பெற்றோர்கள், வீட்டு விசேஷங்களுக்கும் பொது இடங்களுக்கும் தாராளமாக அழைத்துச் செல்கின்றனர்.

இந்த மாற்றம் எப்படி வந்தது; அதுவும் நான்கே மாதங்களில்...?

'திருச்சி, புத்தூர் எட்டுப்பட்டை பங்களாவில் இயங்கி வரும் மானஸ மித்ரா வித்யா பீடம்தான் இதற்கு முக்கி

யக் காரணம்' என்கின்றனர் அரவிந் தனின் பெற்றோர். அரவிந்தனைப் போலவே, பலதரப்பட்ட மூளை வளர்ச்சி குறைபாடு உள்ள சுமார் நூற்று ஐம்பது குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்து, அவர் களுக்கான வாழ்வியல் பயிற்சிகளை

• சிறப்புக் கவனம்...



• மூளைக்கு வேலை...



கண்மணிகள்!

மனோரீதியாகவும் அறிவியல் பூர்வ மாகவும், மானஸ மித்ரா வித்யா பீடம் அளித்து வருகிறது.

இலங்கை, கண்டி நகரில் வசித்து வரும் சுமதி - சுந்தரமூர்த்தி தம்பதிக்கு ஜவுளி வியாபாரம். கல்யாணமாகி பதினொரு வருஷங்களாகியும் மகப்பேறு இல்லாமல் போகவே, 2001-ல் கொழும்பு, மதர் தெரஸா இல்லத்தின் மூலம், பிறந்து ஒரு வாரமே ஆன ஆண் சிசுவைத் தத் தெடுத்து வளர்க்கின்றனர். மாதங்கள் ஆக ஆக அத்தம்பதிக்கு கடும் அதிர்ச்சி. பேச்சு இல்லை; விளையாட்டு இல்லை. சிலை யாகக் கிடக்கிறது குழந்தை. மழலைப் பேச்சு கேட்க ஏங்கிக் கொண்டிருந்த அவர்கள், மலைத்துப் போகிறார்கள். இதற்கிடையே, அவர்களுக்கு இயல்பான தாம்பத்திய உறவில் பெண் குழந்தை ஒன்று பிறந்து விடுகிறது. தத்துப் பிள்ளையின் குறைபாடு தெரிந்தும், அதைக் கைவிட்டு விட மனமில்லை. வைத்தியம் பார்க்க ஆரம்பிக் கிறார்கள். மூன்று வருடங்கள் எங்கெங்கோ அலைந்து திரிந்து எதுவும் பலனளிக்காமல், இறுதி யில் உறவுக்காரர் ஒருவரின் ஆலோசனையின் பேரில் மானஸ மித்ரா வித்யா பீடத் துக்கு வந்து சேருகிறார்கள்.

"எங்களைத் தெய்வம் கை விடலைங்க! மூணே மாசத்துல நல்ல முன்னேற்றம் தெரிகிறது; நல்லா நடக்கிறான். விளை யாடறான், பேச்சே வராத குழந்தை, என்னைப் பார்த்து 'அம்மா'ங்கிறான்.'' 'எங்கே... அம்மா சொல்லு... ராஜா அம்மா சொல்லு...' என்று கெஞ்ச, அந்தக் குழந்தை யும் 'அம்மா' என்று சொல்லவே, சுமதியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்... மகனை வாரி அணைத்து முத்தமழை பொழிகிறார்.

சிறப்பு குழந்தைகளுக்கென இருக்கும் டிஸ்லெக்ஸியா, ஆட்டிஸ்டிக் ஸ்பெக்ட்ரம் டிஸ்ஆர்டர், ஹைபர் ஆக்டிவிடி போன்ற குறைபாடுகளை அறிந்து

அவற்றுக்கு நிவாரணம் அளிக்கும் விதமாகச் சர்வதேச அளவில் தேர்ச்சி பெற்ற உளவியல் அறிஞர்களின் நேர் முகப் பயிற்சிகளும் மானஸ மித்ரா வித்யா பீடத்தில் நடைபெற்று வருகிறது. மூளைச் செயல்பாடு, நினைவாற்றல், கூர்ந்து கவனித்தல், பேச்சு மொழித்திறன் போன்ற வற்றுக்கு ஆயுர்வேத மருத்துவ சிகிச் சையும் தரப்படுகிறது.


குழந்தைகளுடன் தாய்மை உணர்வுடன் பழகி வரும் முப்பது ஆசிரி யைகள், தொழில்நுட்ப உதவியாளர்கள், வித்யா பீடத்தின் தனிச்சிறப்பு. பரந்த நிலப்பரப்பில் அமைந்த உள் மற்றும் வெளி அரங்கங்களுடன் குழந்தைகள் விளையாட சிறப்பான வசதிகள். பெற் றோர்களுக்கும் தனிப் பயிற்சிகள், யோகா, பிராணவாயு அறை, மூலிகைகள் மூலம் தூம சிகிச்சை என பல சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன. இதனால் மானஸ மித்ரா வித்யா பீடம் மற்றும் டயக்னாஸ்டிக் அஸெஸ்மென்ட் அண்ட் ரிசர்ச் சென்ட ருக்கு ISO 9001 உலகத்தரச் சான்றிதழ் கிடைத்துள்ளது.

மானஸ மித்ரா வித்யா பீடத்தின் இயக்குனர் மற்றும் முதல்வராகச் செயல்பட்டு வருபவர் செல்வி ஷீலா. எம்.ஏ. எம்ஃபில், தேர்ச்சி பெற்றவர், சிறப்புக் குழந்தைகளின் வாழ்வில் ஒளி யேற்ற வேண்டியே எம்.ஏ. சைக்காலஜி பயின்றவர். நெதர்லாந்து நாட்டின் மனோதத்துவ அறிஞர்களின் வழிகாட்டு தலுடன் ஆறு வருடம் சிறப்புப் பயிற்சி பெற்றவர். நெதர்லாந்தின் ஃபாண்டிஸ் பல்கலைக்கழகத்தில் சைகாலஜிஸ்ட்டாக பயிற்சி பெற்றவர்.

“சிறப்புக் குழந்தைகளையும் மற்றவர் களைப் போல செயல்பட வைக்க வேண்டும் என்பதே என் நோக்கம். இதற் காகவே நான் திருமணம் செய்து கொள் ளாமல் பணியாற்றி வருகிறேன்!'' என்கிறார் ஷீலா.

“சிறப்புக் குழந்தைகள் முதலில் தனக் குத்தானே சுமையாக இருப்பார்கள். அடுத்து பெற்றோர்களுக்கு மிகுந்த கவலை தருவதுடன், தவிர்க்கவே முடியாத ஒரு பாரமாகவும் ஆகிவிடுவார்கள். அதை யடுத்து இந்தச் சமூகத்துக்கு ஒரு அவலம் நிறைந்த காட்சிப் பொருளாகவும், சமூ கத்தினரின் இம்சைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்பந்தங்களுக்கும் ஆளாகிப் போவார்கள். இந்த மூன்று நிலைகளிலி ருந்தும் அவர்களை விடுவித்து, ஒவ்வொரு சிறப்புக் குழந்தையையும் காலப்போக்கில் சுயமாகத் தனித்து நின்று செயல்பட வைக்கவேண்டும் என்பதே மானஸமித்ரா வித்யா பீடத்தின் முக்கிய நோக்கம்!'' எனக் கூறுகிறார் மானஸமித்ரா வித்யா பீடம் மற்றும் விமோசனா நிறுவனங் களின் நிர்வாக இயக்குனர் பவானி சங்கர்.

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



கோட்டு, சூட்டு, விவசாயி!

அமிதாப் ஒரு சூப்பர் ஸ்டார் என்பது பரம உண்மை. ஆனால், தற்போது அமிதாப், 'தான் ஒரு விவசாயி' என்பதை நிரூபிக்குமாறு சவால் விட்டிருக்கிறது புனே மாநகராட்சி. 2000-ம் ஆண்டு பிக் பி லோனாவாலாவில் சுமார் இருபது ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறார். அது ஒரு விவசாய நிலம். நிலச் சட்டப்படி சாகுபடி நிலத்தை வாங்குவதற்கு விவசாயிகளுக்கு மாத்திரமே உரிமை இருக்கிறதாம். கௌன்பனேகா க்ரோர்பதியின் முன் வைக்கப் பட்டிருக்கும் கேள்வி, கௌன் ஹை விவசாயி?

- எல்.எஸ்

'மகா'விழா!

கோவையில் தொழிலதிபர் நா.மகாலிங்கம் விழா ஏதும் நடத்தினால் கூட்டம் திரண்டுவிடுகிறது. நம்பாதவர்கள் நவம்பர் 20-ம் தேதி, அவிநாசிலிங்கம் பல்கலைக் கழக வளாகத்துக்கு வந்திருந்தால் அதை உணர்ந்திருப்பார்கள்.

காந்திஜியின் கடிதங்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள், கருத்துக்கள் இவற்றை ஐம்பது வருடங்களுக்கு முன் கல்வி அமைச்சராக இருந்த அவிநாசிலிங்கம் அவர்கள் தொகுத்திருந்தார். இந்த இருபது தொகுதிகளையும் இரண்டாவது முறையாக மலிவு விலைப் பதிப்பாக, கோவையில் விழா எடுத்து வெளியிட்டார் நா. மகாலிங்கம்.

மாவட்ட ஆட்சியர் கோசலராமனிடமிருந்து, கோவை மேற்கு மண்டல காவல் துறைத் தலைவர் ஆர். சுப்பிரமணியன் நூல்களைப் பெற்றுக் கொண்டார். (தன் அலுவலக வரவேற்பறையில், தன்னைச் சந்திக்க வருகிறவர்கள் காத்திருக்கும் நேரத்தில், படித்துப் பார்க்கட்டும் என்று அடுக்கி வைத்துவிட்டு அறிவிப்பும் செய்துவிட்டார்!)

பிறகு, ஒரு சின்ன காந்தியக் கருத்தரங்கம். கிருஷ்ணராஜ் வாணவராயர் துவக்கி வைக்க, பாரதியார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையில், கவிஞர் மரபின் மைந்தர் ம.முத்தையாவும், முனைவர் சிலம்பொலி செல்லப்பனும் உரை நிகழ்த்தினார்கள். (சென்னைப் பேச்சாளர்களுக்கு இந்த இளைஞர் முத்தையா நிச்சயம் ஒரு சவால்!)

பிற்பகலில் இதன் இரண்டாம் பகுதி: டாக்டர் சரோஜா பிரபாகர் (அவிநாசிலிங்கம் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) துவக்கி வைக்க, காந்தி நிகேதன் ஆசிரம முனைவர் பால்ராஜ், திருச்சி கலைக் காவேரி கல்லூரி முனைவர் மார்கரட் பாஸ்டின், கோவை காந்தி ஆசிரம டாக்டர் வினு அறம், கோவை நன்னெறிக் கழகத் தலைவர் முனைவர் குப்புசாமி ஆகியோர் பங்கெடுத்துக் கொண்டனர்.



மாலையில் 'கல்கி'யின் சிறப்பு வெளியீடான 'வைராக்கியத்தின் வைர விழா' நிகழ்ச்சிக்கும் காலை போலவே கூட்டம்! கயிலை மாமுனிவர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் இதழை வெளியிட்டுப் பேசியபோது நா.ம.வுக்கு மட்டுமல்ல, நமக்கும் பெருமையாக இருந்தது. மறைத்திரு மரிய இருதயநாதன், ஹாஜி அப்துல் அஜீஸ் ஆலிம் நூரியா, சீக்கியர் சங்கத் தலைவர் அமர்ஜித் சிங் என்று பல சமயத் தலைவர்கள் வாழ்த்த, உறவினர் டாக்டர் முருகையன் இலக்கியத் தரமாக உரை நிகழ்த்தினார்.

தம் மணவிழா நாளின் 60-ம் ஆண்டைக் கொண்டாடும் நாயகர் நா.ம. பேசும்போது, "பிரிந்துவிடுவது சுலபம்; ஒன்றாக இருப்பது சிரமம்தான். ஆனால் இருபாலாரும் சிந்திக்க வேண்டும். அபிப்ராய பேதம் இருந்தால், சாவகாசமாகப் பேசி முடிவு செய்ய வேண்டும்" என்றார்.

ஒரு முழு ஞாயிற்றுக் கிழமையையும் ஒரு தனி மனிதருக்காகக் ஒதுக்கிய பண்பை கோவை நகர மக்கள் தவிர வேறு எந்த மாவட்டத்திலும் காண முடியும் என்று நமக்குத் தோன்றவில்லை!

- சாருகேசி


கிறிஸ்துமஸ்
டிசம்பர் 2005
கேக்குகள்
அகல் விளக்கு
அலங்காரம்
கார்த்திகை
பட்சணங்கள்
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்



MERRY CHRISTMAS
மனதில் இழையோடும்
பாசத்தை
சாரதாஸ் பட்டோடு
பரிமாறிக் கொள்வோம்
SR 205
சாரதாஸ்
சுபமுகூர்த்த பட்டுப்புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
தன்பில்டிங், 827, மவுண்ட் ரோடு, சென்னை - 2. போன் - 2852117
45, என்.எஸ்.பி. ரோடு, திருச்சி - 2. போன் - 2702077

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka